
தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

ஏப்பிரல் 2004



சில அடிப்படைச் செய்திகள்



துயர்தின்னும்
சுவர்கள் தகர்ந்தன
நிலவின் தோணியில் ஏறி
நீந்திக் கடக்கவும்
ஆகாயம் சொரியும்
அமுதப் பாலை பருகவுமான
கதவுகளும் திறவுண்டன
விடுதலை வெளியோ
நீல நிறமான விளக்குகளை
எல்லோருக்குமாக ஏற்றுகிறது

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அட்டைப்படக்கவிதை
தா.பாலகணேசன்



மாபெரும் தாகம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எரிமலை

உள்ளே...

## கட்டுரைகள்


இன்றொரு காலம் - ஞானரதன் பக்கம் - 08

நோர்வேப் பழங்குடியினர் பெற்ற சுயாட்சி - கலாநிதி க.சோமாஸ்கந்தன் பக்கம் - 14

காடுகளைக் கட்டுப்படுத்திய காளிகள் - நர்மதா பக்கம் - 40

கெட்ட போரிடும் உலகத்தை வேருடன் அழிப்போம் - கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் பக்கம் - 48


## அணையாத தீபங்கள்


கப்டன் இன்பா பக்கம் - 46

கப்டன் தமிழ்ப்பிரியா பக்கம் - 47


## உண்மைப் பதிவு


ஆணிவேர் - மணலாறு விஜயன் பக்கம் -36


## கவிதை


சிங்கள தமிழ்க் கலைக்கூடல் அல்லது தோழமைத்துவத்தின் பொழுது - சஞ்ஜய வொன்சேகா பக்கம் - 06

தொலைபேசி உரையாடல் - வோல் ஸோயிங்க பக்கம் - 19

நிறங்கள் பெயர்க்கப்பட்ட வண்ணத்துப் பூச்சிகள் தானா -விஷ்ணு பக்கம் - 24

தா.பாலகணேசன் கவிதைகள் பக்கம் - 28

ஊர் மீண்டவனின் பாடல் - முல்லைக் கமல் பக்கம் - 35

என் பள்ளிக்கூடம் பற்றிய சிறுகுறிப்பு - கருணை ரவி பக்கம் - 39

சமாதானம் - தீப்பொறி பக்கம் - 51


## சிறுகதை


தீப்பிடித்த நினைவோரம் பாயும் ஆறு - முல்லைக்கோணேஸ் பக்கம் - 10

அடிப்படைகள் - தூயவன் பக்கம் - 16

அவர்களுக்காக அழுகிறோம் - சூரியநிலா பக்கம் - 32



## தொகுப்பு


நினைவுக்குறிப்பு பக்கம் - 52

மீள்பார்வை பக்கம் - 53

பதிவுகள் பக்கம் - 54


இதழியல் சில அடிப்படைச் செய்திகள்



20

தீச்சுடர் – 04




44 பிரகாசமான எதிர்காலத்துக்காகத் தம்மைத் தயார்ப்படுத்த வேண்டிய பாலஸ்தீனப் பெண்கள்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடமுள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியுமென்பது நிச்சயம்

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு **வே.பிரபாகரன்** அவர்க...



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

இருபத்திமூன்றாம் ஆண்டு
ஏப்பிரல்
2004

திருவள்ளுவர் ஆண்டு 2035

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 01 - 43 58 11 42
Fax: 01 - 43 58 11 91
e.mail:editor@erimalai.com
www.erimalai.com

# தலைவாசல்

## மைல்கற்களும் திருப்புமுனைகளும்

நாம் வாழும் காலம் எமக்கு மிகவும் முக்கியமாகவுள்ளது. இது ஒவ்வொருவரின் சுயமதிப்பீடாகவும் இடம்பெறுகின்றது. ஒவ்வொருவரும் தனது வாழ்நாளில் வரலாற்றுடன் வாழவேண்டிய கட்டாயம் இருக்கின்றது. நாம் வரலாற்றை உருவாக்குகின்றோம். அதேசமயத்தில் நாமே வரலாறாகவும் அமைகிறோம். எம்மிடமிருந்து வரலாறு என்ன எதிர்பார்க்கிறது என்பதை ஆழமாகச் சிந்தித்துத் தீர்மானிக்கவேண்டும். அதற்கமைய வாழவேண்டும், செயற்படவேண்டும்.

ஈழத்தமிழன் உலகின் எப்பாகத்தில் வாழ்ந்தாலும் அவன் எதிர்நோக்கும் வாழ்க்கைப் பிரச்சினை அடிப்படையில் ஒரேமாதிரியாக இருக்கின்றது.வாழவேண்டுமென்ற உந்துதலுடன் இனம் பற்றிய எதிர்பார்ப்புக்களையும் ஈழத் தமிழ்ப் பிறவிகள் நிறைவேற்ற வேண்டியவர்களாக உள்ளனர். எமது கடமைகளில் இருந்து விலகி வாழ இயலாது. ஆண், பெண், சிறுவர் யாராய் இருந்தாலும் கடமைகளை நிறைவேற்ற வேண்டியவர்களாக உள்ளனர். கடமைகளை நிறைவேற்றும்போது வாழ்வில் நிறைவு கிடைக்கின்றது.

ஒவ்வொரு ஈழத்தமிழ் மகனும் தாயகத்தின் கடமைகளை நிறைவேற்றும்போது வரலாறு பிறக்கின்றது. வரலாற்றை அடையாளமிடும் மைல்கற்களாகவும் திருப்புமுனைகளாகவும் ஈழத் தமிழன் நிறைவேற்றும் கடமைகள் அமைகின்றன. இந்த வரிகளை ஈழத் தமிழனின் வாழ்க்கைச் சாசனமாகக் கொள்ளலாம்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தூது

யாழ்ப்பாணம்.

அன்பின் பாலன்,

சின்ன வயதில் நானும் நீயும் புளியடி வளவில் மரம் நிறைத்து பூத்திருக்கும் புளியம் பூக்களை ஆய்ந்து தின்னும் போது ஒரு பறவையைச் சந்திப்போம். நினைவிருக்கிறதா?

அழகிய கொண்டை; குன்றுமணிக் கண்கள் பஞ்சுபோன்ற இறகுகள் போர்த்த உடல், கிளைகளில் அரையும் நீண்ட வால் புளியங்கிளைகளில் தாவித்தாவி அது பறக்கும்போது தேவதைகள் அசைவது போலத் தோற்றங்



காட்டுமே! அதன் கொண்டையை முடிமயிர்களை அள்ளிச் செருகி அமைத்த நமது பொட்டு மாமியின் கொண்டைக்கு ஒப்பிடுவோமே! அந்தப் பறவையைக் காணமுடியவில்லை. அதைக் காண மனம் ஆவல்படுகிறது. கூடவே உன்னையும்.

நீயும் பனி நீச்சல் தேசத்துக்குச் சென்றுவிட்டாய். சீசன் தவறாமல் சைபீரிய வாத்துக்கள் வந்து போகின்றன. உன்னையும் அந்தப் பறவைகளையும்தான் காணமுடியவில்லை. உனது முகம் அந்தப் பறவையின் குன்றுமணிக் கண்களூடாக ஒளிர்கிறது.

சின்னஞ் சிறு வயதில் நாம் பழகிய அழகிய உலகம் நம்மிடமிருந்து அந்நியப்பட்டுவிட்டது. மழையாய் புற்கள் சிலிர்த்திருக்கும் காலங்களில் கஞ்சாங்கோரைப் பூண்டுகளைப் பிடியாய்க் கட்டி, வண்ணத்துப்பூச்சி பிடிப்போமே! பசும்புல்லுப் படர்ந்த இடங்களில் குழிமுயல் பிடிக்க அலைவோமே! மாலையில் தொடங்கி பொழுது மங்கும்வரை கிளித்தட்டு விளையாடுவோமே!

எட்டுமூலை, கொக்கன், பிராந்தன் எனப் போட்டிக்குப் பட்டம் விட்டு மகிழ்வோமே!

மழை பெய்யும் நாட்களில் அண்ணாச்சி வீட்டில் மரவள்ளிக் கிழங்கு சுட்டு, பச்சடியுடன் உண்போமே!

இப்படி இப்படி.....

இந்த வாழ்க்கை இல்லாது போய்விட்டது. யுத்தம் நம்மைப் பிரித்தது. மட்டுமல்ல, நமது வாழ்வைச் சிதிலமாக்கியது மட்டுமல்ல, அதன் புறநிலைக் காரணிகள் இத்தகைய ஆனந்தமான வாழ்வையும் அழித்துவிட்டது. அவை நினைவுத் தடத்தில் மட்டுமே நிற்கின்றன. இந்த வாழக்கைக்கு என்னால் திரும்ப முடியவில்லை எனில், நீயோ எவ் வாறிருப்பாய்?

நமது பிள்ளைகள் காணும் உலகமும். பழகும் உலகமும் வேறானவை.

தகவல் யுகமாய்ப் பரந்து விசாலமான – உயிர்ப்பற்றதொரு காலத்தில் நமது பிள்ளைகள், இளைய சகோதரர்கள் உள்ளனர். நாங்கள் கூட இந்தப் புதிய வாழ்வுக்குள் நம்மைத் தொலைத்துவிட்டோம். தொலைக்காட்சி அற்புத சாதனந்தான். கணனி மகோன்னதச் சாதனந்தான். இணையத்தளம் ஒப்பற்ற வலைப் பின்னல்தான். உலகில் தகவல் தொடர்பு ஊடகங்கள், சாதனங்களே பெரும்பாலும் எல்லாக் காரியங்களையும் ஆற்றுகின்றன. ஆற்றுவதற்குத் துணை புரிகின்றன.

பூடகமான, அரூபமான, உயிரோட்டமில்லாத, செவியும் கண்ணுமே சுவையுணரும் விதமான மகிழ்விலேயே நமது





www.tamileelamarchive.com

பிள்ளைகள், இளைய சகோதரர்கள், நம்மைப் போன்றவர்கள் திருப்தியடைகிறார்கள்.

அவர்களது பொழுதைத் தொலைக்காட்சிகள் தின்று தீர்க்கின்றன. திரைப்படங்களும், துள்ளிசைப் பாடல்களும் தரையில் கால் பரவாக் கற்பனை உலகில் அவர்களைத் தள்ளி வீழ்த்துகின்றன. உலகத்தில் எங்கோ மூலையில் நடக்கும் 'கிரிக்கெற்றை' தொலைக்காட்சியில் தினமும் பார்த்து, அவற்றை விமர்சித்து, விவாதித்து திருப்தி காண்கின்றனர் இவர்கள். நடிகர்களும், கிரிக்கெட் வீரர்களுமே பலரது கடவுளர்களாகிவிட்டனர்.

ஸ்பெயினிலோ, போர்த்துக்கல்லிலோ நடைபெறும் பட்டம் ஏற்றும் போட்டிகளைப் பார்த்து இரசிக்கிறார்கள். முயல்களையும் அழகிய பறவைகளையும் வண்ணத்துப் பூச்சிகளையும் 'பாடநூல்' கண்ணோட்டத்துடனேயே பலரால் பார்க்க முடிகிறது.

பாடசாலை –ரியூசன்– தொலைக்காட்சி –ரியூசன், தொலைக்காட்சி –நித்திரை என ஒரு சட்டக வாழ்வுக்குள் அலைக்கழியும் பரிதாபமான வாழ்க்கையே நமது சிறார்களுக்குக் கிடைத்துள்ளது.

நான் என் வாழ்க்கைபற்றி எனது பிள்ளைகளுக்கு எப்படி விளக்குவது என்று புரியாமல் தவிக்கிறேன். அந்தப் பறவையை, உன்னை, நமது பாலப் பருவத்தை கனவில்தான் காண்பேனா?

இந்தச் சட்டக வாழ்வு இப்போதுதான் வாசல்கள் திறக்கப்பட்ட வன்னிக்குள்ளும் மெல்ல மெல்ல தலைதூக்கியுள்ளது. போதிய பொருளாதார அடிப்படைகளை வன்னி நிலம் இன்னும் பெற்றதாக இல்லை என்ற போதிலும் அங்கே தொலைக்காட்சிகளின் பாவனை சொற்பநேர மின் விநியோகத்திலும் ஆரம்பித்து விட்டது. வசதிபடைத்தவர்கள் ஜெனரேட்டர்களை உபயோகித்து தொலைக்காட்சி சணல்களுக்குள் மூழ்கிப்போகிறார்கள்.



இந்த சமாதானத்துக்கான காலத்தில் ஓரளவு நிம்மதி தரக்கூடிய ஒரு மாற்றம் வன்னியில் சில குளங்கள் புனரமைக்கப்பட்டிருப்பதுதான். இது ஒப்பீட்டளவில் சற்றுக் கூடிய நீரைத் தேக்கி வைக்கக் கூடிய சாதகத் தன்மையை ஏற்படுத்தியுள்ளது.

ஒக்டோபர் மாதம் மன்னாரில் நடந்த பொங்கு தமிழுக்குப் போய் வந்தேன். மிக எழுச்சியுடன் நடந்தேறியது பற்றி உனக்கு தனியாக பிறிதொரு மடலில் எழுதுகிறேன்.

வவுனியாவில் இருந்து சுதாவின் கடிதம் நேற்று வந்தது. அவன் முதன் முறையாக வவுனியாவில் தமிழர்களுக்கு எதிராகச் செயற்பட்ட சிறீலங்கா படைக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை பற்றி சிலாகித்து இருந்தான். 1996ல் மூன்று அப்பாவித் தமிழர்களை வெட்டிக் கொன்ற சிப்பாய்க்கு அளிக்கப்பட்ட தீர்ப்பு தொடர்ந்தும் மாற்றம் இல்லாமல் இருக்க வேண்டும் என அவன் ஆதங்கப்பட்டிருந்தான் கடிதத்தில், சிறீலங்காவின் நீதித்துறை ஒருபோதும் தமிழர்களுக்குச் சாதகமான மிகத் திருப்திகரமான சரியான தீர்ப்பினைத் தரமாட்டாது என்ற போதிலும், இதுபோன்ற தீர்ப்புக்கள் சற்றேனும் சிப்பாய்களுக்குத் தயக்கத்தை ஏற்படுத்தலாம் என்பதால்தான் இதை வரவேற்பதாக எழுதியிருந்தான்.

ஆயினும். மட்டக்களப்பு, அம்பாறை உட்பட கிழக்கில் சிறீலங்காப் படைகள் மேற்கொண்ட இது போன்ற பல நூறு படுகொலைகள் விடயத்தில் சிறீலங்காவின் நீதித்துறை காட்டும் கனத்த மௌனம் தாமதம் என்பன இந்தத் தீர்ப்பை அர்த்தமற்றதாக்குகிறது அல்லவா?

இயந்திரமயமான வேலைப் பளுக்களிடையேயும் நான் கிளர்த்திய விடயங்கள் தொடர்பாய் சில வரிகளாவது எழுதி மடல் போடுவாய் என நினைக்கிறேன்.

நட்புடன்
எஸ்.எல் குமரன்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் 2003 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 29,30 ஆம் திகதிகளில் 'ஹிறு' குழுவினரால் நடாத்தப்பட்ட சிங்கள - தமிழ்க் கலைக்கூடலானது சிங்கள - தமிழ்க்கலைஞர்களுக் கிடையிலான பரஸ்பர உறவுகளை வலியுறுத்தப் பட்ட நிகழ்வாகவே அமைந்திருந்தது. அதே நேரம் சிங்களக் கலைஞர்கள், புத்திசீவிகள் மட்டத்தில் இனவாதத்திற்கு எதிராகவும் சமூகம் மீதான கலை ஞர்களினதும் புத்திசீவிகளினதும் பங்களிப்பு, கட மைப்பாடு தொடர்பாக விழிப்புணர்வு தோன்று வதற்கும் காரணமாகியது. அந்தக்கலைக்கூடல் நிகழ்ச்சியை தடுக்கும் நோக்கத்தில் 'சிகல உறுமய' என்ற அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்து பல கட்டுரைகள், கவிதைகள் சிங்களப் பத்திரிகைகளில் வெளிவந்தன. கீழ்வரும் இரு கவிதைகள் 2003.11.16 ஆம் திகதி 'ராவய' வார இதழில் வெளிவந்தவை யாகும்.

## 2003–10–29

*பனையோலைகளை நிழலாக்கிக் கொண்டு*
*காயப்பட்ட இதயத்துடன்*
*புதிய நகரசபை மண்டபத்திற்கு வந்தீர்கள்*
*நீங்கள்*

*கண்ணீரைத் துடைத்துக்கொண்டு*
*உங்களைப் பார்க்கும் ஆவலுடன்*
*புதிய நகரசபை மண்டபத்திற்கு வந்தவன்*
*நான்*

*காக்... காக்... என்று கத்திக்கொண்டு*
*மலம் கழித்தன காகங்கள்.*
*பொன்னான சொற்களைத் தடுக்க*
*இரைச்சலிட்டன காகங்கள்*

**சமிந்த கிறிசாந்த குமார**

# சிங்கள தமிழ்க் கலைகூடல் அல்லது தோழமைத்துவத்தின் பொழுது

**தமிழாக்கம்: சாமிநாதன் விமல்**

உனது மாமிசத்தை
தின்னும் நோக்கில் வந்த
காட்டுமிராண்டிகளுக்கு
நான் தருகிறேன்
துண்டு துண்டாக கிழித்து
எனது இதயத்தை

உனதா அல்லது எனதா என்று
வேறுபாடு தெரியாது,
அதுகளின் நாக்குகளுக்கும் பற்களுக்கும்

உனது குருதியை எடுக்க
கொண்டு வந்த தடிகளுக்கு
நான் எனது தலையை கொடுக்கிறேன்.
உனது என்றால் என்ன
எனது என்றால் என்ன
அதுகளுக்கு வேண்டியது குருதி மாத்திரமே.

கண்டேன் நான்
நித்திய நிரந்தர
தோழமைத்துவத்தின் அபிலாசை
சிவப்பு நிறத்தில்
முத்தமிடுவதை
புதிய நகரசபை மண்டபத்தின் தரையை.

என்னால் எப்படித்தான்
பார்த்துக்கொண்டு இருக்க முடியும்
நீ செத்து விழுவதை
எனது முற்றத்தில்.

புரிந்துகொண்டேன் நான்
கௌரவமான மனித வாழ்க்கைக்காக
குரலெழுப்பும்
உனக்காக
என்னால் செய்யவேண்டிய
போராட்ட மொன்றும் உண்டு என்பதை
கடைசியில்
எனதும் உனதும் ஆத்மாக்களை
ஒரே சிலுவையில் வைத்து
ஆணியடிக்கப்படக் கூடும்.

ஆயினும்
சிலுவையில் இருந்து
சொல்லி இருந்தது போல
"தெரியாமல் செய்யும் பாவங்களுக்காக
அதுகளை மன்னித்துக்கொள்"
என்று
நான் ஒரு போதும் சொல்ல மாட்டேன்.

தோழர்களே,
எழுந்திருங்கள்!
இது
குருதிக் குட்டைக்குள்
பிணங்களை குவிக்கும்
காட்டுமிராண்டிகளின் கனவை
தோற்கடிக்க வேண்டிய
தருணமாகும்.

**சஞ்ஜய வொன்சேகா**


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சகோதரர்களைத் தேடிய பயணம்

சிங்களத்தில்: அஜித் பரகும் ஜயசிங்க
தமிழாக்கம்: சாமிநாதன் விமல்



தாயே!
நாங்கள்
சுதந்திர இலங்கையில்
சிங்கள பௌத்த இனத்திலிருந்து
விலகிவிட்டோம்.


பௌத்த பிக்குவே!
தமிழருடைய குருதியோ மாமிசமோ இங்கு இல்லை.
மரணச் சடங்குக்குக்கூட
நீங்கள் வராவிட்டாலும் பரவாயில்லை.

வெள்ளையரின் மலந்துடைக்கப்பட்ட காகிதங்களில்
எழுதப்பட்ட
நாற்றமடிக்கும் வரலாற்றினை அனுப்புவோம்
மலக் கூடங்களுக்கு மீண்டும்.

தோழர்களே வருக!
புதைக்கப்பட்ட வரலாற்றினை
நாங்கள் தோண்டி எடுப்போம்.
சிங்கக் கொடியில் இல்லாத
சிங்களத்துவம் ஒன்று உண்டு.
சிங்களத் தோழர்களே வருக!
நாங்கள் அதனைத் தேடிச் செல்வோம்.

சிங்கத்தால் மூடி அடைக்கப்பட்ட
கற்குகையின் கதவை நாங்களே திறப்போம்.
இவர்கள் உங்களுடைய
தாய்மார்கள்
தங்கைமார்கள்.
மனைவியாக எடுக்கக் கூடாது.

இது உங்களுடைய மூதாதைகளின்
கதைகள் புதையுண்ட நிலமாகும்.
மற்றவர்களுக்கும் அவ்வாறான நிலங்கள் உண்டு.
நீங்கள்
உங்களுடைய நிலத்தை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
மற்றவர்களுடைய நிலங்கள் மீது தலையிடவேண்டாம்
சகோதர மனிதர்களுடைய வியர்வை மணத்தை உறிஞ்சும்
இந்தக் காற்று வீசுகிறது.
மறைந்துகொள்ளுங்கள்!
இராணுவம் எதிர்காலத்தை எரிக்கத்தான் வருகிறது.
அதோ பார் சூரியன்!
எங்களுக்கு மாத்திரமல்ல. முழு உலகத்துக்கும்
இதோ இந்த ஆறு
ஒரே ஒரு தண்ணீராகத்தான் பாய்கின்றது.
சிங்கள சகோதரர்களே வாருங்கள் போவோம்.
நாங்கள்
சகோதரர்களைத்தேடி.






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



**அண்மையில் ஒரு சா வீட்டுக்குப் போயிருந்தேன். யாழ் குடா நாட்டில்தான். இறந்தவர் வயோதிபர். வயது எண்பதுக்கு மேல் மதிக்கலாம். வீடியோக் கமரா நிகழ்வுகளை ஓடி ஓடிப் பதிவு செய்வதை கமரா முகப்பில் பளிச்சிடும் சிவப்பு ஒளி மினுக்கம் காட்டியது. வீடியோப் படம் பிடிக்கிறார்கள் என அறிந்தோ என்னவோ கிரியை நடக்கத் தயாராகும் இடத்தை நோக்கி அழுகை, ஒப்பாரியோடு பெண்கள் வந்து பிணத்தைச் சுற்றி நிற்கிறார்கள். நெருங்கிய உறவுக்காரர்கள் போலிருக்கிறது.**



**ஞானரதன்**

# இன்றொரு காலம்

சற்று முன்பாக வீட்டு முகப்பில் கட்டிலில் குத்துவிளக்கு சகிதம் கிடத்தப்பட்டிருந்த உடலைச் சுற்றியிருந்து ஊர்ப் புதினங்கள் பேசிக்கொண்டிருந்தவர்கள்தான் இவர்கள். இப்பொழுது நூல்கள் கட்டிய தேங்காய், கும்பம், பூசைப்பொருட்கள் என்று அண்மைக் காட்சிகளில் வீடியோக்காரர் அக்கறை செலுத்தி, பின்னர் அழுகின்ற முகங்களையும் அண்மைக்காட்சிகளாகப் பதிவுசெய்து கொண்டார். இவ்வளவும் போதும், வெளிநாட்டு உறவுகளுக்குக் காட்டுவதற்கு. கிழவரின் பிள்ளைகள் மூவர் வெளிநாட்டில். ஆயிரம் ரூபா நோட்டுக் கற்றைகளோடு அங்குமிங்கும் ஓடி ஏதோ தான்தான் செலவுகளைக் கவனிப்பது போல் மேற்பார்வை செய்யும் ஒருவர் இலேசாக இடைவெளி பார்த்து வெளியே போய் ஒரு காலாவது அடித்திருப்பார் போலிருக்கிறது. இனி இந்தப்படம் போய் மேற்குலக நகரமொன்றில் அமைந்துள்ள வீடொன்றில் கிழவரை மீண்டும் மரணச் சடங்கிற்காகப் படுக்க வைக்கும்.

இப்பொழுது ஊரில் அடிக்கடி சா வீடுகள்தான். வயது போனவர்கள் பொத்துப் பொத்தென்று போய்க்கொண்டிருக்கிறார்கள். எஞ்சிய வயோதிபர்கள் நாட்களை எண்ணிக்கொண்டும், இறந்த காலப் பெருமைகளை மீட்டி அதில் வாழ்ந்துகொண்டும் போகிற போக்கையே காண முடிகின்றது. அப்பொழுது இளவட்டங்களே ஊரில் இல்லையா என்று எண்ணிவிடாதீர்கள். இருக்கிறார்கள். பிற தேசங்களுக்குப் போகக் கூடியவர்கள் பலர் போய்விட்டார்கள். ஊரில் கோவில்கள் பல புனரமைக்கப்பட்டு வர்ணப் பூச்சுகளோடு விளங்குகின்றன. ஆனால் திருவிழாக் காலங்களில் சுவாமி தூக்குவதற்கு இளவட்டங்கள் இல்லாமல் வயோதிபர்கள் கஸ்டப்படுவதாகப் பேசிக் கொள்கின்றனர். டியூட்டறிகள், கொம்பியூட்டர் வகுப்புக்கள், வேறுபடிப்புகள் என்று தோள் பைகளுடன் பஸ்ஸிலும், சைக்கிளிலும் அலைந்து திரியும் இளவட்டங்களும் ஏதோ வருங்காலக் கனவுகளோடு நாட்களைக் கழிக்கின்றனர். இவர்கள் போக, டொலராகவும், ஸ்ரேலிங் பவுண்சாகவும், மார்க்காகவும், யூரோவாகவும் கைகளுக்கு வரும் இளவட்டங்களும் இருக்கிறார்கள். இவர்களின் தோற்றமே வித்தியாசமானது. திரைப்படக் கதாநாயகர்களாகத் தம்மைக் கற்பனை பண்ணுகிற மனோபாவம் தெரியும். ஒற்றைக் காலில் கடுக்கன் போடும் ரகமும் உண்டு. 'அப்பாஸ்' தலை முடி வெட்டு, 'டைட்டானிக்' கதா நாயகன் முடிவெட்டு என்று ஊர் சுற்றித் திரியும் குழு இது. இந்திய தயாரிப்புக்களான 'ஹிரோ ஹொண்டா', 'பஜாஜ்', 'டிவிஎஸ்' ரக மோட்டார் சைக்கிளில் ஆகாய வாணம் போலத் திரிவார்கள், என்ன தொழில்? ஆருக்குத் தெரியும்? கூட்டமாகச் சேர்ந்து ஊர்சுற்றி சட்டித்தனங்களும் புரிவார்கள். வயது முதிர்ந்தவர்கள் அகப்பட்டால் அதுவும் புத்திமதி கூற முற்பட்டால் அதோ கதிதான். குடி கும்மாளம், திருக்கு வேலைகள், காதலுக்கு உதவுதல் போன்ற நற்பணிகள்? இவர்களது பொழுது போக்காக இருக்கிறது. 'என்னுடைய கார், என்னுடைய பெற்றோல், என்னுடைய காசு' என்ற கோட்பாடு இவர்களுடையது. இதனால் பெண் பிள்ளைகள் தவிர்க்க முடியாத இம்சைக்குள்ளாக வேண்டிய சூழலில் போய் வருகிறார்கள் போலிருக்கிறது. மோட்டார் சைக்கிள்கள் தென்னிந்தியப் படங்களில் வருவது போன்று நிரையாகப் போவதுமுண்டு. ஊரையே சினிமாக் கொட்டகையாக்கிவிட்டார்கள் போலிருக்கிறது.

முன்பு பொருளாதாரத் தடை நிலவிய காலத்தில் வவுனியாவிலிருந்து தாண்டிக்குள தடைமுகாமூடாக ஒரு 'லுமாலா' சைக்கிளை யாழ் குடாவுக்குக் கொண்டு வந்து சேர்ப்பதே பெருமைக்குரிய விடயமாக இருந்தது. சைக்கிள்களின் அசைவியக்கமில்லாமல் எதுவுமே இல்லாத நிலை அப்போது. எங்கும் எதிலும் சைக்கிள்தான். பிரசவத்துக்கு கொண்டு போனதும் சைக்கிள்தான். சாவீட்டுக்குச் சவப்பெட்டி சுமந்ததும் சைக்கிள்தான். லுமாலா சைக்கிளிக் கொம்பனி எக்கச் சக்கமாக லாபமீட்டியிருக்கும், அக்காலப் பகுதியில், ஆனால் இந்திய மோட்டார் சைக்கிள்கள் இப்பொழுது புற்றீசல் போல் இங்கு பெருகிவிட்டன. யாழ் குடாவில்தான் இவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் இருக்கின்றனவா? என்று கூடக் கேட்கத் தூண்டும். இவ்வாறுதான் முன்பு மக்களிடையே இன்றியமையாத பாவனைப் பொருளாக இருந்த 'சண்லைற்' சவர்க்காரம், மண்ணெண்ணை பிரேமதாசா காலத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டு பதுக்கல் வியாபாரம் கொடிகட்டிப் பறந்தமையும் திடீர் முதலாளிகள் உருவானதையும் மறக்க முடியுமா? இப்பொழுது ஸர்ப் எக்ஸெல் (Surf Excle) என்ற இந்திய சலவைப் பவுடர்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பிரபலம் பெற்று விட்டதைக் காண்கிறோம். இவ்வாறாக இந்திய சந்தை வாய்ப்பு ஜப்பானியச் சந்தை வாய்ப்பு என்ற போட்டா போட்டிகளில் வெற்றி பெறுவதற்காக தேசிய இனப்பிரச்சினையை காய் நகர்த்திப் பார்க்கின்ற அரசியல் புகுந்துவிட்டதா? ஆருக்குத் தெரியும்? இது அரசியல் விடயம். நமக்கேன் வீண் வம்பு. இனி விடயத்துக்கு வருவோம்.

முன்பு எமது மக்களிடையே சில பொருட்கள் பாரம்பரியமாகவே வேரூன்றியிருந்தன. வெளிநாட்டுப் பொருட்களிலிருந்து உள்நாட்டு உணவுப் பொருட்கள் வரை ஒரு மனப்படிவை ஏற்படுத்தியிருந்தன. சிறந்த பொருளைத் தெரிவு செய்யும் மனப்பாங்கு இயல்பாகவே மக்களிடையேயும் பரவியிருந்ததை அறியலாம். உதாரணத்துக்கு 'சன்லைற்' சவர்க்காரம், 'சிங்கர்' தையல் மெஷின், 'செவின் ஒக்குளொக்' பிளேற், 'ரலி' சைக்கிள், 'யேல்' ஆமைப்பூட்டு 'பார்க்கர்' ஊற்றுப்பேனா, 'ஒஸ்ரின் கார்' இப்படிப்பல.

யாழ்குடா உணவுப் பொருட்களில் கிராமத்தின் பெயர்கள் முக்கியம் பெற்றன. ஆனைக்கோட்டை நல்லெண்ணெய், மயிலிட்டிச் சுறாமீன், மாதகல் முரல்மீன், அளவெட்டி இராசவெள்ளிக் கிழங்கு, கூவில் கள்ளு, தாவடிப் புகையிலை, நீர்வேலி வாழைக்குலை எனப்பலவற்றைக் கூறலாம். சென்ற நூற்றாண்டு முடிவுடன் இவையெல்லாம் எல்லாவற்றையும் போல சீர்குலைந்து போயிற்று. கூவில்க் கள்ளும் மாவிட்டபுரத்து வெற்றிலையும் மறந்து எத்தனை வருடங்களாகப் போய்விட்டன. ஆனால் யாழ் குடா மக்களுக்கு இப்பொழுது புதிய அனுபவங்கள் எட்டுகின்றன. கனடாவில், சுவிஸில், ஜேர்மனியில், இங்கிலாந்தில் பாவிக்கும் பொருட்கள் உறவினர்களின் அன்பளிப்பாக வந்தடைகின்றன. இங்கு வரும் உறவினர்கள் மூலம் 'பிற்சா' போன்ற உணவுப் பதார்த்தங்களை அறிந்துகொள்ள முடிகிறது. அங்கிருந்து வரும் சிறுவர்கள் மிளகாய்த்தூள் பாவனையைக் கண்டு மிரண்டு ஓடுகிறார்கள். வெள்ளைக்காரர்கள் போல் பார்க்கிறார்கள். உடல் அசைவு காட்டுகிறார்கள். பேசவிரும்பினாலும் தமிழ்மொழி இடறுகிறது. தோல், நிறம் சாயல் மட்டிலுமே உறவை உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. நான் சந்தித்த இச்சிறுவர்களைப் போல் அல்லாமல் வேறு சில நாடுகளில தமிழ் பேச, படிக்க வாய்ப்பிருப்பதாக அறியும்போது மகிழ்ச்சிதான். அங்கிருந்து வரும் குடும்பங்கள் சில பகல் நேரத்தில் கிராமத்து உறவுகளோடு இருந்துவிட்டு இரவுக்கு நவீன வசதிகளுடன் கூடிய யாழ் நகரில் உள்ள தங்ககங்களுக்குச் செல்கிறார்கள். தாய் தந்தையர் பிறந்து வளர்ந்த வீடுகள் ஒத்துவராது என்று சிறுவர்கள் மறுப்பதாகக் கேள்வி.

இவ்வாறான தங்ககங்கள் யாழ் குடாவில் பெருகிக் கொண்டிருக்கின்றன. நல்ல வியாபாரம்.

இப்பொழுது யாழ் குடாதான் தென்னிலங்கை வர்த்தகர்களின் மையமாக மாறி விட்டது. வீதிகளில் நிறைந்திருக்கும் பிளாஸ்ரிக் கதிரைகள், ஆரியகுளத்துச் சந்தியில் சிங்கள வியாபாரிகள் கொண்டுவந்து குவிக்கும் வீட்டுப்பாவனைத் தளபாடங்கள் போன்றவை சான்று பகரும். எல்லாம் வெளிநாட்டுப் பணம் செய்யும் வேலையா? புதிது புதிதாக காணிகள் துப்பரவாக்கப்பட்டு (கண்ணிவெடிப் பிரதேசம் தவிர்ந்த) சுற்றுமதில் கட்டி வீட்டு அத்திவாரங்கள் முளைக்கின்றன. சண்டை இனிவராது என்று முடிவுகட்டிவிட்டார்கள் போலும். வெளிநாட்டுக்குப் புலம் பெயர்ந்தவர்கள் இங்கு வந்து குடியேறும் ஆவல் மிகுதியினால் வீடுகளைக் கட்டுவிக்கிறார்களா?

**“இப்பொழுது யாழ் குடாதான் தென்னிலங்கை வர்த்தகர்களின் மையமாக மாறி விட்டது. வீதிகளில் நிறைந்திருக்கும் பிளாஸ்ரிக் கதிரைகள், ஆரியகுளத்துச் சந்தியில் சிங்கள வியாபாரிகள் கொண்டுவந்து குவிக்கும் வீட்டுப்பாவனைத் தளபாடங்கள் போன்றவை சான்று பகரும். எல்லாம் வெளிநாட்டுப் பணம் செய்யும் வேலையா?”**

வெளிநாடு ஒன்றில் இருந்து வந்த நண்பன் ஒருவன் அன்பளிப்புச் செய்த 'டியூப்' 'பெயர் அன் லவ்லி' அழகு சாதனப் பசை போன்றது என நினைத்து ஒரு மாதத்துக்கு மேலாக முகப்பூச்சுக்குப் பாவித்த பின் ஒரு நாள் விடயம் தெரிந்த அவனின் நண்பன். பார்த்துவிட்டு “அது உணவுப் பண்டங்களுக்கு மெருகேற்றுவதற்குப் பாவிப்பது. இது தெரியாதா” எனச் சிரிப்போடு கூறியபோது ஏதோ தெரியாத மொழியில் எழுதியிருந்தபடியால் கண்டுபிடிக்க முடியவில்லை என விளக்கம் கொடுத்தான். நல்ல வேளை ஒரு மாதமாக பிற்சாவுக்குப் பாவிக்கும் பசையை முகத்துக்குப் பாவித்து எந்த விக்கினமும் ஏற்படவில்லை என்பதையிட்டு அவன் மகிழ்ச்சியடைந்திருப்பான்.

இந்த வெளிநாட்டுத் தொடர்புகள் ஊரில் தடல் புடலான மாற்றங்களை உருவாக்கிவிட்டது. பக்கத்து வீட்டு ஆச்சி 'டயலக' தொலைத் தொடர்புக் கொம்பனியின் 'கிற்காட்' (தொலைபேசி அழைப்புக்களுக்கான கட்டளை முற்பணம்) வாங்கித் தரும்படி ஆயிரம் ரூபாவை நீட்டியபோது வியப்பாக இருந்தது. ஆச்சியின் பேரப்பையன் 'கிற் காட்டை' கைத் தொலைபேசியில் வரவு வைத்துவிட்டு தருவானாம் என்று எனது மனத்தில் எழுந்த சந்தேகத்தைப் போக்கினான். இரவு பத்து மணிக்கு அநேகமாக ஆச்சிக்குத் தொலைபேசி அழைப்பு அவுஸ்ரேலியாவில் இருக்கும் மகளிடமிருந்து வருமாம். ஆச்சி 'யேஸ்' பொத்தானை அழுத்திவிட்டுப் பேசுவாராம். மகப்பேறு முடிந்து முப்பது நாட்களுக்கு மேற்கொள்ள வேண்டிய பத்திய, பராமரிப்பு முறைகளை மகளுக்குக் கூறுவார்.

இவ்வாறுதான் எமது கடந்தகாலப் பண்பாட்டுக் கூறுகள் பிறபிரதேசங்களில் வாழும் விழுதுகளுக்குப் பாய்ச்சப்படினும் எவ்வளவு காலத்துக்கு இந்த தொப்பிள் கொடி உறவு நீடிக்கப் போகிறது? அன்று யாழ்ப்பாணம் 'மலாயன் கபே' க்கு முன்பாக வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் சிலர் உள்ளூர் உறவினர்களுடன் நின்றார்கள். அதில் தமிழ் இளைஞன் ஒருவன் கன்னங்கரேலென கட்டுக்கோப்பான உடல் வாகுடன், பொன்னிற முடி நீலக் கண்களையுடைய பொம்மை போன்ற தோற்றத்தில் குழந்தை ஒன்றைச் சுமந்தவாறு 'மலாயன் கபே' முகப்பை நோக்கி வந்துகொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்து வெள்ளைக்காரப் பெண்ணொருத்தி கைப்பையை வீசியவாறு வந்துகொண்டிருந்தாள்.

வெள்ளைக்காரப்பெண்ணை (எந்த நாடோ தெரியவில்லை) திருமணம் முடித்திருக்கலாம் என ஊகித்தேன். அவளுக்கு 'மலாயன் கபே' வடையும் சம்பலும் பிடிக்குமா? இவர்களுடன் வாகனத்தில் வந்தவர்கள் 'மலாயன் கபே'க்குள் சென்றுவிட்டனர். உள்ளே சுவாரஸ்யமாக அந்தக் காலத்தில் 'றீகல்' படமாளிகையில் ஆங்கிலப் படம் பார்த்துவிட்டு மலாயன் கபேயில் வடை சாப்பிட்டதை நினைவு படுத்தினான் ஒருவன். அவனுக்கு வாழை இலையும் கட்டுச் சம்பலுடன் வடை சாப்பிடும் அனுபவமும் தந்த சுகம் மேற்குலக நவீன உணவுச்சாலைகளில் கிடைக்கவில்லை என்பதை அவனுடைய முகம் பேசியது. அந்த வெள்ளைக்காரக் குழந்தையுடன் அந்தத் தமிழ் இளைஞன் மலாயன் கபேக்குள் போகாமல் 'டொல்பின்' வாகனத்தில் வந்து ஏறிக்கொள்ள வெள்ளைக்கார மனைவியும் ஏறுகிறாள். இனி மறுபடியும் 'மலாயன் கபே'க்கு வரவேண்டிய தேவை அவளுக்கு இருக்காது.

*(பிறகு...)*



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தீப்பிடித்த நினைவோரம் பாயும் ஆறு

முல்லைக்கோணேஸ்



சிலாவத்தை சண்முகம் மாமா செத்துப்போய்விட்டாராம். மாலை பாடசாலையால் வந்தபோதுதான் அம்மா சொன்னா அப்போதே சைக்கிளில் புறப்பட்டால் என்ன என்றுதான் ரங்கநாதன் நினைத்தான். ஆனாலும் நாலு கிலோ மீற்றர் சைக்கிளோடி புதுக்குடியிருப்பு வரைக்கும் புளுதி குடித்துக்கொண்டு வந்த அவஸ்தையும் வெக்கையின் அந்த காரமும் பஞ்சியாக இருந்தது. காலையில்தான் போக வேண்டும். ச[illegible]முகம் மாமா இரத்த உறவில்லை[illegible] தவிர அவனுக்கு வாஞ்சையான[illegible] மாமாவாகத்தானிருந்தார். ஊரில பக்கத்[illegible] வீடு. எப்படியாவது போயே ஆகவே[illegible]ணேசிடம் லீவுக் கடிதத்தக் குடுத்த[illegible]வண்டும். இல்ல எண்டால் பிறின்சிப்பல் சத்தம் போடுவார். உலக விளப்பம் தெரியாததுகள், ஆனா... ம்மன்னா...மாவன்னா.... அம்மா எண்டு சொல்லவும் ரெண்டும் ரெண்டும் நாலெண்டு சொல்லவும் மட்டும் தெரிஞ்சால் போதும் எண்ட நினைப்போடு சீவிக்கிற கேசுகளில் அதுவும் ஒண்டு.

காலையில் ஏழுமணிக்கே புறப்பட்டான். அதிகாலை வெயில் மரங்களை ஊடுருவி தெருவில் இறங்கியது. பனியும், ஒளியுமாகச் சேர்ந்து ஒரு சோபித உலகம் விரிந்தது தெருவெங்கும். காலைவேளை சைக்கிளை மிதிப்பது உடலுக்கும் மனசுக்கும் இதமாக இருந்தது. மாமாவின் நினைப்பு எழுகிறபோதெல்லாம் அது மறைந்து துக்கம்தான் முட்டியது. இன்னும் நாலைந்து



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கிலோ மீற்றர் ஓடவேண்டும் ஊர்போய்ச் சேருவதற்கு சைக்கிளில் வேகம் கூட்டினான்.

முல்லைத்தீவு நகரைத் தாண்டும்போது மனது அதிர்ந்தது ஒரு பெரும் நகரம் வெறும் கற்குவியலாய் கிடந்தது. வண்ணாங்குளம் முடக்கில் திரும்பிய போது வெயில் ஓரளவு கூடி எறித்தது. முன் கூடையில் இருந்த தொப்பியை எடுத்துத் தலையில் போட்டுக்கொண்டான். முகத்தில் அனலடித்தது.

அந்த ஊரில் இருந்து பத்து வருடத்திற்கு முன்னர் அவன் இடம்பெயர்ந்து போனான். வங்கக்கடல் வழியே பெரும் தரையிறக்கல் மூலமாகவும் முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து ஊரின் நாலா திசைகளின் வழியேயும் நகர்ந்த இராணுவம் அகப்படும் சனங்களை சுட்டவாறு வருகிறதாம் என்ற செய்தி கேட்டுப் பதகழித்துத்தான் போனான். வீட்டை விட்டு வெளிக்கிடுவதற்கு அவனின் அம்மா மறுத்து அழுது புலம்பியவாறு வந்தா. அவன் சைக்கிளில் பெட்டிகளையும் வீட்டுப் பொருட்கள் சிலவற்றையும் சுமந்தவாறு நடந்தான். ஊரே திரண்டு நந்திக்கடல் கடந்தும் வட்டுவாகல் பாலம் தாண்டியும் இருப்புத் தேடிப் போனது. ஒரு சில நாட்களிலோ அல்லது ஒரு சில மாதங்களிலோ ஊருக்குத் திரும்பிவிடலாம் என்றே ரங்கநாதன் நினைத்தான். ஆனாலும் ஆறு வருடங்களின் பின்னரே அவனது ஊருக்குத் திரும்ப முடிந்தது.

ஊரில் இப்போது ஏராளமான சனங்கள் குடியேறி விட்டார்கள். அவனது பெற்றோர்கள் புதுக்குடியிருப்பிலேயே காணி வாங்கி வீடும் ஒன்று போட்டிருந்ததால் அங்கு இன்னமும் செல்லவில்லை.

ஆஸ்பத்திரி முடக்கில் திரும்பியபோது. அலரியும், வேறு காட்டுச் செடிகளும் முளைத்திருந்தன. கீழே புல் மண்டி கண்ணிவெடி, மிதிவெடி ஏதும் இருக்குமோ என அச்சப்படும்படியாக இருந்தது. அந்த இடம் அவனுக்கு நன்றாக ஞாபகமிருந்தது. அந்தப் பகுதியில் இருந்த வீடுகளில் கொஞ்சம் அழகான பெண்கள் இருந்தார்கள். வாசலில் இருந்து வீடுவரை குறோட்டன் செடி இருக்கும். இப்போது அந்த இடத்தில் பெரிய கிடங்கும் பள்ளமுமாய் தெரிந்தது. கிபிரோ மிக்கோ அங்கும் புதம்பார்த்திருக்கவேண்டும்.

ரங்கநாதன் வீட்டிலிருந்து ரவுனுக்குப் போகிற சமயங்களில் அந்த வீட்டுப் பெண்கள் படலை திறந்தபடியிருக்க கதைத்துக்கொண்டு நிற்பதைப் பார்த்திருக்கிறான். வேறு சில சமயங்களில் ஜீன்ஸ்போட்ட அந்தப்பகுதி ஆண்கள் யாராவது சைக்கிளோடு நிற்பார்கள். அந்தப் பெண்கள் அவனைச் சுற்றி நின்று கதைப்பார்கள். அதில் கொஞ்சம் ஒல்லியான நிறமான பெண் எடுப்பாக இருப்பாள். கூந்தலை நல்ல ஸ்ரைலாக வாரியிருப்பாள். அந்த நிறக்கவுணிலும் அவள் அழகாய்த்தானிருப்பாள். ஒரு சின்னப் பெண் வயது ஏழோ எட்டோ இருக்கலாம் ஒன்றுமேயறியாதவளாய் அவர்கள் கதைப்பதை வாய் பார்த்தபடியே நிற்பாள். அவர்களிருவருக்கும் இடைப்பட்டவள் பொது நிறம் தலையை பொப் 'கட்' வெட்டியிருந்தாள். அநேகமான நாட்களில் அவள் ரீ சேட்டும் ஸ்கேட்டும்தான். பச்சை ரீசேட் கறுப்பு ஸ்கேட். மஞ்சள் ரீசேட் கறுப்பு ஸ்கேட். சிவப்பு ரீசேட் கறுப்பு ஸ்கேட். எனக் கறுப்புக்கு மச்பண்ணுறமாதிரி கலர் கலராய் கலக்கினாள். அவர்களுக்கு அண்ணன்களும் கண்டிப்புக் குறைந்த அப்பாவும் இல்லாமலிருக்கும்போல என அப்போது ரங்கநாதன் நினைத்ததுண்டு. அவர்கள் தொண்ணூறாம் ஆண்டு இராணுவம் நகரை ஆக்கிரமித்ததோடு இடம் பெயர்ந்து குடும்பத்தோடு இந்தியாவுக்குப் போனார்கள். அவர்கள் போன பிறகும் நீண்டகாலமாக அந்த ஒல்லியான பெண்ணின் முகம் அவனது ஞாபகத்திலிருந்தது.

அவன் ஆஸ்பத்திரி வளவு தாண்டிப்போனான். வெயில் சற்று ஏறியிருந்தது. வெக்கை தெருவில் அலைந்து கொண்டிருந்தது.

அவன் சண்முகம் மாமாவைப் பற்றி நினைத்தான். சண்முகம் மாமாவிற்கு ரெண்டு பெண் பிள்ளைகளிருந்தார்கள். ஒருத்தி பத்தாவதோடு படிப்பை நிறுத்தியிருந்தாள். அவளுக்கு மெசின் ஓடுகிற குமுழமுனைத் தவத்தானைக் கட்டி வைத்தார்கள். கட்டிய கொஞ்சக் காலத்திலேயே மாமா போட்ட நகைகளையெல்லாம் அவன் விற்றுத் தீர்த்திருந்தான். மாமாவுக்கு நீண்ட நாட்களின் பின்னர்தான் தெரிந்தது அவன் குடிகாரன் என்று. மாமாவுக்குத் தெரிந்த பின்னர் அவன் பப்பிளிக்காகக் கள்ளடிக்கத் தொடங்கினான். பாட்டுப் பாடிக்கொண்டு அவன் மெசின் ஓடிக்கொண்டு போவதை சனங்கள் எல்லாம் வேடிக்கை பார்த்தார்கள். மாமாவுக்கும் பிள்ளைகளுக்கும் வெட்கமாக இருந்தது. மாமா ஏதாவது சாடைமாடையாகச் சொன்னால் அவருக்கு முன்னாலேயே மனைவிக்கு உதைத்தான். கொஞ்ச நாட்களிற்குப் பிறகு சீதனமாகச் கொடுத்த தண்ணி முறிப்பு வயற்காணியையும் குமுழமுனையில் யாருக்கோ விற்றிருந்தான். இரண்டாமவள் படித்துக்கொண்டிருந்தாள்.

மூத்த பிள்ளையின் வாழ்வு கண்டு உடைந்து போனார். சில காலங்கள் தாடி வழிக்காமல் ஆண்டிகள் மாதிரித் திரிவதைக் காணமுடிந்தது. இரண்டாவது பிள்ளையின் படிப்பிலும் வேறு விடயங்களிலும் சரி அக்கறையற்றுத் திரிந்தார். "என்ர பிள்ளைய நாசமாய்ப்போனவனுக்கு கட்டிக்குடுத்து அதுன்ர வாழ்க்கையைப் பாழடிச்சுப் போட்டனே" என அழுது புலம்பினார். மாமாவை அந்தக் கோலத்தில் காண சகிக்க முடியாமலிருந்தது. மாமி எதுவும் பேச இயலாதவளாய் மௌனம் காத்துக் கிடந்தாள். சில நாட்களின் பிறகு தவத்தான் மனைவியையும் அழைத்துக்கொண்டு குமுழமுனைக்கே இருப்புக்குப் போனான். போகும்போது எஞ்சியிருந்த ஒரு சில பொருட்களையும் மெசினில் ஏற்றிக்கொண்டு போனான். அப்போது அவள் கர்ப்பமாகியிருந்தாள். அவளுக்கு குழந்தை பிறந்ததுக்குப் பிறகு கூட்டிப்போகும்படி மாமாவும் மாமியும் எவ்வளவோ வற்புறுத்தினார்கள். தவத்தான் ஏதும் கேளாதவனாய் மெசினை ஓட்டிப் போனான். அதற்குப் பிறகு மாமாவைப் பழைய நிலையில் ஒருபோதும் பார்க்க முடிந்ததில்லை. முன்னரென்றால் வெள்ளைச் சாரமும் அரைக்கைச்சேட்டுடனும் நெற்றியில் சந்தனம் பளிச்சிட வருவார். மாமாவுக்கு ஐம்பது வயதைக் கடந்தும் தலையில் நரை கண்டதில்லை. நல்லெண்ணை வைத்து மயிரை நன்றாக அமர்ந்து கிடக்கும் படியாகச் சீவியிருப்பார். நல்ல ஆன்மீக சிந்தனை வயப்பட்ட பக்குவ உணர்வோடு பேசுவார். யாருடனும் மரியாதை தப்பி எப்போதும் பேசியது கிடையாது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காயாமோட்டைப் பிள்ளையார் கோயிலுக்கு மாமியோடு சைக்கிளில் போவார். மாமி புதிய பெண்ணென்று நினைக்கும்படியாக நன்றாக உடுத்திப் பூவைத்து முன்னால் அமர்ந்திருப்பாள். பிள்ளையார் கதைதொடங்கினால் இருபத்தியொரு நாளும் மாமா பிள்ளையார் கதை படித்துப் பயனும் சொல்வார். கண்ணகை அம்மன் கோயிலில் கோவலன் கூத்துத் தொடங்கும் நாட்களில் மாமாவைப் பார்க்க வேணும். எல்லோரும் அவரைக்கண்டு அதிசயிப்பர் பாண்டியனுக்கு ஆடுவதில் மாமாவைப்போல இனி ஒருத்தன் பிறந்து வரவேணும். கரப்புடுப்புப்போட்டு பெரிய நீண்டுபருத்த முடியும் அணிந்து கையில் வாளுடன் மாமா ஆடும் கொட்டகைக்கு வரும்போது பெடியள் பக்கமிருந்து விசிலடி வானைப் பிளக்கும். வட்டமாகத் தடியை நட்டு கயிறு கட்டியிருப்பார்கள். ஒவ்வொரு தடியிலும் ரியூப் லைற் பிரகாசிக்கும். மேலே வெள்ளை கட்டிச்சோடனை செய்திருப்பார்கள். உடுப்புப்போட்டு வெளிக்கிடும் இடம் கொஞ்சத் தூரம் தள்ளி இருக்கும். அங்கிருந்து வந்து வட்டக் கொட்டகைக்கு முன்பாக நின்று "தெய்ய தீங்கு தலாங்கு தரிகிட தக்கச்சும்" சுழன்று ஒருமுறை துள்ளி உள்ளே போகும் ஒய்யாரத்தைக் காணக்கோடி கண்கள் வேண்டும். ஆனால் மாமா அப்பிடிச் சுழன்று சுழன்று ஆடுவதை தண்ணிபோட்டு விட்டுத்தான் ஆடுவதாக கைலையும் சின்ராயனும் ஒருமுறை சீண்டினார்கள். அந்தக் கூத்தில் ரங்கநாதனுக்கு அவர்களோடு நடந்த வாக்குவாதத்தோடு சரி பின்னர் அவன் சைக்கிளில் போகின்ற இந்த நிமிடம்வரை பேசியதில்லை. பேசுவதற்கு பின்பு அவர்களுமில்லை. இப்போது



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உயிருடன் இருக்கிறார்களோ இல்லையோ என்பது அது வேற விசயம்.

அப்போது கைலைக்கு இயக்கத்தில் சேரவேணுமென்று எண்ணமிருந்தது. அவனது போக்குகளும், பேச்சுகளும் கொஞ்ச நாட்களாக மாறியிருந்தன. திடீரென்று ஒருநாள் நாலைந்து பேரோடு சைக்கிளில் கைகாட்டிப்போனான். அடுத்த நாள் ஊரெங்கும் கைலையைப் பற்றிய பேச்சே நிறைந்திருந்தது. கைலை போய்விட்டான். கள்ளப்பாட்டில் இருந்து வள்ளம் புறப்பட்டதாகவும், பத்துப் பன்னிரண்டு பேரோடு கைலையும் மண்ணை மீட்கப் போராடுவதற்காகப் பயிற்சிக்குக் கடல்தாண்டிப் போனான் என்றும் பேச்சு நிலவியது. அவன் பேரில் அப்போது ஊரில் எல்லோருக்குமே ஒரு மதிப்புண்டாகியது. அவன் தனது தந்தையையும் அன்பான தாயையும் பிற சகோதரங்களையும் விட்டுத் தனியே போனான் என்கிற உயர்ந்த படிமம் அவன்மீது விழுந்தது. அவன் போனதற்குப் பிறகு அவனது தகப்பனை தெருவில் காண்கிறபோதெல்லாம் அவரை முகங்கொள்ள முடியாமல் தவித்தான். அப்போதெல்லாம் அவரது முகம் துயரம் அப்பிக்கிடந்தது. அதைக் காணும்போது ரங்கநாதனுக்கு அழுகை பொத்துக்கொண்டுவரும். அவரால் எப்படித் தாங்க முடிகிறது இந்த மாபெரும் பிரிவை என அப்போது அவன் நினைத்ததுண்டு.

கைலை போனதன் பிறகு சின்ராயன், தறுமன், சிவம் என ஒவ்வொருத்தராகத் திக்கொன்றாய்த் திசையொன்றாய்ப் போனார்கள். விடிந்தால் ஊரில் யாரோ வீட்டை விட்டுப்போன செய்தி காத்திருந்தது. எல்லாம் பெரிய மாற்றமாகவும் எழுச்சியாகவும் எல்லோர் மனதிலும் விழுந்தது. விடுதலையைப் பெற்றுத்தரப்போகிற வீரர்களைப் பற்றிய படிமமும் பிரமிப்பும் விரிந்து கொண்டே போனது. அவர்களின் வரவுக்கான காத்திருப்பு நீண்ட காலங்களாகக் கழிந்தன.

அப்போது இந்திய இராணுவத்தினர் வீதிகளில் உலா வந்தனர். அவர்கள் முறுக்காவும் தேங்காய்ச் சொட்டும் விரும்பிக்கேட்டார்கள் இந்த நேரத்தில்தான் எண்ண முடியாத அற்புதங்கள் எல்லாம் நிகழ்ந்தன. வருடக்கணக்காய்க் காணாமலிருந்த கைலை நகர்த்தெருக்களில் இராணுவப் பாதுகாப்போடு வலம் வந்தான். மாலை நேரங்களில் 'டெனிம் ஜீன்சுடனும் சோகோ சேட்டுடனும்' மெய்க்காப்பாளர்கள் சகிதம் சாராயக் கடைக்குப் போனான். இடுப்பில் பிஸ்டல் இருந்தது. நிம் பண்ணின தாடி அவனுக்கு எடுப்பாகத்தான் இருந்தது.

அது ஒரு மழைக்காலம் என ஞாபகம். நகர்க் கடைகள் அநேகமானவை சாத்தப்பட்டிருந்தன. ஓரிரண்டு தேநீர்க் கடைகளும் சாராய பாரும் திறந்திருந்தன. சந்தியடி ஆலமரத்தில் காகங்கள் சிறகடித்தன. பைத்தியம் ஒன்று ஆடி ஆடி நனைந்து கொண்டே போனது. அப்போதுதான் அது நிகழ்ந்தது. இராணுவ ஜீப்பொன்றில் சுந்தரி சுடப்பட்ட நிலையில் கட்டி இழுக்கப்பட்டான். ஆலடிச் சந்தியில் திரும்பும்போது கைலை அநாயாசமாக ஜீப்பை ஓட்டிப்போனான். சுந்தரியின் கால்கள் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து ஜீப்பில் கட்டியிருந்தார்கள். கைகள் பின்னால் இழுபட்டன. முகம் வானைப்பார்த்தபடியிருந்தது. ஜீப்பின் வேகத்துக்கும் தெருவின் சீருக்கேற்பவும் தலை எழும்பி விழுந்து போனது இழுபட்ட இடமெங்கும் இரத்தமும் சதையுமாகக் கிடப்பதைச் சனங்கள் கூடி நின்று பார்த்தனர். மழைதூறிக் கொண்டுதானிருந்தது. மற்றொரு நாள் விஸ்வநாதனை நகரில் வைத்து இராணுவம் கைது செய்துகொண்டு போனது. அப்போதும் கைலை கூடவே இருந்தான்.

இந்தக்காலம் என்றுதான் நினைவிருக்கிறது. சின்ராயன் நாட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தபோது ஒரு கடல் சண்டையில் செத்துப்போனான். தறுமன் ஒதியமலையில் ரக்ரர் ஒன்றில் போகும்போது இராணுவம் வழிமறித்துத் தாக்கியதில் உடனிருந்த ஆறுபோராளிகளோடு மரணித்தான் என்கிற செய்தியறிந்ததும் இந்தக் காலப்பகுதி என்றுதான் ஞாபகம்.


வெயில் நன்றாக ஏறிவிட்டது ஊரை நெருங்கியபோது பனங்கூடல்களும் வெளியுமாய் இருந்தது. வயல்கள் வெறுமை தட்டிக்கிடந்தன. பனங்கூடல்களுக்கிடையில் எங்காவது ஒரு வீடு தென்பட்டது. ஊரின் எல்லைக்குள் போனபோது ஆள் நடமாட்டமிருந்தது. தெரிந்த முகங்களெதுவுமில்லை. வேறு ஊர்களில் இருந்து இடம்பெயர்ந்த புதிய சனங்களாகவே அநேகமிருந்தனர். சந்தியில் ஒரு தேநீர்க் கடையும் சலூனும் இருந்தன. கிடுகால் வேயப்பட்ட இன்னுமொருகடை. அது சைக்கிள் திருத்துகிற கடையாக இருக்கலாம். பூட்டியேயிருந்தது. பழைய வாசிகசாலையில் இப்போது சங்கக்கடை இப்போதும் சனங்கள் முண்டியடித்தார்கள். முன்னால் நின்ற இத்தியின் கீழ் சிறுவர்கள் போளை அடித்துக்கொண்டு நின்றார்கள். வாசிகசாலையை அடுத்து வரப்போவது கீதாவீடு. வாழ்வின் இறுதிக் கணம்வரை எதை எதை மறந்தாலும் கீதாவை அவனால் எப்படி மறக்க முடியும்?

" ரங்கண்ணா ! தலையணை உறையொன்றுக்குப் பெற்றன் போடப் போறன் வடிவான படம் ஒண்டு கீறித் தருவீங்களோ" என்று தொடங்கின பழக்கத்தில் இருந்து அவளது அன்பும் பேச்சும் எத்தகைய மகத்தானதாக இருந்தது அவனுக்கு. அவளது வீட்டுக்கு அவன் முதன்முதலாகப் போன போது உள்ளூரப் பயந்து கொண்டே போனான். மனசுக்குள் நடுங்கியது. பேச்சு வரவில்லை. அவளைப் பார்த்துப் பேசவே சங்கடப்பட்டான். பேசும்போது வேறெங்கோ பார்த்தவாறு பேசினான். அவளது குரலும் தணிந்துதான் இருந்தது. அவளும் உள்ளுக்குள் தடுமாறுகிறாள் போல.

அன்று தொடங்கிய அவளது வீட்டுக்கான பயணம் அவளோடு அவளது குடும்பத்தையும் சேர்த்து ஐரோப்பிய நாடொன்றுக்கு வழி அனுப்பும்வரை எத்தனை மாலை நேரத்தேநீர்களை அற்புதமானதாகவும் ஆனந்தமானதாகவும் ஆக்கியிருந்தது.

"ரங்கன் கீதான்ர அப்பாவுக்கு சிற்றிசென் கிடைச்சிட்டுதாம் இனி எங்கள எடுக்குறது ஈசியாம் கீதாவையும் என்னையும் உடன கொழும்புக்கு வரச்சொல்லி எழுதியிருக்கிறார். என்று சோமளா அன்ரி சொல்லும் வரையிலும் எத்தனை அதி உன்னதமான கனவுகளில் அவன் மிதந்திருந்தான். தலைக்குள் ஆயிரம் சிதறல்கள் கீதா போய்விடப் போகிறாள். இனி அவளைப் பார்க்க முடியாது. கீதாவை முகம் பார்க்க முதன் முதலில் எவ்வளவு கஸ்ரப்பட்டானோ அத்தனை அவஸ்தையுடன் அவளைப் பார்த்தான். அவளும் தனக்குள் துக்கித்துக்கொள்கிறாள்போல முகம் சுண்டித்தான்போயிருந்தது. இந்தப் பிரிவை அவள் எப்படி எடுத்துக் கொள்கிறாள். நல்ல அண்ணன் ஒருவனைப் பிரிகின்ற துக்கமா? அல்லது சாதாரண நட்பைப் போல எண்ணினாளா? அல்லது அவனைப் போலத்தான் அவளும் உடைந்துதான் போனாளா?

எல்லாமே ரங்கநாதனுக்கு நினைவிலோடியது. அவள்போன சில வருடங்களின் பின்னர் அவளது சித்தியை ஒரு முறை சந்தித்தபோது கீதாவுக்கு இரண்டு குழந்தைகளென்றும் கடைசியாகப் பிறந்தது பெண்குழந்தையென்றும் போட்டோவைக் காட்டினாள். குழந்தை கீதாவைப் போலத்தான் இருந்தது. குண்டு





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

குண்டான சொக்கோடு வசீகரமான கண்களால் சிரித்தது. "கீதாவின் போட்டோ இல்லையோ " எனக் கேட்கவேண்டும்போல இருந்தது. சித்தி என்ன நினைப்பாளோ என எண்ணி விட்டுவிட்டான்.

கீதா வீடென்பதை உறுதிப்படுத்த அந்த இலந்தை மரம் ஒன்றுதான் எஞ்சியிருந்தது. அவன் அவளது வீட்டைக் கடந்துபோகும் சமயங்களிலெல்லாம் உள்ளூர ஒரு பயமும் மகிழ்வும் பெருமிதமும் கலந்த ஒரு உணர்வுக் கலவையில் மிதந்தவாறே போவான். அப்போது அந்த இலந்தை மரநிழலின் கீழ் கீதா புத்தகம் வாசித்தபடியோ அல்லது தையல் வேலை செய்தபடியோ இருப்பாள். இப்போது அது தனித்துப் போயிருந்தது. இன்னுங் கொஞ்சம் தள்ளி சித்திரைமாதக் காற்றில் இலையுதிர்த்து துளிர்ப்புக்குத் தவமியற்றிக் கிடந்தன வேறும் சில மரங்கள். கள்ளச் சோளகம் தெருவெங்கும் சருகுகளை வாரி இறைத்திருந்தது. பனை ஒன்றிலிருந்து குக்குறுப்பச்சான் விடாமல் கத்தியது. எரிந்த சாம்பல் மேட்டிலிருந்து தோன்றிய காளான்களைப் போல குடிசை வீடுகள் அந்த ஊரெங்கும் முளைத்திருந்தன. வீட்டில் ஒதுக்குப் புறங்களில் சீமெந்துக் கல்லினதும் ஓடுகளினதும் சிதறல்கள் தெரிந்தன. சில வீடுகளின் கிணற்றடிகளில் வாழை செழித்துக் கிடந்தது. இலைகளில் ஒளிபட்டுக் குளிர்வர்ணமடித்தது. புதிய கமுகங்கன்றுகள் தென்னங் கன்றுகள் காணிகளெங்கும் குருத்துத் தள்ளியிருந்தன. ஊர் புத்துயிர் பெற்று எழுந்ததுபோல கோலம் கொண்டிருந்தது. இனிப்பயமில்லை. இந்த ஊரும் ஜனங்களும் இனி முன்னரைப் போலவோ அல்லது முன்னரை விடவோ எழுந்துவிடக் கூடும். முன்னர் இந்த ஜனங்கள் எப்படி வாழ்ந்திருந்தார்கள். வயலும் தோட்டமுமென எவ்வளவு செழிப்பாக இருந்தது நிலம். சோளகம் வீசி ஓய்கிற காலத்தில் ஊரின் சோபிதம் எத்தகையது? ஊரில் இருந்து லொறி லொறியாய் மீன்களேற்றிக் கொழும்பு போவார்கள். வத்துக் கள்ளுத்தேடி வாடிகளிலிருந்து வருபவர்கள் மாலை நேரங்களில் ஊருராய் அலைந்து திரிவார்கள்.

மேகங்களற்ற நிர்மலமான வானத்தில் பட்டங்களேற்றிக் குழந்தைகள் குதூகலிப்பர்.

இப்போதும்கூட ஒன்றும் குறைந்துபோய் விடவில்லைத்தான். முன்பிருந்த கட்டிடங்களைக் காண முடியவில்லையே தவிர நிலம் இன்றும் எங்கள் நிலமாகவே எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய அதே நிலமாகவே - தம்பியாக்களுடனும் நண்பர்களுடனும் சேர்ந்து உழத்தி விளையாடிய எங்கட அருமை நிலமாகவே -

ரங்கநாதனுக்குக் கண்களில் நீர்த்திவாலைகள் தூரத்தில் பறையதிர்ந்தது.



# நாமிழுப்போம் சுதந்திரத்தேர்

மானிடத்தின் தமிழ்க் கூடல் - கலை
மகத்துவத்தின் உயர் தேடல்
தேனிடத்தே இனித்த நிலம் - எங்கள்
திசையனைத்தும் இணைந்த நலம்

உறவுரிமை உரத்த குரல் - இன
ஒற்றுமையின் விரிந்த நிரல்
திறமுழைப்பு புகழ் விளைக்கும் - வீரர்
திறந்த புது வழி செழிக்கும்

மொழி காக்கும் மறவர் உளம் - தமிழ்
முறுவலிக்கும் வெற்றிக்களம்
விழிவியக்கும் புரட்சி வழி - தீரர்
விடுத்த கணை அமைதி ஒளி

காலத்தே கனிந்த கனி - தமிழர்
கருத்தொலிக்க எழுந்த தொனி.
சீலஞ்சேர் சத்தியப்போர் - நாம்
சேர்ந்திழுப்போம் சுதந்திரத் தேர்.

நெடுந்தீவு
மகேஷ்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கலாநிதி க.சோமாஸ்கந்தன்

# நோர்வேப் பழங்குடியினர் பெற்ற சுயாட்சி



சாமீ இனத்தவரின் கொடி

லப் என்ற பெயருடன் நோர்வே, சுவீடன், பின்லாந்து, ருஷ்யா ஆகிய நாடுகளின் பனிபடர்ந்த வடபகுதியில் ஸ்கன்டினேவிய இனங்களிலிருந்து வேறுபட்டதொரு பழங்குடி மக்கள் பண்டுதொட்டு வாழ்கின்றனர். லப் (Lapp) மக்களில் பாதியிலும் கூடிய பங்கினர் நோர்வே நாட்டின் வடபால் வாழ்கின்றனர். பின்லாந்தின் வடதுருவ வட்டத்திற்குள் லப்லாந்து (Lapland) என்ற பகுதி காணப்படுகின்றது. மக்கள் தொகை குறைந்த லப்லாந்தில் லப் இனத்தவர் வாழ்கின்றனர். நோர்வே, சுவீடன், பின்லாந்து, ருஷ்யா ஆகிய நான்கு நாடுகளின் லப் இனத்தவர் வாழும் பகுதிகளைக் கூட்டாக லப்லாந்து என்று அழைக்கும் வழமையையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஆதி ரோமாபுரியின் வரலாற்று ஆசிரியரான கோர்னீலியஸ் தசிற்றஸ் (Cornelius Tacitus கி.பி 56-117) எழுதிய ஐரோப்பிய வரலாற்றில் லப் பழங்குடியினர் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. அவர் எழுதிய காலப்பகுதியில் நோர்வே, சுவீடன், பின்லாந்து, ருஷ்யா என்று எல்லை வைத்துப் பெயர் வழங்கும் வழக்கம் தோன்றாத காரணத்தால் லப் இனத்தவர் வட துருவத்திற்கு அண்மித்ததாக வாழ்வோராக மாத்திரம் குறிப்பிடப்படுகின்றனர்.

நோர்வே நாட்டின் லப் பழங்குடியினர் சாமீ (Sami) என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றனர். லப் இனத்தவர்களில் நான்கு வகையினர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கரையோர லப் இனத்தவர் (The Coastal Lapps ) நோர்வேயின் வட துருவத்தில் வாழ்கின்றனர். இவர்கள் கடல் மீன்பிடியைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். சுவீடன், பின்லாந்து, நாடுகளின் ஏரிகள்,நதிகளில் மீன்பிடித்து வாழ்வோர் மீனவ லப் இனத்தவர் (Fisher Lapps ) என்று அழைக்கப்படுகின்றனர். காட்டுப் பகுதிகளில் துருவ மான் வளர்ப்பில் ஈடுபடுவோர் காட்டுப் பகுதிகளில் வாழும் லப் இனத்தவர் (Forest Lapps) என்று கணிப்பிடப்படுகின்றனர். அடுத்ததாக மலைவாழ் லப் இனத்தவர் இடம்பெறுகின்றனர். இவர்கள் நாடோடி வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்கள் கூடுதலாக மலைப் பிரதேசத்தில் வாழ்வதால் மலை வாழ் லப் இனத்தவர் (Mountain Lapps) என்று பெயரிடப்பட்டுள்ளனர்.

தாம் வாழும் நாட்டின் பண்பாட்டியல்புகளையும் மொழி வழக்குகளையும் தமது தேவைக்கேற்ப லப் இனத்தவர் உள்வாங்கியுள்ளனர். பின்லாந்தில் வழங்கும் லப் மொழி லப் இனத்தவர் யாவருக்கும் பொதுவான மொழியாகக் கருதப்படுகின்றது, எனினும் லப் மொழிக் குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உட்பிரிவுகள் காணப்படுகின்றன. நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளில் லப் மாணவர்களுக்கு லப் மொழியில் பாடம் புகட்டப்படுகின்றது. உயர்தரக் கல்வியை அவர்கள் நோர்வே அல்லது சுவீடன் மொழியில் மேற்கொள்கின்றனர்.

நோர்வே நாட்டு சாமீ என்றழைக்கப்படும் லப் இனத்தவர்கள் பெரும்பான்மையினருடன் நெருங்கி வாழ்ந்தாலும் தமக்கே



நோர்வேயில் வாழும் சாமீ இனத்தவர் ஒருவர்

உரித்தான ஆடை அலங்காரங்களையும் வாழ்க்கை முறைகளையும் கொண்டுள்ளனர். பார்த்த மாத்திரத்திலேயே அடையாளங் காணக்கூடிய தனித்துவமான ஆடைகளையும் தலைப் போர்வைகளையும் அவர்கள் அணிகின்றனர். அவர்களுக்கென்றே வேறுபட்ட கலாச்சாரம், மொழி என்பன உண்டு. அவர்களுக்கு தமது தொன்மைவாய்ந்த கலாச்சாரக் சிறப்புப் பற்றிய அபரிதமான பெருமை இருப்பது கண்கூடு.

இன்று நோர்வேயில் வாழும் சாமீ இனத்தவர் தொகை 45,000 வரையிலாக இருக்கின்றது. நோர்வேயின் வடக்குப் பிராந்தியமான பின்மார்க்கில் (Finnmark) இவர்களிற் பெரும்பான்மையோர் வாழ்கின்றனர். இவர்களுடைய பாரம்பரிய இசைவடிவத்தை யோயிக்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**இன்று சகல உரிமைகளும் பெற்ற நிலையில் நோர்வேக் குடியுரிமையுடன் சாமீ இனமக்கள் நிறைந்த வாழ்வு வாழ்கின்றனர். சாமீ இனத்தவரின் தேசிய நாளாக பெப்ரவரி 06 பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. மிக அண்மையில் நோர்வே அரசு எடுத்த தீர்மானத்தின்படி பெப்ரவரி 06 சாமீ இனத்தவரின் கொடி நாளாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.**



(Yoik) என்றழைக்கிறார்கள். இவ்விசை வடிவம் இவ் வினத்தவரின் ஆதி மதத்துடன் நெருக்கமானது. இவர்களுடைய ஆதி மதத்தை ஷாமானிசம் (Shamanism) என்ற வகைப்படுத்தலின் கீழ் சமூகவியலாளர்கள் இணைத்துள்ளனர்.

ஷாமானிச மத வடிவங்கள் உலகின் பலபாகங்களில் பண்டுதொட்டு நிலவுகின்றன. அமானுஷ்ய சக்தி கொண்ட தேவதைகளையும் தேவர்களையும் வழிபடும் முறையாக இது அறியப்படுகின்றது. இந்தவகை வழிபாடு நிலவும் சமூகங்கள் மத்தியில் மதகுருப் பரம்பரையினர் காணப்படுவதில்லை. வாழ்வாதாரமாகப் பிறதொழில் பார்க்கும் ஒருவர் சமயாசமயப் பூசாரியாகச் செயற்படுவார். இவர் பேய் பிசாசுகளை விரட்டும் திறமை உள்ளவராகவும் இடம்பெறுவார். இன்றும் தெற்கு ஆசியக் கிராமங்கள் பலவற்றில் இவ்வகை வழிபாட்டைக் காணக்கூடியதாக இருக்கின்றது. குறி சொல்பவர்கள், நினைத்த காரியம் சித்தி அடைய உதவுபவர்கள், காணாமற் போன பொருள் இருக்குமிடம் பற்றிய துப்புத் தருபவர்கள், வீபூதி போட்டு குணப்படுத்துபவர்கள் போன்றோரை ஷர்மான் மதப் பகுதிநேர குருவர்களாக மதிப்பிடலாம்.

சாமீ இனத்தவர் கலாசாரத்தின் மையப் பொருளாக அவர்கள் பெரும் எண்ணிக்கையில் வளர்க்கும் கலைமான் (Reindeer) மந்தைகள் இடம்பெறுகின்றன. பாலாகவும், இறைச்சியாகவும், கூடாரத் தோலாகவும் இக்கால்நடை பயன்படுகின்றது. 17ஆம் நூற்றாண்டிற்கு முன் இவர்கள் வேட்டையாடியும் மீன் பிடித்தும் வாழ்ந்தார்கள். இன்று கலைமான் வளர்த்தல், விவசாயம், வர்த்தகம் சிறு கைத்தொழில், கைவினைப் பொருட்கள் தயாரிப்பு, தொழிற்சாலைப் பணி போன்றவற்றில் சாமீ இனத்தவர்கள் ஈடுபடுகின்றனர். தமது பகுதிகளில் முடங்கிக் கிடக்காமல் நாட்டின் பிற பகுதிகளில் வேலைவாய்ப்புத் தேடிச் செல்லும் போக்கும் அண்மைக்காலமாக அவதானிக்கப்பட்டுள்ளது. அண்மையில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி பத்து வீதத்தினர் மாத்திரமே கலைமான் வளர்ப்பில் ஈடுபடுவதாக அறிய வருகின்றது.

கலைமான்களைக் கொன்று தின்னும் விலங்கினத்தினை வேட்டையாடும் உரிமையை நோர்வேச் சட்டங்கள் தடைசெய்துள்ளன. இதனால் கலைமான் வளர்ப்பு மட்டுப்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. சாமீ இனத்தவர்களுக்கும் நோர்வே அரசுக்குமிடையில் இது முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ளது. நோர்வே அரசு விதித்த வேட்டைத் தடையை எதிர்த்து ஐ.நாவின் பழங்குடி மக்கள் உரிமைப் பாதுகாப்பு அமைப்பிற்கு மனுச் செய்ய சாமீ இனத்தவர்கள் தீர்மானித்துள்ளனர். கலைமான் வளர்ப்பில் பெருமளவு முதலீடு செய்யப்பட்டு இறைச்சி பதனிடும் தொழில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது மேய்ச்சல் இட நெருக்கடிகளையும் சுற்றுச்சூழல் சம்மந்தமான நெருக்கடிகளையும் தோற்றுவித்துள்ளன

முதலாம் இரண்டாம் உலகப் போர்களுக்கு இடைப்பட்ட மூன்று தசாப்தங்களில் சாமீ இனத்தவர்கள் நோர்வே அரசினால் கடும் துன்புறுத்தலுக்கு உட்பட்டனர். 1940களில் நோர்வே அரசு கொண்டு வந்த சட்டங்கள் பள்ளிக்கூடங்களில் லப் மொழி மூலம் கல்வி புகட்டும் நடவடிக்கைகளை முற்றாக நிறுத்தின. நோர்வே நாட்டின் தேசிய மொழி பேசாதோருக்கு நிலபுலம் விற்பதை இன்னுமோர் சட்டம் தடை செய்தது. அதாவது லப் மொழி மாத்திரம் பேசுவோர் நிலம் கொள்வனவு செய்வதை இச்சட்டம் தடுத்தது. சாமீ இனத்தவர்களை நோர்வே நாட்டவர்களாகச் செய்யும் இன்னுமோர் முயற்சியாக லப் கலாசார விழுமியங்களை இல்லாதொழிக்கும் பரந்து பட்ட நடவடிக்கைகளையும் நோர்வே அரசு மேற்கொண்டது. இவையாவும் கூட்டாக நோர்வே வரலாற்றில் மிகப்பெரியதொரு கரும்புள்ளியாக இடம்பெறுகின்றன.

இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற காலந்தொட்டு சாமீ இனத்தவர்களை பெருந்தன்மையோடு நடத்தும் கொள்கையை நோர்வே அரசு கடைப்பிடிக்கத் தொடங்கியது. சாமீ இனத்தவர்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட சட்டங்களின் கொடூரம் படிப்படியாகத் தணிக்கப்பட்டது. 1960களில் தமது கலாச்சாரத்தை தங்கு தடையின்றி வளர்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதோடு ஊக்குவிப்பும் வழங்கப்பட்டது. லப் மொழி ஊடாக கல்வி புகட்டும் அனுமதியும் வழங்கப்பட்டது. 1980களில் லப் இனத்தவர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்த பின்மார்க் பகுதி ஊடாகப் பாயும் ஆல்ற்ரா நதியை நோர்வே அரசு அணைகட்டி மறிக்க விளைந்த போது லப்-நோர்வே முரண்பாடுகள் மீண்டும் தோன்றின. சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்புகளும் சாமீ இனத்தவர்கள் சார்பில் குரல் கொடுத்தன. லப் அல்லது சாமீ என்றழைக்கப்படும் இப்பழங்குடியினர் உரிமைகள் பற்றிய பிரச்சனையை தேசிய மட்டத்தில் நோக்க வேண்டிய தேவை எழுந்தது.

இதன்காரணமாக 1987இல் நோர்வேப் பாராளுமன்றம் சாமீ இனத்தவர்களின் அந்தஸ்த்திற்கும் தனித்துவமான சட்டங்களுக்கும் முழு அளவு அங்கீகாரம் வழங்கியது. அடுத்த வருடம், 1988இல் பின்வரும் சரத்தை நோர்வே அரசியல் சாசனத்தில் இணைக்கும் தீர்மானத்தை நோர்வேப் பாராளுமன்றம் நிறைவேற்றியது. 'சாமீ மக்கள் தமது மொழி, கலாச்சாரம், வாழ்க்கை முறை என்பவற்றை சாமீ சட்டத்திற்கும், சாமீப் பாராளுமன்றத்திற்கும் அமைவாகப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும். உரிய சூழலை உருவாக்கும் பொறுப்பு அரசுடையதாகும்'.

இவ்வரசியல் சாசனத் திருத்தத்திற்கு அமைவாக ஒக்ரோபர் 09, 1989இல் சாமீ இனத்தவர்களுக்கான பாராளுமன்றம் திறந்து வைக்கப்பட்டது. சாமீதிங்கெற் (SAMETINGET) என்று இப்பாராளுமன்றம் அழைக்கப்படுகின்றது. இன்று சகல உரிமைகளும் பெற்ற நிலையில் நோர்வேக் குடியுரிமையுடன் சாமீ இனமக்கள் நிறைந்த வாழ்வு வாழ்கின்றனர். சாமீ இனத்தவரின் தேசிய நாளாக பெப்ரவரி 06 பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. மிக அண்மையில் நோர்வே அரசு எடுத்த தீர்மானத்தின்படி பெப்ரவரி 06 சாமீ இனத்தவரின் கொடி நாளாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

போராளியின் பேனாவிலிருந்து...


# அடிப்படைகள்

தூயவன்

அந்த நிலக்கீழ் அறையானது இதமான மென்மஞ்சள் நிறவெளியால் மெழுகப்பட்டிருக்கிறது. அதன் நேரடி வெளியுலகத் தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்டிருக்கின்றது. எனினும் அங்கிருந்து உலகின் எப்பாகத்துடனும் சில மில்லி செக்கன்களிலேயே தொடர்பைப் பெறும் வல்லமையை பெற்றுள்ளது. அவ்வறையின் உள்ளிடம் காலத்தைப் பிரதிபலிக்கும் உபகரணங்களால் நிரப்பப்பட்டுள்ளது. அங்கு சில மென் அதிர்வையும் உள்வாங்கக்கூடிய வகையில் காற்றினால் நிரப்பப்பட்டதும், 360° ஊடாக சுழலக்கூடியதுமான நான்கு இருக்கைகள் காணப்படுகின்றன. அவற்றில் இரண்டு இருவரினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அவர்களின் முகங்கள் அச்சூழல் ஏற்படுத்திய பாதுகாப்பு உணர்வை பிரதிபலிக்கின்றன. எவ்வகை சக்திவாய்ந்த கதிர்களாலும் அவ்வறையை ஊடுருவ முடியாதென்பது பலமுறை வாய்ப்புப் பார்க்கப்பட்ட பின்னரே அக்காரியாலயம் அங்கு இயங்கத்தொடங்கியது. அது அணுகுண்டு போன்ற ஆயுதங்கள் கைவிடப்பட்டு பல வருடங்கள் ஆகிவிட்ட காலப்பகுதி. உடல் வெளியேற்றும் வெப்பத்தையும் $CO_2$ யும் தகுந்த விகிதத்தில் மாற்றியமைக்கும் தானியங்கி இயந்திரங்கள் ஏற்படுத்திக் கொடுக்கும் வளமான சூழல், உடலில் சிறு அசதியும் ஏற்படுவதற்கு அனுமதி அளிக்கவில்லை. உடல் உள பகுப்பாய்வு, அவதானிப்பு கணனிகளின் அறிவுறுத்தல்களை அலட்சியம் செய்வதால் என்னவோ, ஒருவனின் தொந்தி சற்று பெரிதாகவே காணப்படுகின்றது. அவன் ஒரு உயர்தர அதிகாரிக்குரிய மிடுக்குடனும், சிறிதளவு கபடத்தனம் கலந்திருக்கும், ஆனால் அறிவொளி சுடர்விடும் கண்களையும் கொண்டுள்ளான். மற்றவனோ முகத்தசைகளிற்குரிய உணர்வு நரம்புகள் அறுந்ததால் எண்ணப்பிரதிபலிப்புக்களை வெளிக்காட்டமுடியாத, தோல் முகமூடி அணிந்தவன்போல் காணப்படுகின்றான். இவன் பணிவாக இருக்கும் தோரணையை அவதானிக்கும் பொழுது முன்னவனிற்கு உதவியாளன் என்பது வெளிப்படுகின்றது.

சிறீலங்கா அரசின் பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்ட அதிகாரியான அவன், "புதிதாக ஏதாவது நடந்துள்ளதா" என தன் தலையை சற்றுத் திருப்பி பிரதான கணனி ஆணை உள்வாங்கியை நோக்கி கேட்கின்றான். இக்கருவியானது ஒலியலை மூலமாக கட்டளை ஒன்று செயற்படும் திறன் வாய்ந்தது. இவன் தனது வழமையான பணிகளில் குறிப்பிடத்தக்கதாக பின்வருவனவற்றை கொண்டுள்ளான். மின் அணு அலைத் தொடர்புகள் மூலம் தமிழீழத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளை வேவு பார்ப்பது, பதிவு செய்வது, உயர் மட்ட உத்தரவுகளை உடனுக்குடன் உரிய இடங்களிற்கு தெரிவிப்பது, தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு செயற்படும் நாசகாரத் திட்டங்களை இணைப்பது போன்றன.

இவனொருவன் செய்யும் வேலை 50 வருடங்களிற்கு முன்னர் செய்வதென்றால் குறைந்தது 1500 ஆரோக்கியமான 75%லும் கூடிய அறிவுச் சுட்டெண் உடைய மனிதவலு தேவைப்பட்டிருக்கும். இவனது கேள்விக்கு ஆம்... என பதிலளித்த கணனியானது தொடர்கிறது. "தமிழீழம் புதிய கணனி வைரஸ் ஒன்றை கண்டுபிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இது சாத்தியமடையும் பட்சத்தில் எமது முன்னரங்க மின் அணுப்பாதுகாப்பு வலயமானது ஒரு நனோ செக்கனில் தகர்த்தழிக்கப்பட்டுவிடும்" அது இவ்வாறு தெரிவிக்க இவனது புருவமோ ஆச்சரியத்தால் உயர்கின்றது. எதையும் பொருட்படுத்தாது சமகால மனித





www.tamileelamarchive.com



தமிழீழ ஆவணக் காப்பகம்

சிந்தனை ஆற்றலில் 5% வரை கைவரப்பெற்றுள்ள அக் கருவியானது தொடர்கிறது. "இவர்களது அம் முயற்சி பற்றிய முன்னறிவிப்பு எமது நாசகார முறியடிப்புப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலதிகமான பாதுகாப்பு வலயம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. எங்களைப் பொறுத்தவரை இவர்களின் இச்செயற்பாடானது ஒரு வள வீணடிப்பு முயற்சியாக கணிக்கப்படுகின்றது." இவ்வாறு கூறி சிறிது இடைவெளி விட்டு "மேலதிக தகவல்கள் தேவையா? " எனக் கேட்கின்றது. "அதற்கு தமிழீழத்திற்கான கணனி மையங்களில் ஒருமுறை சரிபார்ப்போம்" என, இவன் ஆணையிடுகின்றான்.

இப்பொழுது இவர்களிற்கு முன்னால் இருக்கும் இருபதிற்கு பத்தடி இலத்திரனியல் திரையானது உயிர்பெறுகின்றது. அதில் உலகப் படமொன்று விரிகின்றது. முதலில் சிறு பச்சை நிற வெளிச்சங்கள் பல இடங்களில் ஒளிர்கின்றன. இவை பல்வேறு நாடுகளில் இயங்கும் இரகசிய மையங்களாகும். அப்பொழுது அத்திரையை ஊடறுத்து சிவப்பு வெளிச்சம் ஒன்று நகர்கின்றது. இதுதான் நடவடிக்கை ஒருங்கிணைப்பு தலைமையகம் ஆகும். இதன் சிறப்பியல்பு என்னவென்றால் இது பூமியிலிருந்து 39 கிலோமீற்றருக்கு அப்பால் விண்வெளியில் இயங்கும் செயற்கைக் கோளாகும். இதன் செயற்பாட்டில் நேரடியான மனித தலையீடுகள் எதுவும் இடம் பெறுவதில்லை. மேற்படி தகவல்கள் தமிழீழப் பாதுகாப்பைப் பொறுத்த வரையில் அதியுச்ச இராணுவ இரகசியங்களாகக் கருதப்படுகின்றது. இப்பொழுது பலநூறு பொன் நிற ஒளிர்வுகள் திரையில் விட்டு விட்டுத் தோன்றுகின்றன. இவை நேரடியான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் செய்மதிகளாக இருக்கின்றன. எனினும் அவற்றில் பல போலியானவை. பகைவனின் கவனக்கலைப்பானாக தொழிற்படுபவை. மேற்படி தகவல்கள் 02 வருடங்களிற்கு முன்னரேயே தங்களால் திரட்டப்பட்டு விட்டதையும் அதனை தமிழீழம் இன்னும் உணரவில்லையென்பதையும் எண்ணியதால் என்னவோ அவன் பெருமிதம் முகத்தில் பிரவாகம் எடுக்கின்றது. "யுத்தம் ஒன்று ஆரம்பித்தால் இதை செயலிழக்க வைத்தால் காணும், பகைவன் இதயத்தில் ஈட்டி பாய்ச்சியதற்குச் சமன்" எனக் கூறியவாறு அச்சிவப்பு ஒளிர்வை சுட்டிக்காட்டியவண்ணம் தனது உதவியாளனை திரும்பிப் பார்க்கின்றான்.

எதிர்பார்த்தவாறு உதவியாளனிடமிருந்து திருப்திகரமான பிரதிபலிப்புகள் எதுவும் இவனுக்கு கிடைக்கவில்லை. ஏதோ தன்னுள் எண்ணியதற்கு அறிகுறியாக தலையை ஆட்டியவாறு "நீ யுத்தத்தை விரும்பவில்லைப் போல் உள்ளது" எனத் தனது குரலிலும் சந்தேகத்தை கலந்தான். பதிலளிக்க இடைவெளிவிடாது சொல்கின்றான் "யுத்தத்தை பெரும்பாலானவர்கள் விரும்புவதில்லைத்தான் ஆனால் அது தவிர்க்க முடியாமல் இருக்கின்றது. இப்பொழுது தமிழீழத்துடன் எங்களுக்கு நல்லுறவே இருக்கின்றது" இது எதனால் வந்தது என நீ நினைக்கின்றாய்" என இவன் கேட்க "பயத்தினால்" என மற்றவன் பதிலளிக்கின்றான்."சற்று விளக்கமாக சொல்லமுடியுமா?" "ஆம்"

"இப்பொழுது நாங்கள் ஏறக்குறைய ஒருவரை ஒருவர் மிஞ்சும் சமபலத்தில் உள்ளோம் யுத்தம் ஆரம்பித்தால் இருபகுதிகளிற்கும் மிஞ்சுவது அழிவே. இப்பயத்தினால்தான் நாங்கள் சமாதானமாக இருக்கின்றோம்" "சரியாகச் சொல்கின்றாய். இனிமேலும் யுத்தம் ஏற்படாதென்று கருதுகின்றாயா" "அவ்வளவிற்கு நான் முட்டாள் இல்லை ஏனெனில் 2100 வருடங்களிற்கு மேலாக இத் தீவில் மத, கலாச்சார, வாழ்க்கை முறைகளில் வேறுபட்ட இரு இனங்களாக வாழ்ந்து விட்டோம். பலயுத்தங்களையும் சந்தித்துவிட்டோம். இனியும் அதற்கு சந்தர்ப்பங்களுண்டு" "இவற்றுள் எமக்கு அவமானகரமான தோல்வியென எதை நீ கருதுகின்றாய்" அதிகாரியின் இக்கேள்வியுடன் உரையாடல் சிறிது இடைவெளி பெறுகின்றது. சற்று அவகாசம் எடுத்த உதவியாளன் "அது ஒரு தோல்வியல்ல, தொடரான தோல்விகளாகும், அதற்கு அவர்கள் ஓயாத அலைகள் எனப் பெயர் இட்டிருந்தனர்" எனக்கூறி முடிப்பதற்குள் இடையறுத்த அதிகாரி "அதனாற்தான் இருதேசம் இங்கு உருவானது. நம் தாய்நாட்டிற்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்க வேண்டும் என்ற ஆவேசம் உன்னில் எழவில்லையா?" "பாதுகாப்பு அமைச்சு உங்களை அழைக்கிறது" என பிரதான கணனி குரல் கொடுக்கின்றது. தன் தேசப்பற்றை அதிகாரி சந்தேகித்ததால் மன உளைச்சலிற்கு உட்பட்டவன் தன் கடந்த காலத்தை இரைமீட்டுகின்றான்.

தாய் நாட்டில்தான் கொண்ட பற்றும், விடாமுயற்சியும்தான் தன்னை இந்நிலைக்கு கொண்டுவந்து விட்டது. எனினும்தான் பாதுகாப்பு அமைச்சின் வட்டத்தில் உள்வாங்கப்பட்டதும் பூரண உடல் உள சோதனைக்கு உட்படுத்தப்பட்டதும் இரண்டு வருடங்களிற்கு முன்னர் தனது ஞாபகப் பகுதியில் இருந்து 1/2மணிநேரம் அழிக்கப்பட்டது போன்ற தொடர் நிகழ்வுகள் ஞாபகத்திற்கு வருகின்றன. அந்த 1/2 மணி நேரத்தில்தான் தனது உடலின் ஏதோ ஒரு பகுதியில் மிக நுண்ணிய 'சைகை கடத்தியானது' பொருத்தப்பட்டிருக்கவேண்டும். தான் எங்கு சென்றாலும் என்ன செய்தாலும் அவை முப்பரிமாணப் படங்களாக பதியப்பட்டுக் கொண்டிருக்கும். தனது பிரத்தியேக வாழ்க்கையும் இதற்கு விதிவிலக்கல்ல, தனது செயற்பாடுகள் பல்வேறு மட்டங்களிலுள்ள கணனிகளால் தொடர் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட வண்ணம் இருக்கும், தேசநலனிற்கு குந்தகமாக எது செய்ய முற்பட்டாலும் உடனேயே கண்டுபிடிக்கப்படுவேன், இத்துறையில் இருப்பவர்களிற்கு இது பொதுவானதே. இவ்வாறு தேச பாதுகாப்பிற்காகச் சிலர் தங்கள் பிரத்தியேக வாழ்க்கையை இழப்பது தவிர்க்கமுடியாததே என பலவாறு எண்ணியவன் என்ன இருந்தாலும் தனது மனம் இவர்களின் நாசகாரத்திட்டத்திற்கு முழுமையாக ஒப்பவில்லை என்பதை உணர்ந்துகொள்கிறான்.

பாதுகாப்பமைச்சு அழைப்பதாக அறிவித்த கணனியை நோக்கி "தொடர்பைக்கொடு" என ஆணையிடுகின்றான். உடனேயே அவ்இலத்திரனியல் திரையில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் தோன்றி "வேலைத் திட்டம் என்னமாதிரிப் போகின்றது" "முடிவு எப்பொழுது கிடைக்கும்" எனக் கேட்கிறார். முப்பரிமாணத்தை உணர்த்தும் வகையில் அத்திரையில் தோன்றும் காட்சிகள் அமைவதால் அது நேரடியாக உரையாடுவது போன்ற பிரமையையே ஏற்படுத்துகின்றது. "இன்னும் ஒரு மணித்தியாலத்தில் முடிவு வந்துவிடும்" என இவன் கூற "நல்லது கிடைத்தவுடன் எனக்கு தொடர்பெடுக்கவும்" எனக்கூறி அதிலிருந்து மறைகின்றார். உங்களிற்கு 1/2 மணித்தியாலம் ஓய்வு இருக்கின்றது. எனச் சுட்டிக்காட்டிய கணனியானது "ரம்மியமான சூழ்நிலை ஏதாவது தேவையா?" எனக் கேட்கிறது. "ஆம் (நயாகரா நீர் வீழ்ச்சி எனப் பதில் அளிக்கின்றான். உடனேயே தொலைவில் இருந்து நோக்கும் நயாகரா நீர் வீழ்ச்சியின் காட்சியானது அத் திரையில் தோன்றுகின்றது. அத்துடன் அவ்வறையினுள் அப்பிரதேசத்திற்குரிய குளிர்மையும் பரவுகின்றது. சிறிது நேரம் அப்புதிய சூழலை இரசித்துக்கொண்டிருந்தவன் தன் உதவியாளனை நோக்கிக் கேட்கிறான். "இத் திட்டம் பற்றிய உனது கருத்து என்ன?" "கொடுக்கப்படும் வேலைகளைச் செய்வதே நமது கடமை கருத்துக்களைத் தெரிவிப்பதல்லவே! எனத் தனது நிலையை உதவியாளன் தெளிவுபடுத்துகின்றான்.

அவன் குரலின் தன்மையிலிருந்து அவனுக்கு பூரண விருப்பம் இல்லையென்பது விளங்குகின்றது. அதனைக் கவனித்த அதிகாரி பின்வருமாறு கூறுகின்றான். "நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ சிலவற்றைச் செய்யத்தான் வேண்டும். இல்லையென்றால் இந்தப் போட்டி நிறைந்த உலகில் வாழும் தகமையை இழந்து விடுவோம். நாங்கள் எப்பொழுதும் எங்கள் பலத்தை மேல் நிலையில் வைத்திருத்தல் அவசியமாகின்றது. என்றவன் உதவியாளனின் கண்களூடு உற்றுப் பார்த்து அவன் எண்ணவோட்டத்தைக் கணிக்க முற்படுகிறான். இதனைப் புரிந்து கொண்ட உதவியாளன் தனது இறுக்கமான முகத்தைச் சற்றுத் தளர்த்தி புன்சிரிப்பொன்றை உதிர்த்த வண்ணம் "யுத்த காலத்தில் சமாதானத்திற்கு தயாராவதற்கும் சமாதான காலத்தில் யுத்தத்திற்கு தயாராவதற்குமாகச் செயற்பட வேண்டி இருப்பது வாழ்வியல் வழமை போலும்" எனக்கூறி முடிக்கிறான். "இவ்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வளவு அழிவுகள் தேவைதானா" எனவும் கேட்கிறான். அதற்கு அதிகாரி "நீ அழிவுகளைக் கண்டு பயப்படுகின்றாயா" அப்படியானால் யுத்தத்திற்கும் பயப்படுகின்றாய் என்றுதானே அர்த்தம்! எனக்கேட்கிறான். "ஆம் நான் விளைவுகளை எண்ணிப் பயப்படுகின்றேன். அதற்காக நான் எனது கடமையில் பின் நிற்பதில்லையே" எனக் கூறுகின்றான். "இது யுத்தத்தின் விளைவு உயிர்வாழும் சந்ததியை நேரடியாகப் பாதிக்காது என்பதனை அறிவாய்தானே?" "இல்லை உயிர்வாழ்தலின் அடிப்படையையே இது கேள்விக்குறியாக்குகின்றது" "நீ என்ன சொல்லவருகின்றாய் ஒவ்வொரு உயிரியும் தான் வாழ்வது மட்டுமன்றி தன் இனம் வாழ்வதற்கான ஒரு பாதுகாப்பான சூழலை உருவாக்குவதையும் தன் இயல்புக்குக் கொண்டுள்ளது" உண்மையில் ஆரம்பத்தில் யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் மட்டுமே நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர்" என இவர்கள் சம்பாசணை தொடர்ந்து கொண்டிருக்கையில் "நாசகாரத் தலைமையகம் உங்களை அழைக்கிறது" எனக் கணனி கூற "தொடர்பைக் கொடு" என்கின்றான். உடனேயே அத்திரையில் வயது முதிர்ந்த ஒருவர் தோன்றி "திட்டம் பூரணவெற்றி அடைந்துவிட்டது, நீங்கள் உரிய இடத்திற்கு அறிவிக்கலாம்" என்கின்றார், அவரின் முகபாவனையோ இரண்டாம் உலக மகாயுத்த முடிவில் யப்பானில் அணுகுண்டு ஏற்படுத்திய அழிவைக் கேள்வியுற்ற பொழுது விஞ்ஞானி ஐயன்ஸ்டீனின் முகம் எப்படி இருந்திருக்குமோ அப்படி தோற்றமளிக்கின்றது. அதிகாரி அவற்றிற்கு நன்றி தெரிவிக்க அவர் திரையில் இருந்து மறைகின்றார்.

இத்திட்டத்தின்படி அவர்கள் வித்தியாசமான கதிரொன்றைக் கண்டு பிடித்துள்ளனர். இது புற ஊதாக்கதிர் போன்றது. இதன் விசேடம் என்ன என்றால் குறித்த வேலையைச் செய்தவுடன் தானாகவே அமைப்பழிவுக்குள்ளாகி சூழலுடன் கலந்துவிடும்.



"இத்திட்டத்தின் முதலாவது வெற்றியென "நீ எதைக் கருதுகின்றாய்", என்ற அதிகாரியின் கேள்விக்கு மற்றவன் சற்று யோசித்துவிட்டு "தமிழர்களின் போர்க் குணத்திற்கு காரணமாக இருக்கும் மரபணுப்பகுதியை பிரித்தறிந்து கண்டு பிடித்தது" என்கிறான். தொடர்ந்து இவன் அதற்காக ஒரு தமிழ் உயிரையும் நாங்கள் பலி எடுத்துவிட்டோம் என்று அவ்விடத்துக்கு அவசியமில்லாத உண்மையையும் சொல்லிவிடுகின்றான். "அது கிடக்கட்டும் வெற்றியின் மகத்துவத்தைப் பூரணமாக விளங்கிக்கொள்கின்றாயா" எனக்கேட்க "ஆம்" என்றவன் தொடர்கின்றான். இக்கதிரை நாங்கள் தமிழர்களின் மீது பிரயோகிப்போம். அது அவர்களின் இனப்பெருக்க கலங்களிலுள்ள போர்க்குணத்திற்குப் பொறுப்பாக இருக்கும் மரபணுப் பகுதியை மட்டும் விகாரத்திற்கு உட்படுத்தும். இதனால் அவர்களின் சந்ததியில் ஒரு % மேனும் போர்க்குணம் கடத்தப்படாது அவர்கள் எங்கள் நவ ஆதிக்கத்திற்கு உட்படுவார்கள். கிட்டத்தட்ட 100% மனித சிந்தனை ஆற்றலுடன் தொழிற்படும். ஆனால் எங்கள் கட்டுப்பாட்டில் இயங்கும் றோபோக்கள் போல் அவர்களை நாங்கள் பயன்படுத்தலாம்" என கூறிமுடிக்க அதிகாரியோ தனது இருக்கையிலிருந்து எழுந்து, இவன் அருகில் வந்து முதுகில் தட்டிக்கொடுத்து "சரியாகச் சொன்னாய், சாடிக்கேற்ற மூடிபோல் எனக்கு வந்து வாய்த்துள்ளாய்" என்கின்றான். "இதை மேலிடத்திற்கு அறிவித்த உடனேயே எனக்கும், உனக்கும் பதவியுயர்வும் கௌரவமும் கிடைக்கும்" அக்கூற்றில் பெரிதாக நம்பிக்கை வைக்காத உதவியாளனிற்கு முன்னர் நடந்த சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது.

சுமார் பதினைந்து வருடங்களிற்கு முன்னர் தமிழீழம் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு பக்ரீரியாக்களைப் பாவிக்கும் தொழில் நுட்பத்தில் மிக முன்னணியில் நின்றது. இதனால் உலக சந்தை வாய்ப்பை இலகுவாக கைப்பற்றிக் கொண்டது. இதனைப் பொறுக்காத வேறு சில சக்திகளுடன் சேர்ந்து சதித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி குறித்த பக்ரீரியாக்களின் புரத உறையை அழிப்பதற்காக இரசாயனக் கலவை தயாரிக்கப்பட்டது. அதேவேளை அதற்கான மாற்றுக் கலவையும் தயாரிக்கப்பட்டது. இதனால் தமிழீழத்தின் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஆட்டங்காணவைத்து, தங்குநிலையொன்றைத் தோற்றுவிக்கும் முயற்சி தோற்றுவிக்கப்பட்டது. அது கைகூடும் போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. என்னவென்றால் தமிழீழம் பாவித்த பக்ரீரியாக்களுக்கு வைரஸ்போன்ற தங்கள் புரத உடல்களை அடிக்கடி மாற்றிக்கொள்ளும் வல்லமை புகுத்தப்பட்டது. இதனால் இவர்கள் திட்டம் தவிடுபொடியானதுடன் பாரிய சக்தி விரையம் ஏற்பட்டதே மிகுதியானது.

மேற்படி விடயத்தை ஞாபகப்படுத்தியவன் "எதற்கும் நாங்கள் சற்றுப் பொறுப்போம்" எனக்கூற அதிகாரி "ஏன்?" எனச் சற்று சினத்துடன் கேட்கின்றான். அப்பொழுது "தமிழீழத்திலிருந்து உங்களிற்கு அவசரத் தகவல் வந்துள்ளது" எனப் பிரதான கணனியானது குரல் கொடுக்கின்றது. தொடர்பிற்கான அனுமதியைப் பெற்றவுடன் அத்திரையில் முதலில் விரிந்த காட்சியானது அச்சூழ்நிலைக்கு தொடர்பற்றதாகவே இருக்கின்றது. இரு நாடுகளும் உருவாவதற்கான இறுதிப்போரில் ஏற்பட்ட உயிரிழப்பு, சொத்திழப்பு போன்றவற்றின் சுருக்கமான விபரம் ஒளிபரப்பப்படுகின்றது. "இதை ஏன் இவர்கள் இப்ப போடுகின்றார்கள்" என அதிகாரி சலித்துக்கொள்ளும்போது எழுத்தோட்டமாகவே செய்தி தொடர்கின்றது. "நீங்கள் இப்பொழுது எதிர்காலத் தமிழர்களின் போர்க்குணத்தை இல்லாதொழிக்கும் மரபணுவிகாரமாகி கதிரொன்றைக் கண்டுபிடித்துள்ளீர்கள். இது ஒரு, வள வீணடிப்பு செயற்பாடாகும். ஏனெனில் தற்போது இருக்கும் தமிழர்களின் எல்லாக் கலங்களிலும் எதிர் மரபணு விகாரமாக்கி" ஏற்படுத்தப்பட்டுவிட்டது. சந்தேகம் இருந்தால் அதற்கான தகவல்களையும் சமன்பாட்டையும் பின்வரும் தகவல் பெட்டியிலிருந்து நீங்கள் பெற்று வாய்ப்புப் பார்க்கலாம்" எனத் தொடர்ந்து அதற்கான இலக்கியங்களும் வெளியிடப்படுகின்றது. மேலும் சிறீலங்கா அரசிற்கு உத்தியோக பூர்வமாக அனுப்பப்பட்ட வேண்டுகோள் ஒன்றின் நகல் உங்களிற்கும் தரப்படுகின்றது.

அதாவது அமெரிக்க மக்களிடையே புதிய நோய் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்கு மரபணு விகாரமானதே காரணம் என்று அறியப்பட்டுள்ளது. அதற்கான மாற்றுவழி கண்டுபிடிக்கத் தாமதமாகும் ஒவ்வொரு கணமும் பலநூறு குழந்தைகள் அந்நோயுடன் பிறந்த வண்ணம் இருப்பார்கள். அதனைத் தடுப்பதற்கான ஆராய்ச்சிகள் உலக மரபணுப் பகுப்பாய்வு ஒன்றியத்தால் முடுக்கி விடப்பட்டுள்ளது. அதற்குத் தலைமை தாங்கும் நாடு என்ற வகையில் தமிழீழம் உங்களிடமிருந்து பூரண ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றது என முடிய இத் திரையின் ஒளிர்வு அடங்குகின்றது. அதில் தற்பொழுது வளங்கொழித்துக் கொண்டிருக்கும் ஆனால், ஐம்பது வருடங்களிற்கு முன்னர் கண்ணுக்கெட்டிய தூரம்வரை மணற்பரப்பாக காணப்பட்ட சகாராப் பாலைவனத்தின் காட்சியும் வெம்மையும் தோன்றுவதுபோன்ற பிரமையை அவ்வதிகாரி உணர்கின்றான்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# தொலைபேசி உரையாடல்

விலை நியாயமானது போலிருந்தது.
இடம்...? பிரச்சினையே இல்லை
வீட்டுக்காரி சத்தியம் செய்தாள்
அந்த வளவில்
தான் வாழ்ந்ததில்லையாம்.
ஒப்புதல் வாக்குமூலம் தவிர
எதுவுமே எஞ்சியிருக்கவில்லை.
"வீணான பயணங்களை
வெறுக்கிறேன் 'மடம்'
நான் ஓர் ஆபிரிக்கன்"
அவளை எச்சரித்தேன்.

நீண்ட அமைதி....
அந்த அமைதியினூடே
உணர்த்தப்பட்டன
பெருங்குடி வளர்ப்பின் அழுத்தங்கள்.
குரல் மீண்டும் வந்தவேளை
உதட்டுச் சாயம் பூசியிருந்தது.
தங்க முலாமிட்ட குழாயில்
சிகரட்டை ஊதிக் கொண்டிருந்தது
நான்தான்
மோசமாக மாட்டிக்கொண்டேன்.

"நீ எவ்வளவு கறுப்பு?"
எனக்கு அப்படித்தான் கேட்டது
"வெளிறிய நிறமா?
நல்ல கறுப்பா?"
பொத்தான் அ
பொத்தான் ஆ
பகிரங்க கண்ணாமூச்சி விளையாடும்
வார்த்தைகளின் சுவாசத்தில்
மூக்கை அரிக்கும் நாற்றம்
சிவப்புச் சந்தை
சிவப்புக் காப்பரண்
இரட்டைத் தட்டுச்
சிவப்புப் பேருந்து தாராளவே
புகை கக்கிக்கொண்டிருக்கிறது.

மரபு பிறழ்ந்த அமைதி
என்னைக் கேலி செய்துகொண்டிருந்தது.
சரணாகதியாகு....
வாயைப் பிளக்க வைத்த
வியப்பை
விளக்கம் கோரத் தூண்டினேன்.
இப்போது
தொனியை மாற்றிக் கொண்டாள்
"நீ கறுப்பா.... வெளுப்பா....?"
விடயம் விளங்கியது.
"பால் கோப்பியா..... வெறுங்கோப்பியா
என்கிற மாதிரியா?"
இயந்திரத்தனமாய் வந்த
ஆமோதிப்பின் ஒளியில்
யாரோவாக இருக்கும்
முயற்சி நொருங்கிப் போயிற்று.



எழுதியர் : வோல் ஸோயிங்க
தமிழில் : வின்சென்ற் புளோறன்ஸ்

வேகமாய்
என் அலைவரிசையைச்
சரி செய்து கொண்டேன்
"மேற்காபிரிக்கச் செப்பியன்
என்றவன்
மின்னலாய் வெட்டிய எண்ணத்தில்
"என் கடவுச் சீட்டில்
அப்படித்தான் உள்ளது"
சேர்த்துச் சொன்னேன்.
கற்பனையில் நீந்தவிட்ட
நீண்ட அமைதி.
ஒலித்த குரலில்
ஒளிவு மறைவுகள் இல்லை.
"அப்படியென்றால் என்ன?
எனக்குப் புரியவில்லை"

"மா நிறம் மாதிரி"
"அதாவது கறுப்பு அல்லவா?"
"எல்லாம் அப்படி அல்ல
முகம் மாநிறந்தான்
ஆனால். நீங்கள் மீதமுள்ள
என்னைப் பார்க்கவேண்டும்.
உள்ளங்கால் உள்ளங்கை
வெளுப்பாகிய பொன்நிறம்
முட்டாள் தனமாய்
கீழே குந்தியதில்
வந்த உராய்வில்
என் குண்டி மட்டும்
கடும் கறுப்பாகிவிட்டது"

அவளுடைய தொலைபேசி
இடி முழக்கங்களை
என் காதில் பொழியமுன்
முந்திக் கொண்டேன்
"ஒரு நிமிடம் 'மேடம்'
இதைவிட
என்னை நேரில் பார்த்து
நீங்களே தெரிந்துகொள்ளலாமே"
செல்லமாய்ச் சொன்னேன்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இதழியல் சில அடிப்படைச்செய்திகள்

கலாநிதி க.சோமாஸ்கந்தன்

**அறியவேண்டும் என்ற ஆவலுக்கு நிகராக சொல்லவேண்டும் என்ற உந்துதல் மனித இயல்பில் காணப்படுகின்றது. இதழியலின் அடிப்படைக்கு தத்துவமாக இதைக் கொள்ளலாம்.**



அறியவேண்டும் என்ற ஆவலுக்கு நிகராக சொல்லவேண்டும் என்ற உந்துதல் மனித இயல்பில் காணப்படுகின்றது. இதழியலின் அடிப்படைக்கு தத்துவமாக இதைக் கொள்ளலாம். 3,000 வருடங்களுக்கு முன் ஆட்சி செய்த எகிப்திய மன்னன் ஆமென்கோதெப் தனது மாநில நிர்வாகிகளுக்கு தலைநகர் செய்திகளை அனுப்பும் வாடிக்கையைக் கொண்டிருந்தான். 2,000 வருடங்களுக்கு, முந்திய ரோம சாம்ராச்சியத்தில் பிறிதோர் நடப்பு இருந்தது. 'நாளாந்திர நடப்புக்கள் (இலத்தீன் மொழியில் ACTA DIURNA) என்ற மகுடத்தின் கீழ் பகிரங்க அறிவித்தல்கள் தலைநகரின் பலபகுதிகளில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன. இவை இரண்டும் பத்திரிகையின் வரலாற்றுத் தொடக்கங்களாக நோக்கப்படுகின்றன.

இருப்பினும் தற்காலப் பத்திரிகையின் காலம் பதினைந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் (1440) தொடங்குவதாக கணிக்கப்படுகின்றது. அச்சு இயந்திர சாதனங்களின் வருகை, மீள்பாவனைக்குரிய வார்க்கப்பட்ட தனித்தனி அச்சு எழுத்துக்களின், புதிய அச்சுக் கோப்பு முறைகள், வேக அச்சுப்பதிவு என்பன இக்காலப்பகுதியில் ஐரோப்பாவில் தோன்றின. இவை கூட்டாக ஒரு புதிய சகாப்தத்தை தோற்றுவித்தன. குறைந்த செலவில், கூடிய எண்ணிக்கையில், குறைந்த நேரத்தில் பிரசுரங்களை வெளியிடும் வாய்ப்பு உருவாகியது.

கைத்துண்டுகளும், பத்திரிகைகளும், பைபிள் போன்ற மத நூல்களும் தோன்றுவதற்கு மேற்கூறியகண்டுபிடிப்புக்கள் துணை புரிந்தன. சிரமமான வெளியீடுதான் பத்திரிகைத் தொழிலின் அடிப்படை இரகசியம். குறித்த நேரத்தில் நாளாந்தம் அல்லது வாரம் ஒருமுறை அல்லது வேறொரு வெளியீட்டுத் திட்டப்படி அது வெளிவந்தே ஆகவேண்டும். பத்திரிகை ஒரு விற்பனை பண்டம். மக்கள் தான் அதை வாங்கவேண்டும். தவறினால் அது படுத்துவிடும்.

இலாபகரமாக இயங்கிய முதலாவது ஆங்கிலத் தினசரி இங்கிலாந்துத் தலைநகர் இலண்டனில் இருந்து வெளிவந்தது. அதனுடைய பெயர் 'டெயிலி குரான்ற்' (DAILY COURANT) அது இலாபம் ஈட்டத் தொடங்கிய வருடம் 1702. மக்கள் கல்வித் தராதரம் உயர பத்திரிகைகளின் தேவை பெருகத் தொடங்கியது. இதனால் இரு அனுகூலங்கள் தோன்றின. ஒரே பத்திரிக்கையின் பல பிரதிகளை அச்சிட்டு விற்பனை செய்யமுடியும். இழப்பு நேரிடாது என்று துணிவுடன் பல பத்திரிகைகளை வெளியிட முடிந்தது. எல்லாவற்றிற்கும்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மேலாக கல்வி உயர்வுக்கு அச்சுக்கலை பேருதவி புரிந்தது. மலிவான பாடநூல்களை வெளியிட முடிந்ததல்லவா? எனவே பத்திரிக்கைத் தொழிலுக்கும் நாட்டின் கல்வி நிலைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை உணர முடியும்.

விற்பனையைப் பெருக்குவதற்கும், மக்களின் பத்திரிகைத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் வேகமான, தயாரிப்புச் செலவைக் குறைத்தும் அச்சு எந்திர சாதனங்கள் உருவாக்கப்பட்டன. மலிவான விலையில் கூடுதலான பத்திரிக்கைகளை விநியோகிக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. ஒரே பத்திரிக்கையின் காலைப் பதிப்பு, மாலைப் பதிப்பு, வார இறுதிப் பதிப்பு, விசேட பதிப்பு என்று பல்வேறு வெளியீடுகளை பிரசுரிக்க முடிந்தது. பிரசுரிப்பதை சந்தைப்படுத்தலாம், மக்களுக்கு விற்பனை செய்வதில் கடினமில்லை போன்ற எதிர்பார்ப்புக்கள் பத்திரிக்கை வளர்ச்சிக்கு வேகம் கூட்டின.

மிகவும் விலைகுறைந்த ஆங்கிலப் பத்திரிகை நியூயோர்க் நகரில் பென்ஜிமின் டே (BENJAMIN DAY) என்பவரால் 1833 இல் ஆரம்பிக்கப்பட்டது. அதனுடைய விலை ஒரு பென்னி [PENNY] மாத்திரமே. இது எங்களுடைய இரு சதங்களுக்குச் சமம். இதில் செய்திகள் மிகவும் சுருக்கமாக ஆனால் மிகவும் சுவாரஸ்சியமாகத் தரப்பட்டிருக்கும். மனித வாழ்வுடன் தொடர்புடைய செய்திகளுக்கு இதில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அதாவது திடீர் திருமணங்கள், விவாகரத்துக்கள், செல்வந்தர்களுடைய காதல் லீலைகள் போன்ற அம்சங்கள் கூடுதலாகக் காணப்பட்டன.

பத்திரிக்கை உலகில் முதன்முதலாக நீதிமன்ற வழக்குகள் பற்றிய செய்திகள், காவல்துறையினர் செய்யும் கைதுகள், விசாரணைகள், நகரில் நடக்கும் குற்றச் சம்பவங்கள் போன்றவற்றைத் தேடிப் பெற்றுப் பிரசுரித்த பெருமை பென்ஜிமின் டே பிரசுரித்த பத்திரிகையைச் சாரும். 'கிறைம் றிப்போட்டிங்' (CRIME REPORT-ING) பத்திரிகை உலகில் முக்கிய இடம் வகிக்கின்றது. தாம் குற்றஞ் செய்ய அஞ்சினாலும் பிறருடைய குற்றச்செயல்கள் பற்றிய நுண்விவரங்களையும் பின்னணியையும் அறியத் துடிப்பது மனித இயல்பு. இதற்குத் தீனி போடுவதில் பென்ஜிமின் டே வெற்றி ஈட்டினார்.

இக்காலப்பகுதியில் ஆங்கிலம் உட்பட ஐரோப்பிய மொழிகள் யாவற்றிலும் பத்திரிக்கைக்கென்றே பிரத்தியேகமான சொற்பிரயோகங்களும் மொழிநடையும் உருவாகத் தொடங்கின. இவை ஒரு புதிய கலையாக வளர்ச்சி பெற்று இன்று 'ஜேர்னாலிசம்' (JOURNALISM) என்ற நவீன துறையாக இடம்பெறுகின்றது. 'எங்கே



சுண்டினால் எங்கே துடிக்கும்' என்பதை அறிந்து வைத்திருப்பதே இதழியல் எனப்படும். ஜேர்ணாலிசத்தின் அடிப்படை நோக்கம் சில குறிப்பிட்ட சொற்களை பத்திரிகைச் செய்தியில் பயன்படுத்தும்போது மனித உள்ளத்தில ஒரு குறிப்பிடத்தக்க பிரதிபலிப்பு உருவாகும். எல்லாச் சொற்களுக்கும் இந்தச் சக்தி இல்லை. சில சொற்கள் கலைச்சொற்களாக மாறியுள்ளன. அவற்றையும் இதழியலாளர்கள் தவறாது பயன்படுத்துகின்றனர். வழமையான பேச்சு மற்றும் எழுத்து மொழிக்கு அப்பாற்பட்டதாக, வேறுபட்டதாக இதழியல் மொழி அமைகின்றது.

இதழியல் ஒரு கற்கை நெறி, அதற்கென கல்விக் கழகங்கள் நிறைய உண்டு. பயிற்சி வகுப்புக்கள் பயிற்சிப் பாசறைகள் இதழியல் கல்வியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதழியலாளர்கள் பிறப்பதில்லை, அவர்கள் கடும் முயற்சியால் உருவாகின்றார்கள். பத்திரிக்கைத் தொழிலில் அதியுயர் நிலைக்குச் சென்றோர் மிகக் குறைவு. அவர்களுடன் பேசிப் பார்த்தால் அவர்கள் அந்த நிலைக்கு வர, எடுத்த கடின உழைப்பின் தன்மை விளங்கும்.

மேற்கில் படித்துப் பட்டம்பெற்ற பின்புதான் பத்திரிகைத் தொழிலுக்கு வருகிறார்கள். பட்டப்படிப்பு அவர்களுக்கு ஒரு நங்கூரம் போன்று விளங்குகின்றது. பல பல்கலைக்கழகங்கள் இதழியலையும் ஒரு பாடமாக அல்லது முழு அளவு கற்கை நெறியாக வழங்குகின்றன. அரசியல், பொருளாதாரம், வரலாறு, சமூகவியல், இசை, ஓவியம் போன்ற கலைகள் பற்றிய பட்டப் படிப்புக்களுடன் இதழியலையும் இணைத்துப் படிப்போர் எண்ணிக்கை மிகவும் அதிகம். எல்லாவித அறிவு வகைகளுக்கும் இதழியலில் இடமுண்டு. பல்திறன் மிக்கோர் இத்துறையில் வெற்றியும் முன்னேற்றமும் காண்கின்றனர்.

விஞ்ஞானம், மருத்துவம், வர்த்தகம், தொடர்பியல், அனைத்துலக விவகாரங்கள், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் கால்பதித்ததோடு பல சாதனைகளையும் புரிந்தவர்கள் பத்திரிக்கைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் விடயதானம் செய்கின்றனர். கல்வியில் முன்னேற்றம் காணமுடியாவிட்டால் எழுத்துத் துறைக்குப் போகலாம் என்ற தவறான எண்ணம் எம்மத்தியில் நிலவுகின்றது. இந்த எண்ணம் எமது இதழியல் வளர்ச்சிக்கு தீங்கு விளைவிக்கின்றது. சிறீலங்காவில் கூடச் சில இளைப்பாறிய உயர் இராணுவ அதிகாரிகள் பத்திரிக்கையாளர்களாக தொழில் புரிகின்றனர்.

ஆரம்ப நிலையிலும் பார்க்க இன்றைய பத்திரிக்கைகள் வியத்தகு முன்னேற்றம் அடைந்துள்ளன. அடிப்படை வசதிகளான அதிநவீன எந்திர சாதனங்களும், பல்வர்ண அச்சு மைகளும் பத்திரிகைகளுக்கு மெருகூட்டியுள்ளன. பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் படங்கள் கறுப்பு வெள்ளை நிலையைத் தாண்டி 'இயற்கை வர்ண' நிலையை அடைந்துள்ளன. பத்திரிகைகளின் பக்கங்கள் முன்பு இருந்ததும் பார்க்க பன்மடங்கு கூடிவிட்டன. அத்தோடு பத்திரிகைகள் தாங்கிவரும் அம்சங்களும் பலதரப்பட்டவையாக அமைகின்றன. இன்றைய சராசரிப் பத்திரிகையின் உள்ளடக்கம் பற்றிப் பார்ப்போம்.

1. தலைப்புச் செய்தியும் பிற செய்திகளும்
2. செய்திக் கட்டுரைகளும், பல்சுவைக் கட்டுரைகளும்
3. ஆசிரியர் தலையங்கம்
4. பத்தி எழுத்துக்கள்
5. கேளிக்கைப் பகுதி- சினிமா, விளையாட்டு, மேடை நாடக விமர்சனம்.
6. விளம்பரம்

இதழியலின் முக்கிய கடமை வெளியூர் செய்திகளைத் திரட்டி, ஒழுங்குபடுத்தி, அச்சிட்டு, செய்தி பழையதாகமுன், இயன்றளவு வேகமாக விற்பனைக்கு விடுவதாகும். இலவசமாகப் பத்திரிகைகள் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் அவை பெறுமதியற்றவை. ஒவ்வொன்றையும் கூர்ந்து கவனியுங்கள் செய்திகளைத் திரட்டுதலுக்கு வருவோம். செய்தி திரட்டலுக்கு பத்திரிகை உலகில் செய்தி சேகரிப்பும் நிருபர்களும், செய்தி திரட்டி பத்திரிகைகளுக்கும், வானொலி-தொலைக்காட்சி நிலையங்களுக்கும் கொடுப்பவர்கள் காணப்படுகின்றனர். செய்தி சேகரிப்பில் ஒரு முக்கிய அம்சம் காணப்படுகின்றது. அதுதான் 'ஸ்கூப்' (SCOOP)

பிற நிருபர்கள், செய்தி சேகரிக்கும் நிறுவனங்கள் ஒரு குறிப்பிட்ட செய்தியைப் பற்றி அறியமுன்பு அதைமிகவும் இரகசியமான முறையில் கைப்பற்றி ஒரே ஒரு பத்திரிகையில் மாத்திரம் வரச்செய்வது 'ஸ்கூப்' எனப்படும். இதழியல் உலகில் இது ஒலிம்பிக்ஸ் சாதனையாகக் கருதப்படுகின்றது. வேறு யாதொரு பத்திரிகையும் பிரசுரிக்காத அதிமுக்கிய செய்தியை வெளியிடுவதால் அப்பத்திரிகை பேரும் பெறுவதோடு மக்கள் மத்தியில்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கேட்பதைக் கொடுப்பதில்லை, நாம் விரும்பியதைக் கேட்ட வைக்கிறோம்" என்று தொடர்பூடகத்துறை சம்பந்தமான கருத்து நிலவுகின்றது.

# இதழியல் திலு அடிப்படைச்செய்திகள்

செல்வாக்கும் பெறுகின்றது. அதே நேரத்தில் அப்படியானதொரு செய்தியை மோப்பம்பிடித்து அனுப்பி வைக்கும் நிருபர் அல்லது செய்திநிறுவனமும் பேரும் புகழுடன் நல்ல வருமானமும் பெறுகின்றது. 'ஸ்கூப்' செய்தியை வழங்குவதற்கு ஊக்குவிப்பாகக் கூடுதல் பணம் கொடுபடுகின்றது. ஸ்கூப் செய்தியைத் தாங்கிவரும் பத்திரிகை கூடுதலாக விற்பனையாகின்றது. அதனால் கூடுதலான பிரதிகளை அச்சிட வேண்டியிருக்கின்றது.

ஒரு பத்திரிகை நிருபர் பிறிதொருவர் பெற இயலாத செய்தியைப் பெறுகிறார் என்றால் அதன் இரகசியம் என்ன? இதற்கு 20 ஆம் நூற்றாண்டின் மிகப் பிரபலமான அமெரிக்கப் பத்திரிகையாளர் ஜேம்ஸ் றெஸ்ரன் பற்றிச் சிறிது ஆய்வு செய்யவேண்டும். இரகசியம் ஒன்றுமில்லை, எல்லாம் தொடர்புதான் காரணம். ஜேம்ஸ் றெஸ்ரன் (JAMES RESTON) பலமட்டங்களில் தொடர்புகளை வைத்திருந்தார். இவர் அமெரிக்காவின் உயர்மட்டத்தினரோடு நெருங்கிப் பழகினார். காலப்போக்கில் அவர்களுக்கு மிகவும் வேண்டியவராகவும், யோசனை கூறும் நிலையில் உள்ளவராகவும் இடம்பெற்றார்.

றெஸ்ரன் டிசம்பர் 1995 இல் தனது 86 ஆம் வயதில் மரணமடைந்தார். 1940 கள் தொடக்கம் மிக அண்மைக் காலம் வரை அவர் அமெரிக்கப் பத்திரிகை தொழிற்துறைத் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். அவர் எழுதிய ஆங்கிலம் மிகவும் நேர்த்தியானது. அவருடைய தொடர்புகளின் பயனாய் அவர் தனது பெயரில் வெளியிட்ட செய்திகளில் 'நம்பகத்தன்மை, நேர்மை மற்றும் அதிகாரத் தொனி' என்பன காணப்பட்டன. ஆட்சியாளர்களின் ஊதுகுழல் என்ற குற்றச்சாட்டும் செய்திகளை அறியும் வேறு வாய்ப்பு இல்லை என்ற நிலையும் இறுதிவரை தொடர்ந்தது.

அன்றும் இன்றும் அமெரிக்காவின் அதிகாரபூர்வமான செய்திப் பத்திரிகை நியூயோர்க் ரைம்ஸ் (NEW YORK TIMES) பத்திரிகைதான். வாஷிங்ரன் தலைநகரிலுள்ள இப்பத்திரிகைகள் செய்தி அலுவலகத்தின் தலைவராக றெஸ்ரன் 50 வருடங்களுக்கு மேல் பதவிவகித்தார். அவர் அரசபீடத்தின் உள்வீட்டுப்பிள்ளை அரசில் சிந்தனையையும் செயலையும் அறிவதற்கு றெஸ்ரன் கூறுவதைப் படிக்கவேண்டிய கட்டாயம் உலகின் அரசியல் தலைவர்களுக்கு இருந்தது. 'பனிப்போர் காலத்தின் செய்தி விநியோகஸ்தர்' (THE NEWS SALESMAN OF THE COLD WAR ERA ) என்று றெஸ்ரன் வர்ணிக்கப்படுகின்றார்.

இவர் கைபற்றிய மிகப்பெரிய 'ஸ்கூப்' பற்றிப் பார்ப்போம். ஆங்கில இலக்கிய விமர்சனக் கலையை கோட்பாட்டு வடிவமாக்கி நூலுருவாக்கிய டாக்டர் ஐ.ஏ. றிச்சார்ட்ஸ் கூற்றுப்படி ஐ. நா. அமைப்பின் சாசனப் பிரதியை முதன்முதலாக றெஸ்ரன் உலகுக்கு வெளிப்படுத்தினார். இதுதான் சென்ற நூற்றாண்டின் மிகப்பெரிய பத்திரிகை 'ஸ்கூப்' என்று இப்பேராசிரியர் வர்ணிக்கிறார். ஒரு பத்திரிகையாளன் நிகழ்ச்சிகள் நடைபெறும் இடத்திற்கு அருகாமையில் இருக்கவேண்டும் என்பது பொதுவிதி. நிகழ்ச்சிகள் எங்கு நடக்கும், எப்போது நடக்கும் என்பவற்றை அறிதல் அவனுடைய புத்திக்கூர்மையிலும் அனுமான சக்தியிலும் தங்கியுள்ளது.

'குருதித் தீவு' (ISLAND OF BLOOD) என்ற வாழ்க்கை நூலை வெளியிட்ட அனிதா பிரதாப் என்ற இந்தியப் பத்திரிகையாளர் இது பற்றிக் குறிப்பிடும்போது, தனது தொழில் வெற்றியின் இரகசியம் பற்றித் தெரிவிக்கிறார். நிகழ்ச்சிகளின் முக்கியத்துவம், அவற்றோடு தொடர்புடையோரின் முக்கியத்துவம் பற்றிய கணிப்பீட்டைத் தன்னால் துல்லியமாகச் செய்யமுடியும் என்கிறார். இதற்கு ஆழ்ந்த ஈடுபாடுதான் காரணமென்று அவர் விளக்கம் கூறுகிறார். சிம்பாப்வே நாட்டு எழுத்தாளர் வில்பர் ஸ்மீத் என்ன சொல்கிறார் என்றால் - பெண் பத்திரிகை நிருபர்களுக்கு பெண் என்ற பாலியல் அனுகூலம் எப்போதும் இருக்கத்தான் செய்கின்றது.

ஜேம்ஸ் றெஸ்ரனுக்கு நேர் எதிரான பத்திரிகையாளர் தென் ஆபிரிக்காவின் பென்ஜிமின் போகுருண்ட் (PENJAMIN POGRUND) இவர் பிறப்பால் ஒரு யூதர் ஆனால் கொள்கை ரீதியாக வெள்ளை நிறவெறி அரசை எதிர்த்த தீவிரவாதி. அடக்குமுறைக்கு எதிராகப் போராடிய பத்திரிகையாளர் வரலாற்றில் இவருக்கு நிரந்தர இடமுண்டு. 'றாண்ட் டெயிலி மெயில்' (RAND DAILY MAIL )என்ற கறுப்பு இனத்தவர்களுக்குச் சார்பான பத்திரிகையில் இவர் நிருபராக கடமை ஆற்றியவர். இவர் மிகவும் சொற்ப ஊதியம் பெற்றுவந்தார்.

பத்திரிகையில் இவருடைய செய்திக் குறிப்புக்கள் இலண்டன் சண்டே ரைம்ஸ் (SUNDAY TIMES) மறுபிரசுரம் செய்யப்பட்டன. சார்ப்வில் படுகொலைகளை உலகிற்கு வெளிப்படுத்திய பெருமை போகுருண்டுக்கு உண்டு. 1960 ஆம் ஆண்டு அமைதி ஊர்வலம் நடத்திய கறுப்பர்கள்மீது வெள்ளைப் பொலிசார் கண்மூடித்தனமாக சுட்டனர். பலர் மடிய நேர்ந்தது. போகுருண்ட் அனுப்பிய செய்தி உலகின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்பியது. 30 வருடம் இவர் தனது பணியைத் தொடர்ந்தார். உண்மையை உலகிற்கு வெளிப்படுத்துவது அப்போதைய தென் ஆபிரிக்காவில் மிகவும் துணிச்சலான காரியம். இவர் பலமுறை பொலிஸ் மற்றும் நீதித்துறை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலானவர் என்ற குற்றம் இவர்மீது சுமத்தப்பட்டது.

றெஸ்ரன் வேறு, போகுருண்ட் வேறு ஆனால் இருவரும் பத்திரிகை நிருபர்களே. ஒருவர் பணம் சம்பாதித்தார். மற்றவர் ஒரு இனத்தின் நன்மதிப்பை பெற்றார். புதிய தென் ஆபிரிக்காவின் தலைவர்கள் இவரைப் போற்றிப் புகழ்வதில் இன்பம் காண்கின்றனர். 'சொற்போர்' (WAR OF WORDS) என்ற வாழ்க்கை நூலை போகுருண்ட் சென்ற வருடம் பிரசுரித்துள்ளார். (2000)

தலைப்புச் செய்தி பற்றிய ஆய்வுக்கு இப்போது வருவோம். ஒரு பத்திரிகையின் முக்கிய பகுதி தலைப்புச் செய்தி மாத்திரமே என்று அடித்துக் கூறுவோர் உளர். ஆனால் இது வாதப்பிரதிவாதங்களுக்கு உட்பட்ட அபிப்பிராயம். ஒரு பத்திரிகையை விற்பனை ஆக்குவது தலைப்புச் செய்தியும் அதற்குமேலுள்ள தலைப்பு வரியும் என்பதில் சந்தேகமில்லை. எதைத் தலைப்புச் செய்தி ஆக்குவது என்பதை பத்திரிகை ஆசிரியர் தீர்மானிக்கிறார். தலையங்கம் என்றும் அழைக்கப்படும் தலைப்பு வரியை அதில் கைதேர்ந்தவர்கள் உருவாக்குகிறார்கள். 'ஹெட்லைன்' (HEDLINE) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் தலைப்புவரி துடிப்பாகவும், வாசகர்கள் ஆர்வத்தைத் தூண்டும் விதமாகவும், விற்பனைப் பெருக்கும் சாதனமாகவும் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். 'தலைப்பு வரிச் செய்தி' (HEDLINE NEWS) என்ற சொற்றொடர் இதழியல் காணப்படுவதின் விளக்கமாக இது அமைகின்றது.

பத்திரிகைகளில் ஒரு ஒழுங்கும் அமைப்பு விதிமுறையும் இருப்பது கண்கூடு உள்ளூர் செய்திகள், வெளியூர் செய்திகள், தமது வழமையான இடங்களில் அச்சிடப்படுகின்றன. ஒவ்வொரு நாளும்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இடத்தை மாற்றும் வழக்கம் குழப்பத்தையும் விற்பனை வீழ்ச்சியையும் ஏற்படுத்தும் எல்லாப் பத்திரிகைகளும் ஒரே விதமான ஒழுங்கில் இருக்கவேண்டியதில்லை. வசதிபோல் ஒழுங்கு செய்யலாம். ஆனால் ஒழுங்கை அடிக்கடி மாற்றக்கூடாது. பத்திரிகையின் பெயர் கூறும் எழுத்துக்கள் ஒரே பருமனிலும் ஏலுமானால் ஒரே நிறத்திலும் இருப்பதும் இதையொத்த அவசியமாகும். பொருட்களை பொதி செய்து, விற்பதை 'பக்கேஜிங் (PACKAGING) என்பார்கள். பத்திரிகையும் ஒரு பொருள்தான். அதைப்பொதி செய்யும் விதம் மாறாமல் இருந்தால் கொள்வனவு செய்வோருக்கு குழப்பம் ஏற்பட வாய்ப்பில்லை.

செய்திக் கட்டுரைகளும், பல்சுவைக் கட்டுரைகளும் தினசரிப்பத்திரிகைகளில் குறைந்த எண்ணிக்கையிலும் வாரஇறுதிப் பத்திரிகைகளில் கூடுதலாகவும் காணப்படுகின்றன. இவை உள்ளூர் வெளியூர் செய்திகளின் பின்னணிகளை விளக்கி செய்திகளை அர்த்தமுள்ளதாக ஆக்குகின்றன. இதைவிட வாசகர்களுக்கு இன்பம் பயக்கக்கூடிய எல்லாவகைக் கட்டுரைகளையும் அனேகம் பத்திரிகைகள் பிரசுரிக்கின்றன. இதன்கீழ் விளையாட்டு வீரர்கள், அரசியல் தலைவர்கள், சினிமா நட்சத்திரங்கள் போன்றோர் பற்றிய சுவையான கட்டுரைகள் உள்ளடங்குகின்றன. மூளைக்குப் பெரும் வேலை கொடாத இலகுவான சிறுகதைகள் பத்திரிகைகளில் வருகின்றன. அது பற்றிப் பிறிதோர் கட்டுரையில் நாம் ஆய்வு செய்யவேண்டும். ஒரு நன்றாக எழுதப்பட்ட கட்டுரை ஒரு நல்ல கதையினளவு சுவாரிஸ்யம் கொண்டது என்று விமர்சகர் கூறியதை கவனத்தில் எடுக்கவேண்டும்.

சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின் 'செய்தி பகுப்பாய்வுக்கட்டுரை' (NEWS ANALYSIS) என்றொரு ரகக் கட்டுரை பத்திரிகைகளில் தோன்றத் தொடங்கியது. இன்று இவை உலகின் முக்கிய பத்திரிகைகள் யாவற்றிலும் தவறாது இடம்பெறுகின்றது. சம்பவங்களின் ஆழ்ந்த முக்கியத்துவத்தை விளக்கிக் கூறுவதே பகுப்பாய்வுக் கட்டுரைகளின் நோக்கம். இச்செயற்பாடு ஆங்கிலத்தில் 'இன்ரர்பிறிற்றேசன்' (INTERPRETATION) என்ற அர்த்தமுள்ள சொல்லால் அழைக்கப்படுகின்றது. இதற்குரிய உதாரணங்கள் பல.

21ஆம் நூற்றாண்டின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றான நியூயோர்க் நகர் உலக வர்த்தக மையத்தின் மீதான தாக்குதல் (செப்ரம்பர் 11. 2001) நடந்தபின் பலவிதமான பகுப்பாய்வுக் கட்டுரைகள் பத்திரிகைகளில் தோன்றின.



அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கை பற்றிய கட்டுரைகள் எண்ணிக்கையில் கூடுதலாகக் காணப்பட்டன. பேராசிரியர் ஹன்ரிங்ரன் தனது நூலில் கூறியது போல் (PROF SAMUEL HUNTINGTON ) மதங்களுக்கு இடையிலான மோதல் ஆரம்பித்து விட்டதா என்று வேறு சில ஆய்வாளர்கள் வினா எழுப்ப விடையும் தந்தனர்.

நியூயோர்க் நகரத் தாக்குதல் நடந்த அதே மாதம் ஆன் அப்பிள்பவும் ( ANNE APPLEBAUM) என்ற கட்டுரையாளர் 'புத்தம் புதிய உலக ஒழுங்கு என்ற தலைப்பில் (THE NEWEST WORLD ORDER) இங்கிலாந்தின் டெயிலி ரெல்லிகிராப் (DAILY TELEGRAPH) என்ற பத்திரிகையில் ஒரு கட்டுரை வரைந்தார். அமெரிக்க இராசதந்திரம் இரண்டாவது பனிப்போருக்குத் தயாராகி வருகின்றது என்பது கட்டுரையின் சாரம். அமெரிக்காவின் நண்பன் யார், எதிரி யார் என்பதை அளவீடு செய்வதற்கு பயங்கரவாதம் என்ற அளவுகோல் உதவப்போகின்றது என்கிறார் கட்டுரையாசிரியர்.

"பயங்கரவாதத்திற்கு எதிரான போர் ஐ. ஆர். ஏ. இயக்கத்திற்கு எதிரான போர் அல்ல, தமிழ் புலிகளுக்கு எதிரான போர் அல்ல, ஹமாஸ் இயக்கத்திற்கு எதிரான போர் அல்ல" என்ற வாதத்தை இவர் தனது கட்டுரையில் முன்வைக்கிறார். அமெரிக்காவுடன் இணைந்து செயற்பட மறுப்பவர்களுக்கு எதிரான போர், வேறுவிதமாக பயங்கரவாத்திற்கு எதிரான போர் என்று அழைக்கப்படுவதாக ஆன் பகுப்பாய்வு செய்கிறார்.

சீரழிந்த நாடுகளை மீளமைப்பது எப்படி என்ற பகுப்பாய்வுக் கட்டுரை ஆப்கானிஸ்தானை மையமாக வைத்து எழுதப்பட்டு அமெரிக்காவின் 'வாஷிங்ரன் போஸ்ற்' (WASHINGTON POST) என்ற பத்திரிகையில் பிரசுரமாகியது. முதல் குண்டைப்போட்டு அழியுங்கள் பின்பு பணத்தை விட்டு கட்டியெழுப்புங்கள் என்பதே கட்டுரையின் சாராம்சம். செப்ரம்பர் 11 ஆம் திகதிக்கு பகுப்பாய்வுக் கட்டுரையாளர்கள் "உலகம் மாறிய நாள்" (THE DAY THE WORLD CHANGE) என்று பெயரிட்டுள்ளதையும் கவனத்தில் எடுக்கவேண்டும்.

நொஸ்திரடாமுஸ் (NOSTRADAMUS) என்ற பிரெஞ்சு நாட்டுச் சோதிடர் (1504-1556) பல்வேறு எதிர்வுகூறல்களை கூறியுள்ளார். அவருடைய தேடுவாரற்றுக் கிடந்த நூலுக்கு பகுப்பாய்வாளர்கள் செப்ரம்பர் 11 ஆம் திகதிக்குப் பின் புத்துயிர் அளித்துள்ளனர். நியூயோர்க் தாக்குதல் பற்றியும் அமெரிக்கா காலப்போக்கில் வீழ்ச்சியுறும் என்பது பற்றியும் இந்தச் சோதிடர் துல்லியமாகத் கூறியுள்ளார் என்று சில பகுப்பாய்வுக் கட்டுரையாளர்கள் பிடிவாதமாகக் கூறுகின்றனர். இன்னுமொரு சாரார் இருண்டவன் கண்ணுக்கு எல்லாம் பேயாகத்தான் தோன்றும் என்று விடை பகர்ந்துள்ளனர்.

பத்திரிகைகளின் பருமன் அடிப்படையில் அவை இருவேறு ரகங்களாகப் பார்க்கப்படுகின்றன.

1. வழமையான பருமனுள்ள பத்திரிகை
2. அதனுடைய பாதி அளவிலுள்ள பத்திரிகை

என்று இரண்டும் இனங்காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக எமது நாளாந்திர ஈழநாதம் பத்திரிகை இரண்டாம் ரகத்திற்கு உதாரணமாக அமைகின்றது. இப்பருமன் பத்திரிகைகள் 'ரப்புளோயிட்' (TABLOID) பத்திரிகைகள் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றில் காணப்படும் செய்திகள் பெரும்பாலும் கவர்ச்சிகரமான விறுவிறுப்பான கொலை, கொள்ளை, பாலியல் லீலைகள் சம்பந்தமானவையாக இருக்கின்றன. மேட்டுக் குடியினரின் வாழ்வியல் தவறுகள், சினிமா நட்சத்திரங்களின் அந்தரங்கங்கள் இந்த ரகப் பத்திரிகைகளில் காணப்படுகின்றன. இந்த இனப் பத்திரிகைகள் அமெரிக்காவின் 1920 களில் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் ஒன்றை முக்கியமாக மனதில் கொள்ளவேண்டும். இப்பருமன் பத்திரிகைகள் யாவும் ஒட்டுமொத்தமாக மேற்கூறிய விறுவிறுப்பு அம்சங்களை மாத்திரம் கொண்டிருக்கவேண்டும் என்ற விதிமுறை யாதொன்றும் கிடையாது. எமது ஈழநாதத்தைப் பாருங்கள். அது ரப்புளோயிட் தான் ஆனால் அது எமது விடுதலைக்கு உறுதுணையாக அல்லவா செயற்படுகின்றது.

வழமையான பருமன் பத்திரிகைள் 'புறோட்சிற்' (BROADSHEET NEWS PAPERS) என்று அழைக்கப்படுகின்றன. விசேட வெற்றிகளைக் கொண்டாடுவதற்கு ஈழநாதம் பெரிய பருமனில் வருகின்றது. உதாரணத்திற்கு எமது ஓயாத அலைகள் 03 வெற்றிச் செய்தியை தரும் ஈழநாதம் பெரிய பருமனில் காணப்படுவதை அவதானிக்கலாம். புறோட்சீற் பத்திரிகைகளுக்கு கூடிய மதிப்பும்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# நிறங்கள் பெயர்க்கப்பட்ட வண்ணத்துப் பூச்சிகள்

உன் இறுகிய விழிகளுள்
நுரைத் தெழுந்த கண்ணீரில்
ஒரு துளி கண்ணீர்
உனக்குள் உம்பித் தெறிக்கும்
வலி அடர்ந்த துயர்களைக்காட்டிற்று

ஒரு வசந்த காலத்தில்
எல்லா மரங்களும் பச்சை பீய்ச்ச
நீ மட்டும் கருகிக் கொண்டிருப்பதாய் கண்டேன்
நெடிய மரத்தின் கீழ்
கற்களால் செய்யப்பட்ட இருக்கையில்
தனித்திருந்தாய், என் தோழி

நட்பின் நிறங்களறியா மனிதர்கள்
வளாகத்து நெடியசுவரில்
உனதும், எனதும் பெயர்களை அப்பியபின்
வளாக முடுக்கெல்லாம்
மலிந்து போனோம் நானும் நீயும்

என் கைப்பிடி இதயத்திலிருந்து
உனக்குத் தரமுடிந்த தெல்லாம்
நட்பின் வயிரங்கள் மட்டுமேதானென
அவர்கள் அறிந்திருக்கவில்லை
அறிந்திருந்த சில கண்களும்

அனல் கக்கி வலிய நட்பை
சாம்பலாய் சபிக்க முனைந்தன.

அந்த அனலில் வெந்து போய்
இன்னும் இவ்வெளியின் மென்னிசையில்
இதயம் பரப்பி நட்பாயிருக்க விதியில்லையென்று
அழுது, துடித்துப் போனாய் நீ

அது தவிர்த்து காரணம் ஏதுமற்ற
எனது நட்பின் வைரம் முறித்து
விலகிச் சென்றாய்.

நான், எப்போதும் நாமிருக்கும்
ஆலமரத்தின் விழுதுகள் உரசும்
அந்தக் கல்லிருக்கையை வலியடைக்க
வெறித்துப் பார்க்கிறேன்.

காலங்கள் இத்தனையும்
நீயும் நானும் விட்டெறிந்த இறுகிய நட்பின்
வார்த்தைகள்
அமர்ந்திருந்தன ஒருவரை ஒருவர் பார்த்தபடி
எனதன்பே.

**தானா - விஷ்ணு**


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ரப்புளோயிட் பத்திரிகைகளுக்கு குறைந்த மதிப்பும் தரவேண்டிய அவசியம் கிடையாது. பத்திரிகையின் உள்ளடக்கம்தான் முக்கியம். எனினும் வித்தியாசத்தை அறிந்து வைத்திருக்கவேண்டும்.

பத்திரிகைகள் எவ்வளவு முக்கியமோ அதே அளவு அல்லது கூடுதலான முக்கியத்துவத்தை பத்திரிகைகளுக்குச் செய்தி சேகரித்து வழங்கும் பாரிய செய்தி நிறுவனங்கள் பெறுகின்றன. இவை செய்திப் படங்களையும் பத்திரிகைகளுக்கு வழங்குகின்றன. செய்தி நிறுவனங்கள் வர்த்தக நோக்கில் நடத்தப்படும் அனைத்துலக மட்டத்தில் செயற்படும் நிறுவனங்களாகும்.

உலகின் மிகப்பெரிய செய்தி வழங்கும் நிறுவனம் றொயிற்றாஸ் (REUTERS) என்ற பெயரில் இயங்குகின்றது. 6,000 பத்திரிகைகள் இதனுடைய வாடிக்கையாளர்கள் என்று கணிப்பிடப்படுகின்றது. போல் ஜாலியர்ஸ் த றோயிற்றா (PAUL JULIUS DE REUTER) என்ற ஜேர்மன் பிரசையால் 1849 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. ஆரம்பகாலத்தில் இது ஐரோப்பிய நாடுகள் மற்றும் இங்கிலாந்து வர்த்தக நிறுவனங்கள் தமக்கிடையில் வர்த்தகத் தகவல் பரிமாறுவதற்கு உதவியது. இவ்வகைப் பரிமாற்றத்திற்கு தொலைத்தந்தி இணைப்புக்களை றோயிற்றர் பயன்படுத்தினார். தந்தி இணைப்பு இல்லாத பகுதிகளுக்கு புறாக்கள் மூலம் செய்தி அனுப்பினார். அல்லது புகையிரத சேவை இருந்தால் அதைப் பயன்படுத்தினார்.

றோயிற்றர் நிறுவனத்தின் இலண்டன் கிளை சிறு காலத்தின்பின் இங்கிலாந்து பங்குதாரார்களுக்கு விற்பனையாகியது. இதன்பின் உலக நாடுகள் யாவற்றிலும் கிளைகளும், செய்தி சேகரிக்கும் அலுவலகங்களும் திறக்கப்பட்டன. இன்று றோயிற்றர்ஸ் உட்பட மூன்று பாரிய நிறுவனங்கள் செய்தி சேகரிப்பில் ஈடுபடுகின்றன.

1. அமெரிக்காவின் அசோசியேற்றட் பிறெஸ் (ASSOCIATED PRESS)
2. பிரான்சின் ஏ. எவ்ப்.பி (AGENCY FRANCE PRESSE)

செய்தி நிறுவனங்கள் செய்தி சேகரித்து விநியோகிக்கும் மேற்கூறிய மூன்றைவிட இன்னும் பல இருக்கின்றன. ஆனால் இந்த மூன்றும் இத்துறையில் தலைமை இடம் வகிக்கின்றன. செய்தி சேகரிக்கும் நிறுவனங்கள் தவிர்ந்த பிறிதோர் நிறுவனம் உலகப் பத்திரிகைகளோடு நெருக்கமான தொடர்பு கொண்டிருக்கின்றது. இந்தவகை நிறுவனம் செய்திக் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள், திரைப்படச் செய்திகள், இசை, கலை, ஓவியம் சம்பந்தமான விடயங்கள்,



விளையாட்டுப் போட்டிகள், கேலிப்படங்கள், கொமிக்ஸ் படங்கள், அரசியல் கேலிச் சித்திரங்கள் போன்றவற்றை நல்ல விலைகொடுத்து வாங்கி வாடிக்கைப் பத்திரிகைகளுக்கு விநியோகம் செய்கின்றன. தங்கள் பத்திரிகைகளை 'நிரப்புவதற்குப்' பெரும்பாலானவை இந்த நிறுவனங்களையே நம்பியிருக்கின்றன. இந்த நிறுவனங்கள் 'சிண்டிக்கேற்' என்று (SYNDICATES) என்று அழைக்கப்படுகின்றன.

ஒரு பத்திரிக்கையின் உயிர்நாடி அதன் ஆசிரியர் என்றால் மிகையாகாது. பொதுவாகப் பத்திரிகைகள் யாவற்றிலும் ஒரு பிரதம ஆசிரியரும் ஒன்றுக்கு மேற்பட்ட உப- ஆசிரியர்களும் பணியாற்றுகின்றனர். ஒவ்வொரு முக்கிய துறைக்கும் ஒரு பிரதம ஆசிரியர் என்ற நிர்வாக ஒழுங்கு சில தேசியப் பத்திரிகைகளில் காணப்படுகின்றன. பத்திரிகைகள் தொடங்கிய காலந்தொட்டு ஒரு சிறிது காலம்வரை பத்திரிகையின் சொந்தக்காரன் அதன் ஆசிரியராகப் பதவி வகித்தார். இன்று நிலைமை வேறு பத்திரிகையின் உரிமைக்காரன்- உரிமைக்காரர்கள் வேறாகவும் மாதாந்த ஊதியத்திற்காக அமர்த்தப்பட்ட ஆசிரியர் பிறிதொருவராகவும் காணப்படுகின்றனர். இதனுடைய தாக்கம் பல்வேறு விதத்தில் உணரப்படுகின்றது.

நிர்வாக கடமைகளைவிடப் பிரதம ஆசிரியரின் முக்கிய கடமை பத்திரிகையில் நடுநாயகமாக விளங்கும் ஆசிரிய தலையங்கத்தை எழுதுவதாகும். ஆசிரியர் 'எடிற்றர்' (EDITOR) என்று அழைப்படுகின்றார். அவர் எழுதும் ஆசிரியர் தலையங்கம் என்ற கட்டுரை 'எடிற்றோறியல்' (EDITORIAL) எனப்படும். "நாளாந்திரப் பிரச்சினைகள், நிகழ்ச்சிகள், எதிர்பார்ப்புகள் சம்மந்தமான ஆசிரியரின் ஆலோசனை, அபிப்பிராயம், பரிந்துரை பெரும்பாலும் தலையங்கத்தில் உள்ளடங்கியிருக்கும்" இது இங்கிலாந்தின் பல்கலைக் கழகமொன்றில் இதழியல் வகுப்பில் வழங்கப்பட்ட வர்ணனையாகும்.

இந்த வர்ணனை இன்று செல்லுபடியாகுமா? என்ற வினா எழுப்பப்படுகின்றது. இன்றைய பத்திரிகை ஆசிரியர் ஒரு சுதந்திரப்பிறவி அல்ல காலம் மாறிவிட்டது. பல்வேறு இழுப்புக்களுக்கு அவர் ஈடுகொடுக்க வேண்டும். அவர்மீது பலவிதமான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. அவர் வளைந்து கொடுக்கவேண்டும். பத்திரிகைகளில் பெரும்தொகையான பணம் முதலீடாக முடக்கப்பட்டுள்ளது. இலாபகரமாக இயங்காவிட்டால் இழுத்து மூடவேண்டிவரும். இவ்வாறான விளக்கங்கள் ஆசிரியரின் இயக்கத்தை மட்டுப்படுத்துகின்றன.

உலகின் பழமைவாய்ந்த பத்திரிகைகளில் ஒன்றான 'ரைம்ஸ்' 1785 ஆம் ஆண்டு தொடக்கம் இலண்டனில் வெளிவருகின்றது. இதில் ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்கள் பிரிட்டிஷ் அரசை கட்டுப்படுத்தும் வலிமை மிக்கவர்கள். ரைம்ஸ் தலையங்கம் பிரிட்டிஷ் வெளியுறவு, உட்துறைக் கொள்கைகளை நிர்ணயம் செய்தது. பிரிட்டிஷ் சிங்கத்தின் கர்ஜனை என்று ரைம்ஸ் தலையங்கம் குறிப்பிடப்படுவதுண்டு.

அவுஸ்திரேலியாவில் பிறந்து அமெரிக்கப் பிரசாவுரிமையை விலைகொடுத்து வாங்கிய 'மீடியா கிங்' (MEDIA KING) என்று அழைக்கப்படும் றூப் மேர்டொக் (RUPERT MURDOCH) ரைம்ஸ் பத்திரிகையைத் தனதாக்கியுள்ளார். இப்போது அவருடைய அபிப்பிராயம்தான் ஆசிரியரின் பேனா ஊடாக வெளிவருகின்றது. உலகின் ஊடகத்துறையைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒரு சில செல்வந்தர்களில் ஒருவராக மேர்டொக் திகழ்கிறார்.

1851 இல் ஆரம்பிக்கப்பட்ட அமெரிக்கப் பத்திரிகை நியூயோர்க் ரைம்ஸ் (NEW YORK TIMES) அமெரிக்க அரசின் உத்தியோகப் பற்றற்ற குரலாக ஒலிக்கின்றது. ஆனால் 1877 இல் ஆரம்பிக்கப்பட்ட வாஷிங்ரன் போஸ்ற் (WASHINGTON POST) கிரகாம் குடும்பத்தினரால் (GRAHAM FAMILY) வாங்கப்பட்ட பின் யூதர்களின் குரலாக ஒலிப்பதோடு அமெரிக்க அரசுமீது அழுத்தம் பிரயோகிக்கும் வலுவுடன் இயங்குகின்றது. இதே குடும்பத்தினர் வார சஞ்சிகை நியூஸ்விக் (NEWS WEEK) உரிமையாளராக இடம்பெறுகின்றனர்.

அரசியல் அழுத்தம் இல்லாத செய்திப் பத்திரிகைகள் மிகவும் அரிது. சிறிலங்காவின் டெயிலி நியூஸ் (DAILY NEWS ) ஒரு படுமோசமான உதாரணம். தமிழ்ப் பத்திரிகையான வீரகேசரியோ 'கொள்கை அற்ற நிலையைத்' தனது கொள்கையாகக் கொண்டுள்ளது. வியாபாரம் நடந்தால் போதும், இலாபம் கிட்டினால் போதும் என்பதே வீரகேசரியின் கொள்கை. இப்பத்திரிகை கொழும்பு செட்டியார்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இதழியல் சில அடிப்படைச்செய்திகள்

மக்கள் அபிப்பிராயங்களை கட்டியெழுப்புவதே பத்திரிக்கைகளின் நோக்கம் என்று கூறப்படுகின்றது. மக்கள் எண்ணங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதே பத்திரிகைகளின் அடிப்படை நோக்கம் என்ற கருத்தும் மிகவும் ஆணித்தரமாக முன்வைக்கப்படுகின்றது.

தெருவில் சுப்பிரமணியம் செட்டியார் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. அவர் பெயரளவில் ஆசிரியராக இருந்தார். ஒரு வங்கியில் பணியாற்றிய எச். நல்லையா அதன் ஆசிரியராக தனது மாலை ஓய்வு நேரத்தில் பணியாற்றினார்.

இந்தியரான நல்லையா நோய்வாய்ப்பாட்டு பிறந்த நாடு திரும்பினார். 'வ-ரா' என்று அழைக்கப்படும் வ. இராமசாமி ஐயர் வீரகேசரி ஆசிரியராக வந்து சேர்ந்தார். தமிழ் நாட்டில் மிகப்பெரிய எழுத்தாளராகவும், முற்போக்குச் சிந்தனையாளராகவும், பத்திரிகையாளராகவும் வ. வரா வரலாறு படைத்தார். இவர் நாடு திரும்பியபின் கே. பி. ஹரன் வீரகேசரி ஆசிரியராக கொழும்பு வந்தார். ஹரன் எழுதிய தலையங்கங்களை மொழிச் செழுமையுடன் திகழ்ந்தன. ஹரன் விலகியபின் வீரகேசரி இன்றைய நிலைக்குத் தள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம், சிவன் பண்ணை வீதியில் ஈழநாடு என்றவொரு பத்திரிகை இருந்தது. கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி அதுவும் மடிந்த கதைபோல் ஈழநாடு இன்று இல்லை. மேற்கூறிய ஹரன் இதில் ஆசிரியராக இருந்தவர். காலஞ்சென்ற பேராசிரியர் மாணிக்க இடைக்காடர், சபாரத்தினம் மாஸ்ரர் போன்றோர் ஈழநாடு ஆசிரியர்களாக தமது ஓய்வு காலத்தில் கடமையாற்றினர். இடைக்காடர் கணித மேதை, அவர் தீட்டிய தலையங்கத் தமிழ் அட்சர சுத்தமாக இருக்கும். மாஸ்ரருடைய தமிழ் பிறிதோர் ரகம். ஆழமான கருத்தும், எழுத்தும், ஆனால் 'சுழிகள்' ஏராளம். இடைக்காடர், பேராசிரியர் க. கைலாசபதிக்கு பெண்கொடுத்த வகையில் மாமனார். இவருடைய ஆசிரியர் தலையங்கங்கள் தொகுக்கப்பட்டு நூலுருப் பெற்றுள்ளன.

விடுதலைக் குரலாக ஒலிக்கும் ஈழநாதம் ஆசிரியரின் தலையங்கங்களில் சிந்தனைத் தெளிவும் அதற்குப் பொருத்தமான சொல்லாட்சியும் புலப்படுகின்றன. தொடங்கியதை நிறுத்தத் தெரியவேண்டும் என்று எமது ஆங்கிலப் பேராசிரியர் இடித்துக் கூறுவார். கட்டுரைகளுக்கு அவர் விதித்த கட்டுப்பாடு அவ்வாறு அதேயளவு கட்டுப்பாடு, சிக்கனம், சொற்செட்டு ஆசிரியர் ஜெயராஜின் எழுத்தில் அறியப்படுகின்றன. நூலுருவாக்கினால் தமிழுக்கு அணியாக அமையும்.

அமெரிக்கன் இதழியல் கலைக்களஞ்சியம் (AMERICAN ENCY-OPAEDIA OF JOURNALISM) பத்தி எழுத்து பற்றிய வரைவிலக்கணத்தை வெளிப்படுத்துகின்றது. பத்தி எழுத்து 250-270 சொற்களுக்குள் அடங்கும் சிறிய கட்டுரையாகும். அதைத் தினசரிப் பத்திரிகையிலோ, வாரப் பத்திரிகையிலோ வெளியிடலாம். அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், விளையாட்டு, வீட்டு மற்றும் தோட்ட அலங்காரம், நவீன ஆடைகள், வரலாற்றுச்செய்திகள், பிரயாணம், திரைப்படம் பாலியல் உறவுகள் எதைப் பற்றியும் உயர்ந்த ஆங்கிலத்தில், தலைசிறந்த புலமை வெளிப்பாட்டுடன் எழுதலாம். தெரிவுசெய்யும் விடயம் பற்றிய கட்டுப்பாடு கிடையவே கிடையாது. ஆனால் நிபுணத்துவ அறிவும், இருந்தால் சுய அனுபவமும் வாசகர்களுக்கு கிடைக்க வேண்டும்.

பத்தி எழுத்தாளர்களாகப் புகழீட்டியவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவு. ஒரு சிறு கதையின் சுவாரஸ்சியம் இருக்கவேண்டும். அத்தோடு அறிவொளியும் வீசவேண்டும். முடியுமா? பேராசிரியர் வில்லியம் சபையா (WILLIAM SAFIRE) நிகரற்ற மொழியில் அறிஞர். ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லின் வரலாறும் இவருக்கு அத்துப்படி. இவர் வாராந்திரம் எழுதும் பத்தி எழுத்துக்கள் நல்ல விலை போகின்றன. உலகின் தரமான பத்திரிகைகள் அவற்றைக் கொள்வனவு செய்கின்றன. சிறந்த பத்தி எழுத்தாளர்களுக்கு சின்டிக்கேற் நிறுவனங்கள் நிறையப் பணம் கொடுக்கின்றன. இருப்பினும் பத்தி எழுத்து ஒரு கடினமான துறை என்பதால் நிரந்தர தட்டுப்பாடு நிலவுகின்றது.

தமிழில் பத்தி எழுத்து மிகவும் குறைவு. அதேபோல் கட்டுரை இலக்கியமும் தமிழில் அரிதினும் அரிது. பத்தி எழுத்தின் இரகசியம் இரத்தினச் சுருக்கமாகும். எளிமை, சொல்வளம், எடுத்துக்கூறும் விடயம் பற்றிய பரந்த அறிவும், உரைநடைச் சிறப்பும் பத்தி எழுத்தில் கட்டாயமாக இருத்தல்வேண்டும். உணவில் சேர்க்கப்படும் நறுமணச் சரக்குகள் போல் சுவையான செய்திகள் அளவோடு சேர்க்கப்படவேண்டும்.

தமிழ்ப் பத்தி எழுத்தில் தனிமரமாக கே. சிவகுமாரன் நிற்கிறார். பேராதெனியப் பல்கலைக் கழகப் பட்டதாரியான இவர் கொழும்பு ஆங்கிலப்பத்திரிகைகளில் பணியாற்றுகிறார். மாலைதீவு, மத்திய கிழக்கு போன்றவற்றில் ஆங்கில ஆசிரியராக முன்பு பணியாற்றியவர். இந்தியாவின் பூநே திரைப்படக்கல்லூரியில் திரைப்படத் தொழில்நுட்பப் பயிற்சி பெற்றவர். திரைப்படம் சம்பந்தமான இவருடைய எழுத்தில் 'உள்வீட்டு' அனுபவ முத்திரை பதிந்துள்ளது. ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு வந்தவரானபடியால் இவருடைய இலக்கியக் கண்ணோட்டம் வித்தியாசமானது. எமது விடுதலைப் போர் தமிழ் 'குருத்துக்களை' அழிக்கின்றது. என்று இவர் கூறித்திரிவதை ஏற்கமுடியவில்லை.

சொல்வதற்கு வேதனையாக இருந்தாலும், ஒரு பத்திரிகையை விற்பனை செய்வது பெரும்பாலும் அது தாங்கிவரும் பொழுதுபோக்கு அம்சங்களே. விற்பனையை பெருக்குவதற்கு கவர்ச்சி அம்சங்களைச் சேர்க்கவேண்டிய நிர்ப்பந்தம் பத்திரிகை நிறுவனங்களுக்கு உண்டு. சிறுவர் முதல் முதியோர்வரை தமது பத்திரிகையை படிக்கவேண்டும் என்ற வேணவா அவர்களை ஆட்க்கொள்கின்றது. மக்களின் ருசிகளை அறிந்து தீனிபோடவேண்டிய கட்டாயம் இருக்கிறது. இளவரசி டயனா இறந்தபின் அவருடைய அந்தரங்க விடயங்களை அறிவதற்கு வாசகர்கள் துடியாய்த் துடித்தனர். டயான பற்றி இல்லாததையும் பொல்லாததையும் சிலகாலம் பத்திரிகைகள் தந்தபடி இருந்தன.

"கேட்பதைக் கொடுப்பதில்லை, நாம் விரும்பியதைக் கேட்ட வைக்கிறோம்" என்று தொடர்பூடகத்துறை சம்பந்தமான கருத்து நிலவுகின்றது. அதாவது மக்கள் தேவையைப் பத்திரிகைகள் உருவாக்குகின்றன எனலாம். மிகவும் நேர்த்தியான உளவியல் அணுகுமுறையின் அடிப்படையில் தேவைகள் உருவாக்கப்படுகின்றன. 'தேவை அலைகளை' உருவாக்கும் திறமை பத்திரிகைகளுக்கு உண்டு. இதைவிட மக்களுக்கு பொழுதுபோக்கு மற்றும் கேளிக்கை அம்சங்கள் அவசியமாகத் தேவைப்படுகின்றன. இது வாழ்வோடு இணைந்த தேவையாகும். நெருக்கடிகளை சிறிது நேரம் மறக்கவும், நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு வேண்டிய உற்சாகத்தை பெறவும் மேற்கூறிய அம்சங்கள் உதவுகின்றன.

மக்கள் அபிப்பிராயங்களை கட்டியெழுப்புவதே பத்திரிக்கைகளின் நோக்கம் என்று கூறப்படுகின்றது. மக்கள் எண்ணங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதே பத்திரிகைகளின் அடிப்படை நோக்கம் என்ற கருத்தும் மிகவும்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஆணித்தரமாக முன்வைக்கப்படுகின்றது. கவனத்தை திசை திருப்புவதற்கு பொழுதுபோக்கு மற்றும் கேளிக்கை, அம்சங்கள் திட்டமிட்டு புகுத்தப்படுவதாக குற்றஞ் சுமத்தப்படுகின்றது. சொன்னதை நம்ப வைப்பதும், அதன் அடிப்படையில் நடக்கவைப்பதும் பத்திரிகைகளின் இரு குறிக்கோள்களாக இனங்காணப்படுகின்றன.

முழு உண்மையையும் பத்திரிகைகள் வெளியிடுவதில்லை. செய்தியின் முக்கிய பாகங்கள் அமுக்கப்படுகின்றன. ஆட்சியாளர்களும், ஆளும் வர்க்கமும் நன்மை அடையும் திசையில் மக்கள் தள்ளிச் செல்லப்படுகின்றனர். ஏனென்றால் பத்திரிகை நடத்துவோர் இந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். பணம் படைத்தோர் பத்திரிகை நடத்துகின்றனர். கடன்பெற்றுப் பத்திரிகை நடத்தலாம். ஆனால் கடன் பெறுவதற்கு கடன் வழங்கும் நிறுவனத்திடம் அல்லது பணம் படைத்த வர்க்கத்திடம் செல்லவேண்டும். அனேகமாக இரண்டும் ஒன்றாகவே காணப்படுகின்றன. நாம் சொல்வதை நம்புங்கள் என்ற செய்தியைப் பத்திரிகைகள் விற்பனை செய்கின்றன. விற்பனைப் பொருளைப் பொதி செய்வதற்கு பொழுதுபோக்கு மற்றும் கேளிக்கை அம்சங்கள் அச்சிடப்பட்ட பக்கங்கள் உதவுகின்றன. இவையெல்லாம் மாற்றுக் கருத்துக்கள், அவற்றில் உண்மை இருக்கக் காணலாம்.

ஒரு பொருள் அல்லது சேவையின் இருப்பை மக்கள் கவனத்திற்கு கொண்டுவருவதற்கு விளம்பரங்கள் உதவுகின்றன. விளம்பரம் ஒரு விற்பனை உபாயம். விளம்பரம் செய்யாவிட்டால் பொருட்களும் சேவைகளும் தேக்கம் அடைந்து விடும். விற்பனையைப் பெருக்குவது விளம்பரத்தின் பணி. விளம்பரங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி, சுவரொட்டிகள், விளம்பரப் பலகைகள், கைத்துண்டுகள் போன்றவற்றின் மூலம் செய்யப்படுகின்றன. முதல் நான்கும் மிக அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. விளம்பரதாரர்கள் வானொலி தொலைக்காட்சிகளில் விளம்பர நேரத்தை விலைக்கு வாங்குகிறார்கள்.

வாசகர்கள் பத்திரிகைகளைக் கொள்வனவு செய்வதற்கு கொடுக்கும் பணம் பத்திரிகைகளை இலாபகரமாகப் பிரசுரிப்பதற்குப் போதுதானதல்ல. வாசகர்களின் பணத்தை நம்பியிருந்தால் பத்திரிகைகள் இழப்பைத்தான் சந்திக்க நேரிடும். பத்திரிகைகளுக்கு இலாபம் ஈட்டிக் கொடுப்பவை விளம்பரங்களே. விற்பனையாளர்களுக்கு விளம்பரம் எவ்வளவு முக்கியமோ அதிலும்கூடிய அளவில் பத்திரிகைகளுக்கு விளம்பரம் முக்கியமாக அமைகின்றது. விளம்பரதாரர்களை பத்திரிகை நிறுவனங்கள் வருத்தி அழைக்கின்றன. போற்றிப் புகழ்கின்றன. ஆனால் வாசகர்களை உதாசீனம் செய்ய அவர்களால் முடியாது. வாசகர்கள் பெருமளவில் கொள்வனவு செய்யும் பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதற்கு விளம்பரதாரர்கள் விரும்புகின்றனர். ஆகையால் வாசகர்களையும் அரவணைக்கவேண்டும். விளம்பரதாரர்களையும் கௌரவிக்கவேண்டும் என்ற நிலை பத்திரிகை நிறுவனங்களுக்கு உண்டு.

அச்சாகும் பத்திரிகைகள் முழுவதுமே விற்பனை ஆவதில்லை. ஒரு சில அன்பளிப்புச் செய்யப்படுகின்றன விற்பனை ஆகாமல் கிடப்பவற்றை எடைக்கணக்கில் பழைய கடதாசி வாங்கும் நிறுவனங்களுக்கு விற்கிறார்கள். பழைய கடதாசி என்றால் வாசித்தபின் விற்பனையாகும் கடதாசி என்று எண்ணவேண்டாம். பத்திரிகை நிறுவனக் களஞ்சியத்தில் விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடக்கும் பத்திரிகைகளையே குறிப்பிடுகிறோம். உலக வர்த்தகத்தின் ஒரு பகுதி இந்தரக பத்திரிகைகளை வாங்கி விற்பதில் ஈடுபடுகின்றது. மிகவும் பிரபலமான பத்திரிகை நிறுவனங்கள் கூட தங்கள் விற்பனையாகாத பிரதிகளை மேற்கூறிய வர்த்தகத்தில் ஈடுபடும் நிறுவனங்களுக்குக் கொடுக்கின்றன. இப்படிச் செய்தால் நட்டம் வராதா? தொடர்ந்து பத்திரிகை நடத்த முடியுமா? போன்ற வினாக்கள் எழுகின்றன. விளம்பரதாரர்கள் தரும் பணம் நட்டத்தை ஈடுசெய்யவும், பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தவும் போதுதானதாக இருக்கின்றது என்பதே விடை.

முன்னொரு காலத்தில் விளம்பரம் என்றால் மிகவும் சுருக்கமாக இருந்தது. என்ன பொருள், எந்தவிலைக்கு, எங்கே கிடைக்கும் என்பதைக் கூறுவதே விளம்பரமாகக் கருதப்பட்டது. இன்று நிலமை வேறு. இன்றைய வர்த்தக ஒழுங்கில் சந்தைப்படுத்தல் பிறிதோர் கண்ணோட்டத்தில் நோக்கப்படுகின்றது. வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதே சந்தையின் முன்னைய நோக்கமாக இருந்தது. இப்போது தயாரிப்புக்களை விற்பனை செய்யும் கருவியாக விளம்பரமும் மக்கள் தேவைகளைத் தயாரிப்புக்களுக்குப் பொருத்தமானவையாக உருவாக்குவதும் சந்தையின் நோக்காகவும் இருக்கின்றது. முன்பு வாடிக்கையாளன் முதன்மைப்படுத்தப்பட்டான். இப்போது தயாரிப்பாளனும் விற்பனையாளனும் வாடிக்கையாளனின் இடத்தைப் பிடித்துள்ளனர்.

இன்றைய சந்தை ஒழுங்கில் தேவைகளை உருவாக்குவதே விளம்பரத்தின் நோக்கம் என்பதில் ஐயமில்லை. இதழியல் துறையிலும் பார்க்க விளம்பரக் கலை கூடுதல் வளர்ச்சி பெற்றுள்ளது. இதழியல் கற்கை நெறியை ஒத்த விளம்பர கற்கை நெறியை பல்கலைக் கழகங்களும் விசேட பயிற்சி நிறுவனங்களும் வழங்குகின்றன. மிகக் கூடுதலான வருமானம் தரும் துறையாக விளம்பரத்துறை நிலவுகின்றது. விளம்பரங்களை தயாரிப்பாளர்களின் விற்பனைத் தேவைகளுக்குப் பொருத்தமாக உருவாக்கிக் கொடுக்கும் நிறுவனங்கள் உலக நாடுகள் யாவற்றிலும் காணப்படுகின்றன.

இன்றைய வீரகேசரிப் பத்திரிகையை ஆய்வுசெய்து பாருங்கள். செய்திகள் 'உப்புச் சப்பு' அற்றவையாக இருக்கின்றன. கட்டுரைகள் 'ஏனோ தானோ' என்று இருக்கின்றன. ஆசிரியர் தலையங்கம் உயிரற்றதாக இருக்கின்றது. ஆனால் விளம்பரங்கள் மாத்திரம் ஏராளம். விளம்பரங்கள் வருகின்றன. நிறுவனம் இலாபத்தில் நடக்கின்றது. வேறு கவலை எமக்கு இல்லை என்ற மனோநிலையில் இருக்கிறார்கள் போல் தெரிகிறது. மறுவளத்தில் வீரகேசரி நிறுவனம் பதிப்பித்த வாராந்திர ஆங்கிலப் பத்திரிகையான 'சண்டே எக்ஸ்பிரஸ்' (SUNDAY EXPRESS) வாசகர்கள் ஆதரவின்மை விளம்பரதாரர்கள் ஆதரவின்மை என்ற இரு காரணங்களுக்காக சென்ற வருடத்துடன் நிறுத்தப்பட்டதை மனங்கொள்ளவேண்டும்.

'விளம்பர வரவில் வீழ்ச்சி' என்று வெளிப்படையாகக் கூறி நிறுத்தப்பட்ட ஆசியாவீக் சஞ்சிகை பற்றிப் பார்ப்போம். ஹொங்கொங் தீவில் 1975 தொடக்கம் பிரசுரிக்கப்பட்ட இவ்வாங்கில வாராந்திர சஞ்சிகை ஆசிய விவகாரங்களுக்கு முதலிடம் கொடுத்தது. ஒரு சில வருடங்களுக்கு முன் அமெரிக்காவின் ரைம் (TIME) வார சஞ்சிகை அதைக் கொள்வனவு செய்தது. உலகின் மிகக் கூடுதலான விற்பனையாகும் ரைம் சஞ்சிகையால் ஆசியாவீக்கின் வீழ்ச்சியை நிறுத்த முடியவில்லை. விளம்பரம் செய்வோர் வேறிடம் தேடிச் சென்றபடியால் மூடுவிழா நடத்த வேண்டியதாயிற்று நவம்பர் 2001 க்குப் பின் ஆசியாவீக் வெளிவரவில்லை ■


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# நகர்ப்புற ஓவியனும் நவீன சிற்ப மனிதனும் – 2

நகர்ப்புற ஓவியனின் தூரிகையோ
நீண்ட நேரமாய்
அமைதி நிறைந்த ஆகாய நீலத்தையாவது
அவர்களுக்காய் கொண்டு வருவதற்காய்
துடித்துக் கொண்டிருந்தது.

எல்லா நதிகளையும்
கடந்து போகிறார்கள்
வல்லமையற்றவர்களாகி

அவர்கள் காலடிகளில்
வேரெனப் பற்றி இழுபடுகிறது
ஒரு பெரும் அலையெழும்பும் கடலும்
தேனெனச் சிந்தி ஒழுகிய நிலவும்
இன்னோரன்ன பிறவுமென

எரிக்கின்ற கோடையை
விழி ஏந்திக் கரைகிற
குளிர்காலத்தில் ஒரு நாள்
அந்திப் பொழுதுச் சூரியன்
அந்நிய தெருக்களில்
அவர்கள் நிழலை பூமியில் விழுத்திச்
சோகமுற விழித்ததை
ஓவியன் தூரிகையால் ஒற்றினான்


வண்ணக் கனவுகளினதும் ஆறு
தலைக்கு மேலால் புரண்ட தடங்களையும்
வர்ணத்தால் நெளிதலைத்திருந்தான்

வலிகள் பெருத்து
பனிக்காற்றில் துளையிட்டு
இசைத்தபடி
எல்லாச் சமுத்திரங்களையும், மலைகளையும்
காடுகளையும் கடந்து கொண்டு போகிறவர்களை
இழுவைக் காவடிக் காரனைப் போல
அதிரும் வீச்சுமிக்க
கறுப்புக் கோடுகளால் பிணைத்தான்
அது ஒரு சிப்பிலியாட்டமாகவும் இருந்தது

நவீன சிற்ப மனிதர்களுக்கு
சிறகுகளைப் பொருத்திட
மீண்டும் மீண்டும் முயற்சித்த ஓவியன்
வைத்த கண் வாங்காமல்
என்னையும் பார்த்துக் கொண்டிருந்தான்
அவர்களில் ஒருவனாய்.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# பரதேசியின் குறிப்பெழுதுகிற முற்றத்து மரம்

இசையினுடைய நுணுக்கமான குறிப்புக்களை
எனது முற்றத்து மரம் குறித்ததைப் போல
யாரும் இதுவரை குறிக்கவில்லை

ஒரு கோடை நாளில் — நிலா காலத்தில்
ஓவியம் வரைவதற்கான கோடுகளை
எனது முற்றத்து மரம் குறித்ததைப் போல
எவர் தான் குறித்து வைத்திருப்பார்.

மழை வரப்போகிறது என்பதை
அவள் சாடை மாடையாகவும் குதூகலத்துடனும்
வெளியிட்டதைப் போன்று யாரால் வெளிப்படுத்த முடிந்திருக்கும்

அதன் பிறகு,

எல்லாமும் தெரிந்து, அறிந்து வைத்திருந்த
என் முற்றத்து மரம்
இப்படித்தான் ஒரு நாள்
பேச்சு மூச்சின்றிப் போன ஒரு நாள்
எல்லாப் பறவைகளும் அநேகமாக அச்சத்தில்
பேத மற்றுப் பறக்கத் தொடங்கிய பின்னர்
காற்றுக்கு பேச்சுத் துணையாக நின்றதாக
பயணம் போய் வந்தவன் ஒருவன் சொன்னான்
அவன் தான் சொல்லியிருக்க வேண்டும் என்றும் இல்லை

வண்ணத்துப் பூச்சிகளின் வசந்தகால நடனங்கள்
ஒளிக்கும்மிகள் நிகழாமல் போனதற்குப் பிறகு
அதிர்ச்சியில் உறைந்து போனதாகவும்
பேச்சு வாக்கில் அடி படுகிறதாக சொன்னான்

மர நிழலின் குடையில்
எரிக்கும் கோடையில் எருப்புறக்கிக் கொண்டு வந்த
ஆச்சி ஆறுவதற்காக இருந்தாள் என்பதும்
அதே சோக முகத்துடனையே
அவள் இறுதியாக போய்ச் சேர்ந்தாள் என்பதும்
கதையாக வழங்கி வரத் தொடங்கி விட்டது

பரதேசி என் மன முன்றலிலும்
நின்று கொண்டு வாழ்வினுடைய நுணுக்கமான
ஓவியங்களையும், இசைகளையும்
குறித்துக்கொண்டேயிருக்கிறாள்.


தா.பாலகணேசன் கவிதைகள்



www.tamileelamarchive.com

# தீச்சுடர்

தமிழ்க்கவி




பானுவும் மங்கையும் காட்டுக்குள் அல்லாடிக் கொண்டிருந்தனர். இந்தப் பாதையால் போனால் எந்தக் குளக்கட்டில் முடியும் என்பதுதான் வன்னிக்காட்டின் ஒற்றைத் தடங்கள். ஏன்.... அனைத்தும் காட்டு விலங்குகள் நீர் குடிப்பதற்காக நடந்து சென்றவைதான். அவை குளங்களில் அல்லது நீரோடைகளில்தான் முடியும்.

பானுவும் மங்கையும் அந்தத் தடங்களில்தான் பகல்முழுதும் நடந்தார்கள். அதுவோ மீண்டும் மீண்டும் ஒரே சூமா மரத்தடியில் வந்து நின்றது.

"இனி ஏலாது. நான் இருக்கப் போறன்" என்றாள் பானு.

வேட்டுச்சத்தங்களை எதிர்த்து நடந்து வெகுதூரம் வந்து விட்டதை மெல்லிதாக எட்டத்தில் கேட்கும் வேட்டுக்கள் உறுதி செய்தன.

இயலாது என்று உட்கார்ந்து விட்ட பானுவைத் தொடர்ந்து மங்கையும் உட்கார்ந்தாள். மாலை ஐந்து மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. காட்டின் மேற்பரப்பை இருள்மூடி ஏழு எட்டு மணியாகிவிட்டது போலிருந்தது. தீக்கங்கு போல ஆங்காங்கே சிறு இடைவெளிகள் ஊடாக மேற்கே வந்த ஒளியைக் கொண்டு.... அந்தப் பக்கம்தான் தாங்கள் போகவேண்டிய இடம் என்பதைக் கணித்த மங்கை "பானு எழும்பு இந்தா இந்தப் பக்கம்தான் நடப்பம் இருள முன்னம் வெட்டைக்குப்போக" என்றாள்.

பானு அலுப்புடன் எழுந்தாள். நேற்று முன்தினம் இருந்தே சரியான உணவு இல்லை. இதைவிடப் பதற்றம் வேறு. ம்... என்றவாறு ஒரு பெருமூச்சு விட்டவள் எட்டி அருகிலிருந்த கிளைகளை விலக்கியவாறு நடக்கும் மங்கையை பின் தொடர்ந்து நாலடி வைத்திருப்பாள். காடே அதிரும் வண்ணம் பெரிய சீறல்ஒலி எழுந்தது.

"யானை...." மங்கை நின்றாள். சீறலைத் தொடர்ந்து திடுதிடென யானைகள் ஓடும் சத்தமும், கிளைகள் முறியும் சத்தமும் கேட்டன.

மங்கை பானுவைத் திரும்பிப் பார்த்தாள். அவளுடைய முகத்தில் அச்சம் தெரிந்தது. இன்னும் காட்டுக்குள் என்னென்ன இருக்குமோ.

"வேண்டாம் இருளுது இப்படியே இருந்திட்டு விடியப்பாப்பம்" என்றாள்.

ஒரு சரிவான மரத்தடியை இயன்றளவு சருகுகளைத்தள்ளி ஒழுங்கு பண்ணிவிட்டு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

*பற்றைக்குள்ளிருந்து இரண்டு சோடிக்கண்கள் இவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தன. "யாராயிருந்தாலும் என்ன" என்பது போலல்ல, தோள்களில் தொங்கிய துப்பாக்கியும் உருமறைப்பான உடையும் அவர்கள் அவதானத்துடன் கவனித்தனர் எனக்கூறியது.*



அதில்படுத்துக் கொண்டார்கள். இரவானதும் வேட்டுச் சத்தங்கள் ஓய்ந்து போயிருந்தன. பகல் முழுதும் அலைச்சல் பானுவையும் மங்கையையும் விடிந்ததும் எழும்ப விடவில்லை. கைகால்கள் அசதியாக இருந்தாலும், உரிய இடத்துக்குப் போகவேண்டிய தேவை அவர்களை எழுந்து நடக்கத் தூண்டியது.

சரியோ பிழையோ மேற்கு நோக்கி நடப்போம் வருவது வரட்டும் என்று நினைத்தவர்கள் நடக்க ஆரம்பித்தனர்.

ஒரு மணித்தியாலயத்தில் பெருங்காடு மந்துக்காடாக மாறியது. பானுவுக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது. இன்னும் சிறிது தூரம் செல்ல சேனைப்புலவொன்று வந்தது.

நல்ல காலமாக விதைப்பின் பின்னான விளைவாக கெக்கரி போட்டிருப்பார்கள் போலும் ஒருகொடி நான்கு பழங்களுடன் காய்ந்து சுருண்டு போய்க்கிடந்தது. பானு பாய்ந்துபோய் ஒருசிவந்த கெக்கரிப் பழத்தைத் திருகியவள் ஆவலுடன் அதைக் கடித்தாள். மங்கைக்கும் ஒன்றைத் திருகி எறிந்தாள். இரண்டு நாட்பசிக்கு இதமாக இருந்தது. கெக்கரிக்காயைச் சாப்பிட்டானதும், இந்த சேனைப்புலவுக்கு உரியவர்கள் யாரும் வருவார்கள். வந்தால் அவர்களிடம் இது எந்த இடம் என்று கேட்டறிந்தால் எங்களுடைய இடத்துக்குப் போய் விடலாம் என்று நினைத்தாள் மங்கை. பானு சிரித்தாள். அப்படி யாரும் வர மாட்டார்கள். ஏனென்றால் இது வைகாசி மாதம் ஆடிக்குப் பிறகுதான் மந்து கொத்த யாரும் வரலாம். தை மாசியில் சேனைகளின் அறுவடை முழுதாக முடிந்துபோகும். அதன் பிறகு இங்கு மனித நடமாட்டம் பாலை பழுத்தால் இலுப்பை பூத்தால் என்று குறைந்து விடும். எப்போதாவது வேட்டைக்கு யாரும் வரலாம். அதுவும் இப்போது மக்களிடம் துப்பாக்கி இல்லாததால் இல்லை.

"யார் வரப்போகினம் இந்த வண்டில் பாதைய வச்சு நடக்கவேண்டியதுதான்..."

"முதல் தண்ணி வேணும்...."

வண்டிப்பாதையைத் தொடர்ந்து செல்ல பறங்கியாற்றின் கரையை அது கடந்தது. கோடை ஆரம்பம். முழங்கால் அளவு நீரே பாய்ந்து கொண்டிருந்தது. ஆவலுடன் அதில் இறங்கி முதல் கைகளை அலம்பிவிட்டு வயிறார அள்ளிக் குடித்தனர். இப்போது முகத்துக்கும் நிரம்ப நீரை அள்ளி தெளித்துக் களப்பை போக்கியதுடன் கால்களுக்கும் கைகளுக்கும் கூட தாராளமாக தண்ணீரை அள்ளி சொரிந்து கொண்டபோது.

பற்றைக்குள்ளிருந்து இரண்டு சோடிக்கண்கள் இவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தன. "யாராயிருந்தாலும் என்ன" என்பது போலல்ல, தோள்களில் தொங்கிய துப்பாக்கியும் உருமறைப்பான உடையும் அவர்கள் அவதானத்துடன் கவனித்தனர் எனக்கூறியது.

மெல்லத்தலையை நிமிர்த்திய பானு சட்டெனக் கொடிகளூடே திரும்பியவனைக்கண்டு அதிர்ந்தாள். "ஓ.... மங்கை..." எனக்கிசுகிசுத்தவள் சட்டென துப்பாக்கியைச் சரித்தாள். அதற்குள் "அக்காக்கள் அது நாங்கள்...." எனக்கூவினான் ரதன்.

"ஹக்.... ரதனண்ணை. இதுக்க என்ன செய்யிறியள்" என்றாள் மங்கை.

"ம்.. உங்களைப்போலதான் நாங்களும் காடளக்கிறம்"

"ஏதும் கண்டு பிடிச்சனீங்களோ. இல்லையக்கா... புளியம்பழம் அஞ்சாறு கிடக்கு தரவோ!" என்றபடி வெளியே வந்தான் ரதன். அவனோடு இன்னுமொரு போராளியும் நின்றான். இப்போது மங்கை சொன்னாள்.

"இந்தக் காட்டுக்குள்ளாகப் பாயுற ஆறு பறங்கியாறு. இது நொச்சிமோட்டையால வருது. மூன்று முறிப்புக்கருகிலயும் போகும். இப்பிடியே மேற்கால இந்த ஆற்று வழியா நடந்தா... ரோட்டுக்குப் போயிரலாம்." "ஓ...." என்றதை ஏற்றுக்கொண்டான் ரதன்.

எல்லோருமாக ஆற்று வழியாக நடக்கவாரம்பித்தனர்.

பகல் பதினொரு மணிக்கு அவர்கள் சின்னவயலயன்கட்டு என்ற கிராமத்தை அடைந்தனர். இதே ஆற்றில் குதித்து கிழக்கு நோக்கித் தப்பியோடியது சிங்கள இராணுவம்.

ஆம். 'வன்னி விக்ரம' என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட அந்த இராணுவ நடவடிக்கையை விடுதலைப் புலிகள் முறியடித்து விட்டனர். தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாது ராணுவம் தப்பியோடி விட்டது என்ற செய்தி தாமதமாகத்தான் பத்திரிகையில் வந்தது.

மீண்டும் தத்தமது இடங்களுக்குச் செல்ல முயன்ற மக்களைச் சென்று பார்வையிட்டாள் நளாயினி.

இதற்கிடையில் நாம் மகாலிங்கம் தவறவிட்டு விட்டு வந்த செல்லையாப்புவையும் இப்போது தான் காண்கிறோம். செல்லையாப்பு இந்த நான்கு நாட்களாக இராணுவத்தினரிடம் நின்றுவிட்டு இப்போது தான் வருகிறார். என்ன... சண்டை துவங்கிய நாள் மேச்சலுக்கு விட்ட மாடுகளைப் பிடித்துக் கொண்டு வருவதாகக் கூறிவிட்டுப் போனவர்தான். போய் ஒரு சிறிது நேரத்தில் மகாலிங்கமும் வண்டிகட்டிக்கொண்டு புறப்பட்டு விட்டார். மகாலிங்கம் வெளியேறிய கையோடு மளமளவெனப் பறந்து வந்த குண்டு வீச்சு விமானங்கள் செல்லையாப்புவின் வளவில் மட்டும் ஆறு குண்டுகளைப் பொழிந்தன. பக்கத்தில் இருந்த விதானையார் வீட்டில் ரெண்டு குண்டுகள் வீழ்ந்தன. எல்லோர் கண்ணும் படும்படியாக இருள் மண்டிய தென்னஞ்சோலைகள் நார்நாராய்க் கிழிக்கப்பட்டன. தேடாக் கயிற்றை திருகணயாக்கிக்கொண்டு செல்லையாப்பு மாட்டைத் தேடிக் கொண்டு மந்துக் காடுகளினூடாகப் போய் வயல் வெளியில் மிதந்தார். பச்சை உடையுடன் சிலர் நின்றனர். வோக்கிடோக்கியில் கதைத்தபடி நின்றவர்கள் புலிகள்தான் எனச் செல்லையாப்பு கருதினார். அவர்களில் ஒருவன் அவரைக் கண்டுவிட்டு... "கொஹெத யன்னே சீயா..." என்றான். செல்லையாப்புவுக்கு விசர் வந்திட்டுது.

"ஆங்... அங்காலை ஆமி வந்திடானாம். உதில நிண்டென்ன வாய் பாக்கிறியளே.... வெறுவாக்கில கெடுவாரே"


என்றார். சடசடவென அவரைச் சூழ்ந்தனர் சிறீலங்காப்படையினர்.

(இன்னும் வரும்)



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



சூரியநிலா

# அவர்களுக்காக அழுகிறோம்

அம்மாவின் முகத்தை விட்டு வெளியே பார்த்தேன். தடைக் கம்பிகள்தான் கண்ணில் பட்டன. மறுபக்கம் திரும்பிக்கொண்டேன். அம்மா ஆதரவாக தலையைத் தடவிவிட்டா.

முன்னர் அம்மாவின் மடியில் படுக்கச் சண்டைபிடிக்கின்ற தங்கை மிகவும் ஈடுபாட்டுடன் பத்திரிகையில் சினிமாப்பகுதி பார்த்துக்கொண்டிருந்தாள்.

புத்தம் புதுப் பத்திரிகை மணம் இனிமையாய் நாசியிலேறியது. அற்புதமான அரசியல் கட்டுரைகள் அநேகம் வந்திருக்கும், அவற்றை விட்டுவிட்டு....,யாராவது இரண்டு வரிக் கவிதைக்குள் இமயத்தைப் பொதித்திருப்பார்கள். அதை இரசிக்காமல்....,கண்ணீரை வரவழைக்கின்ற மாதிரி நல்லகதையொன்று பிரசுரிக்கப்பட்டிருக்கலாம், அதில் லயிக்காமல்... என்ன இது?

எட்டிப் பத்திரிகையைப் பறித்தேன். அவள் இழுத்துக்கொண்டு தள்ளிப்போய் அமர்ந்து பார்த்தபோதுதான் பத்திரிகையின் ஒரு துண்டு எனது கையில் இருப்பது தெரிந்தது. அது அவள் ஆர்வமாகப் பார்த்த பகுதிபோலும், அவளுக்கு கண் சிவந்து துண்டைப்பறிக்க வந்தாள். நான் அதனைப் பிய்த்துக் கசக்கி எறிந்தேன்.

அவள் அடித்தாள். நான் சிரித்தேன்.

“அவள் பார்த்தா உனக்கென்னடி செய்யுது?”

அப்பா கேட்டார். குரலில் லேசான கோபம்.

“இது மனித உரிமை மீறல்”

தம்பி தன் பங்கிற்குச்சொன்னான்.

இக் கருத்துக்கள் அவளுக்கு வலுவூட்டியிருக்க வேண்டும்.

என்னுடன் சண்டை பிடித்ததில் கலைந்திருந்த தலையைக் கைகளால் ஒரு இழுவை இழுத்து வளையமொன்றைப் போட்டுக்கொண்டு வெளியே போனாள்.

அம்மாவிடம் இருந்து மெல்லிய பெருமூச்சொன்று வெளிப்பட்டது. அதற்கு அர்த்தம் சொல்லப்போனால் ஒரு புத்தகமே வெளியிடலாம். ஆதரவாக அம்மாவைப் பார்த்தேன். கண்கள் மின்ன அம்மா வேறு திசையில் பார்த்தா. நான்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

என்னையறியாமல் வாசலைப் பார்த்தேன. அதே தடைக்கம்பிகள். திரும்ப முயல்கையில் தங்கை அவற்றிற்கு முன்னால் வந்துகொண்டிருந்தாள். கைகளில் இன்னொரு புதுப் பத்திரிகை.

"இது என்ன பிடிவாதம்?"

அம்மாவின் மடியில் இருந்து சட்டென்று எழுந்து அமர்ந்து கேட்டேன்.

"நீதான் துறவியெண்டா, ஏன் அவளும் அப்படியிருக்கவேணுமே?" தங்கை வெற்றிப் பெருமிதத்துடன் சிரித்தாள். சடாரென்று எனது பார்வை மாறியது. மீண்டும் அதே காட்சி. நான் அவளை ஊடுருவினேன்.

"ஏன்ரி இருந்திட்டு ஒருமாதிரிப் பார்க்கிறாய்?"

அவள் அருகில் வந்து முழந்தாளிட்டு அமர்ந்து கேட்டாள்.

"காயம், கீயம் பட்டிருப்பாள். மண்டைப் பிசகாக்கும்"

என்றான் தம்பி, நான் தலையை உதறிக்கொண்டு மீண்டும் அம்மாவின் மடிக்குள் அடைக்கலமாகினேன்.

நான் துறவியா?

நிம்மதியும், யாருக்கும் பணிந்திடாத வாழ்வும், சிட்டுக்குருவியின் சுதந்திரமும் சாதித்துக்காட்டவேண்டும் என்ற ஆவலும் கொண்ட நான் துறவியா? எனக்கென்று ஒரு தேசம், அதிலொரு சந்தோசமான வாழ்க்கை எனக்கும் மற்றவர்களுக்கும் கிடைக்கவேண்டும். அறிவியல்துறைகளில் என் தேசம் முன்நிற்க வேண்டும் என்று ஆயிரம் கனவும், ஆசைகளும் வளர்க்கும் நானா துறவி?

"அம்மா...."

கூப்பிட்டு விட்டுக் கத்தியழ ஆரம்பித்தேன்.

எத்தனை நாட்கள் அடங்கிய கண்ணீர்? சக தோழர்களின் வீரச்சாவுகளின் பொழுதும், வறுமை மனிதர்களை வருத்திய அவலங்களின் போதும், காயப்பட்ட வேளையிலும், மலேரியாவில் நொந்த நேரத்திலும் அடக்கிய அழுகை அன்னையின் மடிச்சூட்டில் வெடித்துக் கிழம்பியது.

எவ்வளவு நேரம் அழுதேன் என்று தெரியவில்லை. மெதுவாக அடக்கிக்கொண்டிருந்தேன். அம்மாவின் கண்ணீர்த்துளிகள் என்மீது பட்டுச்சிதறின.

"நங்கி,ஏன் அழுறது?" துள்ளியெழுந்தேன் நான். அவமானத்தில் உடல் கூசியது. என்வீட்டில் நான் அழுதால் கேட்பதற்கு இவன் யார்?

"அக்காவுக்கு மனநிலை சரியில்லை. நீங்கள் போங்கோ இல்லையெண்டா இன்னும் கத்துவா"

என் தங்கை ஆங்கிலத்திலும், தமிழிலும் அவனுடன் கதைத்தபடி படியிறங்கிப்போனாள். அவளது ஒரே முகமே தெரிய எனது பார்வை அதனை வெறித்தது.

*** *** ***

அழகிய காலை ஒன்றின் இதமான சூரிய வெளிச்சம் முகத்தில் பரவ சந்தோசமாக விழித்துப் பார்த்தேன். சூரியன் கூட தடைக்கம்பிகளுக்குள்ளால் தான் தெரிந்தது. எரிச்சல் வந்தது. நான் விடுமுறையில் வந்து இன்று மூன்றாவது நாள். உடனேயே புறப்பட்டு ஓடிவிட வேண்டும் போலிருந்தது. விடுமுறை முடிவதற்குள் விசர்பிடித்துவிடப் போகின்றது.

கதவைத் திறந்தால், யன்னலால் பார்த்தால், முற்றத்தில் நின்றால், கிணற்றடியில் நின்றால் என்று எங்கிருந்து பார்த்தாலும் தடைக்கம்பிகளும், இடையிடையே காவலரண்களும், இந்த வாழ்க்கை வேண்டாம் என்றுதானே போராடப்போனேன். பிறகு இதனை எவ்வாறு சகித்துக்கொள்வது?

யுத்த நிறுத்தம் தந்த நம்பிக்கை எனது குடும்பத்தினரை உயர்பாதுகாப்பு வலயத்திற்கு அருகில் உள்ள சொந்த வீட்டில் குடியேற வைத்திருக்கின்றது. காஞ்சோண்டி பட்டமாதிரி அந்த இடத்தின் புறச்சூழல் என்னை அரித்துக்கொண்டே இருந்தது. இரவில் வீட்டில் நிற்க முடியாது. வலயச் செயலகம் செல்லவேண்டியிருந்தது. நேற்று மாலையில் இன்னும் இருவர் என்னிடம் வந்ததால் மூவரும் சொல்லிவிட்டு வந்து வீட்டிலேயே தங்கிவிட்டோம்.

அவர்களது ஞாபகத்தில் வேகமாக எழுந்தேன். அம்மா தேனீருடன் எதிர்ப்பட்டா. எவ்வளவு அருமையான வாழ்க்கை இது. எப்படி என்னால் அம்மாவைப் பிரிந்திருக்க முடிகிறது என்பது புரியவில்லை. ஆனால் எதற்கும் ஏங்காத நிறைவான பாசத்தை நான் எனது அம்மாவிடம் இருந்து பெற்றிருக்கின்றேன். ஆனால் அன்னையின் பாசத்தை அனுபவிக்காதவர்களும், அது அரைவாசியிலேயே பறிக்கப்பட்டவர்களும் எத்தனைபேர். எனது தோழிகளுக் குள்ளேயே ஒவ்வொருத்திக்கு ஒவ்வொரு கதை.

கண்வெட்டாமல் அம்மாவைப் பார்த்துக்கொண்டே தேனீர்கோப்பையை எடுத்தேன். தேனீர்த்தட்டை வலது கைக்கு மாற்றிக்கொண்டு இடது கையால் என்னை அணைத்து நெற்றியில் கொஞ்சிவிட்டு தோழிகளின் தேனீருடன் போனா அம்மா.

நான் நின்ற இடத்திலேயே நின்றேன். அம்மா என்பது எத்தனை அற்புதமான உறவு. கண்கள் கலங்கின.

எனது தோழிகளைக் கவனித்து அனுப்பிவிட்டு வந்தபொழுது தங்கை தனது தோழிகளுடன் இறுதியாக வந்தபடம் பார்க்கப் போயிருந்தாள். தம்பி கணினியில் விளையாடிக்கொண்டிருந்தான்.

"இங்க வா அக்கா. இதைச் செய்து பார்"

என்று தம்பி கூப்பிட்ட தொனியில் நான் அதனை விளையாடி முடிப்பேன் என்ற தொனி தெரியவேயில்லை.

திகைக்க வைத்த இறுக்கமான சூழ்நிலைகளுக்குள்ளாலெல்லாம்

கறுப்புக் கயிற்றில் இருந்த வெண்மையான சாவைப் பற்களுக்கிடையில் வைத்தபடி தப்பி வந்தவள் நான். அதே மடார்த்தனத்தை விளையாட்டிலும் கவனமாகப் பிரயோகித்தேன். கணினியை நான் பழுதாக்கிவிடப் போகின்றேன் என்ற பதற்றத்துடன் தம்பி நுனிக்கதிரையில் இருக்க முடியாமல் இருந்தான். இறுதியில்

"அக்கா ஒருக்கா திருப்பி விளையாடு"

என்று தம்பி கெஞ்ச, நான் சோம்பல் முறித்தபடி எழுந்தேன்.

"என்ன இவள் விளையாடி முடிச்சிட்டாளா?"

நம்பமுடியாதவளாய்த் தங்கை ஓடிவந்தாள். அவளை மீண்டும் அப்படி பார்த்துவிடுவேனோ என்ற பயத்தில் வேகமாக விலகிப்போனேன்.

இருந்தும் மனதில் வந்தது அந்தத் தோற்றம். கூரான நாசி, சீரான பல்வரிசை. மேல் வரிசையில் கடைசிப் பல்லொன்றை வலிதாங்காமல் பிடுங்கிவிட்டாள் என்று அம்மா சொன்னா. அப்புறம் அழகான அகலத்தில் நெற்றி. வட்டாரி வைத்து வளைத்தமாதிரி சரியான வளைவில் தலை. சீ! என்ன இது? எனக்கே என்னில் வெறுப்பு வந்தது. அவள் எனது தங்கை. பிறந்தவுடன் அம்மாவிற்கு முதல் பனிமலராய்ச் சிலிர்த்த அவளை தொட்டுப் பார்த்தது நான்தான். நானும் போனால்தான் குளிக்க வருவாள். என்னுடன்தான் பாடசாலைக்கு வருவாள்.

படுக்கும்பொழுது அவளது காலணை நான்தான். தம்பி அடித்தால் எனக்குத்தான் சொல்லியழுவாள். அம்மாவும் அப்பாவும் பாசமழை பொழிந்தாலும் அவளது நேசம் என்மீதுதானிருந்தது.

வளர்ந்த பின்னும்கூட அவளது பிறந்ததினத்திற்கு எனக்கும் உடுப்பு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எடுப்பாள். அக்காவை விட என்மீது அப்படியொரு பற்றுதல். ஒருமுறை அவனது பொருளைக் கைதவறி உடைத்ததற்காக தம்பி என்னைக் கண்படி பேசியபோது முதல் முறையாய் அவனைக் கைநீட்டி அடித்திருக்கின்றாள். வீட்டில் இருக்கும் வரை எவ்வளவு பாசமாக இருந்தோம். பாடசாலை, பிரத்தியேக வகுப்பு என்று எங்கே என்ன நடந்தாலும் எனக்குச் சொல்லாவிட்டால் அவளுக்குத் தலை வெடித்துவிடுமே.

என்னைப் பிரதி செய்தது மாதிரி. ஆனாலும் கொஞ்சம் துடிப்பு அதிகமாய் வளர்ந்தவள். இன்று எப்படி மாறிவிட்டாள். நாட்டு நடப்பு புரியாமல் விளையாட்டுத்தனத்துடன் தேவையற்ற விடயங்களில் கவனத்தைச் சிதறவிட்டுவிட்டு இலட்சியம் இல்லாமல் பொழுதைக் கழித்தபடி எங்கோ போய்க்கொண்டிருக்கிறாள் இவள்?

மாலையில் அக்கா வீட்டிற்கு நானும் தம்பியும் போனோம். சாந்தமான அக்கா, சந்தோசமான அத்தான், கவிதையாய் எனது பெறாமகள்

சூழலுக்கேற்ப விவேகமாய்ச் செயற்படும் தம்பி. இவர்களைப் பார்க்கையில் தோன்றாத ஒன்று ஏன் அவளைப் பார்க்கும்போது மட்டும் வருகின்றது? 'இளங்கன்று பயமறியாது' என்பது போல் அவள் திரிவதனாலா?

அத்தானுக்கு என்னிலே ஒரு தனிப்பாசம். எனது வழி அவருக்குப் பிடித்தேயிருந்தது. என்னுடன் நிறையக் கதைத்தார். சில விடயங்களைப் பற்றிக் கதைக்கையில் எனக்குக் கோபம் வந்தது. நான் உணர்ச்சி வசப்படுவதை எனது பெறாமகள் தனது பெரிய விழிகளை உருட்டிப் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

புறப்பட வேண்டிய நாள் வந்தது. என்னுடன் நின்ற இன்னுமொரு தோழி வந்திருந்ததால் நான் பயணத்திற்குக் தயாராகிக் காத்திருந்தேன். அப்பா தனது கவலையை மறைக்கச் சிரமப்பட்டார். அம்மா எப்போதும் போலவே நிதானமாய்....தம்பி எனது கைகளைப் பற்றியபடி பக்கத்திலேயே இருந்தான்.

"நான் உன்ன உழைச்சுப் பார்கிறன் நீ வாவன்"

தம்பி கண் கலங்கினான். "இப்ப நானும் உழைப்பன்" நீரைத்துடைத்துவிட்டேன். நீண்ட நேர மௌனத்தின் பின், "நானும் உன்னோட வரட்டா?"

என்றான். நான் பதில் சொல்லவில்லை. தங்கையைக் காணவில்லை. காலையிலேயே அழுதது. அவள்தான். உணர்ச்சிகளை அடக்கத் தெரியாத பிறவி.

அக்காவும், அத்தானும் வந்தார்கள்.



பெறாமகள் என் மடியிலேயே அமர்ந்துகொண்டாள். அவளுக்கு என்னிலே ஏதோவொரு ஈர்ப்பு இருந்தது. அப்படியென்றால் இவளும் தப்பிவிடுவாள். தம்பியும் சிந்தித்து முடிவெடுப்பான். தங்கச்சி என்ன செய்யப்போகிறாள்?!

எனது தோழி வந்ததும் நாங்கள் புறப்பட்டோம். கவலைகளை மறைத்தபடி கையசைத்தார்கள். தங்கை வலிந்து புன்னகையை வரவழைத்துச் சிரித்தாள்.

"எங்கேயும் போர் வன்முறைகளால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களே" என்று அண்ணை மனதிற்குள் சொன்னார். என்னையறியாமல் எனது பார்வை மாறியிருக்க வேண்டும். தோழி என்னைத் தட்டினாள்.

நான் தலையை உதறி விடைபெற்றேன் கண்கள் கலங்கின.

"ஏன் தங்கச்சியை அப்படிப் பார்த்தனீர்?"

தோழி கேட்டாள். நான் வேறு திசையில் பார்த்தேன். விழிகளில் நீர் முட்டியது.

"சொல்லக் கூடாதெண்டா வேண்டாம்"

அவள் சமாதானப்படுத்தினாள்.

"அப்பிடியில்ல ஏனோ தெரியாது. அவளின்ர மண்டையோடு எப்படியிருக்கும் எண்டு பார்த்தனான்" தோழி திகைப்புடன் பார்த்தாள்.

"என்னையறியாமல் அந்தச் சூழல் அவளை அப்பிடிப் பார்க்க வைக்குது. அவளின்ர மண்டையோட்ட எப்பிடி அடையாளம் பிடிக்கிறதெண்டுதான் பார்த்தனான்"

"ஏனப்படி நினைக்கிறீர்?"

தோழிகேட்டாள். "பின்ன, பார்க்கிற இடமெல்லாம் தடைக்கம்பி தெரிஞ்சா வேற என்னதான் நினைக்கிறது?"

நான் வெளியில் பார்த்தபடி சொன்னேன். தோழியிடம் இருந்து பதில் இல்லை. கண்களைத் துடைத்துக்கொண்டு திரும்பிப் பார்த்தேன். அவள் கண்கள் கலங்க இலக்கின்றி பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஓ! அவளுக்கு இரண்டு சகோதரிகள் இருக்கிறார்கள். நான் ஆதரவாய் அவளது கைகளைப் பற்றினேன்.

வழியில் வாகனத்தை மறித்து செல்வன் அண்ணா ஏறினார். அவரும் எங்களுடன் வந்து விடுமுறை முடிந்து திரும்பும் போராளிதான். அவரது முகத்திலும் சோகம் அப்பிக்கிடந்தது. அவருக்கும் ஓவியமாய் ஒரு சகோதரி அல்லது சகோதரர் இருக்கக்கூடும்.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மீண்டும் ஊர்களுக்கு திரும்பியிருக்கிறோம்
கிளைமுறிந்த மரங்கள் – இப்போது
துளிர்ப்பதாய்
எல்லோரும் சொல்கிறார்கள்
துணையிழந்த கரிக்குருவி
ஒற்றைக் காலுடன் நிற்கிறது
அதனுடைய பாடல்
இப்போது சங்கீதமா?
ஈனஸ்வரமா?
ஊரின் குறுக்கே – ரம்மியமாய்
படுத்துக் கிடக்கிற ஆறு – இப்போது
வறண்டு விட்டது
ஊரைப் பிரிந்தவனின்
வாழ்வைப் போல

ஊரின் குறுக்கே – ஆறு
வறண்டதற்கும்
வாழ்வு சரிந்ததற்கும் – சாட்சியாய்
பண்டுகளும், மிதிவெடிகளும்
ஆற்றின் கரையிலும்
இப்போது நரை –நான்
திரும்பி வந்தபோது
மரங்களின் கருகிய இலைகளின்
சரசரப்புக்களைக் காற்று
இழுத்து வந்தது
ஆற்றின் சுடு மணலில்
கால்வைக்க முடியவில்லை
கரையில் தெரிகிற
பட்ட மரங்களின் அடியில்
குந்தியிருக்கிறது நிழல்
எனது வாழ்வின் மகிழ்வை
வெளிகளும் பாடி
துளிர்களும் பாடி–இப்போது
குயில்களும் பாடத்தொடங்குகிறது
இனி....
புதைந்து கிடந்த இடத்திலிருந்து
எனது ஆற்றை
ஊரின் குறுக்கே
ஓட்டப்போகிறேன் –மீண்டும்
வெளிகள் தோறும்
எனது வயல்களில் – ஈரம்
பாய்ச்சப் போகிறேன்
இடிந்து கிடக்கும் தூண்களுக்கருகில்
கிடந்து துடித்த எனது
ஊரின் ஆன்மாவை மீண்டும்
எழுப்பி நிறுத்தி மீண்டொரு வாழ்வு
காணப்போகிறேன்.



# ஊர் மீண்டவனின் பாடல்

முல்லைக் கமல்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# போரும் வா

உண்மைப்பதிவு 7

மணலாறு விஜயன்



## ஆணிவேர்

மாமர நிழலின்கீழ் அழகான வட்டக்கொட்டில். கொட்டிலுக்குள் இருந்த கதிரையில் அமர்ந்திருந்தேன். உரும்பிராய் பாக்கியம்மாவின் போர்க்காலப் பணிகள் பற்றி அறிந்துவிடும் ஆர்வம் மனதில் நிறைந்திருந்தது.

அஞ்சாநெஞ்சன் சிவகுமாரனைத் தந்த கிராமம். மண்ணுக்கும் அந்த மண்ணின் மக்களுக்கும், அந்த மக்களின் வீரத்திற்கும் நெருக்கமான தொடர்பு இருக்கத்தான் செய்கிறது. நான் எதிர்பார்த்துக் காத்திருந்த போராளி வந்துகொண்டிருந்தான். மூன்று சக்கர சைக்கிள் வண்டி மற்றுமொரு போராளி அதனை உருட்டிக்கொண்டு வந்தான். ஆறு ஆண்டுகளுக்கு முன் பூநகரிச்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# வும்





சண்டையில் காயமுற்று இடுப்புக்குக் கீழே உணர்வினை இழந்திருந்தான்.

'பொக்கற் டோக்' ஒன்று அவனது சைக்கிளைச் சுற்றிச் சுற்றி ஓடிக் குரைத்தது. அவன் கால்கள் இடையே கவ்வியது. அது அவன் வளர்க்கும் செல்லப் பிராணி. அவனை வெளியே செல்ல விடாது அவனது காலடியில் படுத்திருக்கும். யாரும் அவன் உடம்பில் முட்டினால், அல்லது அவனைப் பேசினால் பிடிக்காது.

சைக்கிள் வட்டக் கொட்டிலுக்குள் வந்து நின்றதும் குரைப்பதை நிறுத்திவிட்டு, என்னை மணந்து பார்த்தது. பின்னர் அவன் காலடியில் படுத்துக்கொண்டது.

ஐந்தறிவுப்பிராணி அவன் மீது எந்தளவு அன்பு வைத்திருந்தது. அவனைப் பாதுகாப்பதில் எவ்வளவு அக்கறையாக இருக்கின்றது.

"வணக்கம் மாஸ்ரர்" என வணக்கம் தெரிவித்த போராளிக்கு பதில் வணக்கம் கூறினேன்.

"என்ன, ஏதோ எழுதப் போறியள் போலக்கிடக்கு" என முன்கூட்டியே எனது எதிர்பார்ப்பை புரிந்துகொண்டு கேட்டான். உரும்பிராய் பாக்கியம்மாவைப் பற்றிக் கதைப்பமெண்டு... என வாக்கியத்தை முடிக்காமலே நிறுத்தினேன். அம்மா பாதுகாத்து வளர்த்த போராளிகளெல்லாம் வீரச்சாவடைஞ்சிட்டார்கள். பிள்ளையளிட்ட ஓரளவு கேட்டு அறியலாம். அதிலும் இரண்டுபேர் வீரச்சாவு. ஒரேயொரு மகன்தான் இருக்கின்றான். அவனும் உடம்பெல்லாம் எரிகாயங்களோட 'மெடிசினில்'தான் கிடக்கின்றான். அவனும் வீரச்சாவடைஞ்சிட்டால் அந்தக்குடும்பமே அழிஞ்ச மாதிரித்தான். விடுதலை கிடைச்சா இதுகளைப்போல குடும்பங்களுக்கு பெரிய வரலாறே எழுதோணும் மாஸ்ரர்.

அம்மா எங்கட இயக்கத்தை சோறூட்டி பாதுகாத்து வளர்க்கேக்க, இப்ப களத்தில நிக்கிற மகன் சின்னப் பொடியன். உரும்பிராய் சுற்றிவளைப்பெண்டால் அம்மா வீடு தப்பாது. அது மட்டுமல்ல இவனைத்தான் விசாரணைக்கெண்டு கொண்டுபோவார்கள். தாயும் பிள்ளையளும் எங்களுக்காகப் பட்ட துயரம் கொஞ்ச நஞ்சமில்ல.

1985ம் ஆண்டு மாவீரன் காந்தியண்ணன்தான் முதல்ல அம்மாவீட்டில தொடர்பை ஏற்படுத்தினவர். அது முதலே தந்தை செல்வாவின்ர காலத்தில அம்மா அகிம்சை போராட்டங்களில் எல்லாம் கலந்து கொண்டிருக்கு. ஆளொரு சமூகப்பிராணி, மற்றாக்களின்ர துன்பத்தில பங்கெடுக்கிறதுதான் அம்மாவுக்குத் திருப்தி.

காந்தியண்ணன் தொடர்புக்குப் பின்னர் முரளியண்ணன், பைப்பண்ணன், திலீபன் அண்ணன் என ஆரம்பகாலப் போராளிகள் எல்லோருமே அம்மா வீட்டுக்கு வரத் தொடங்கினார்கள். வீடு இரகசியப் பாசறையாக மாறியது. அந்தப் பழைய போராளிகள் எல்லாருமே வீரச்சாவடைஞ்சிட்டாங்கள். அல்பேட் வீரச்சாவடைஞ்சாப் பிறகு 'அல்பேட் பேஸ்' என்றே அம்மாவினுடைய வீட்டிற்குப் பெயரிட்டோம். வீடு முழுமையான பாசறையாய் மாறியபின், அம்மா இருப்பிடத்தை மாற்றிக்கொண்டா. இருப்பிடத்தை மாற்றினாலும் எங்கட வயிற்றை நிரப்புமிடம் அம்மாவின் தங்கிடந்தான். இரகசியமாகப் பலர் சந்திக்கும் தொடர்பகமும் அம்மா வீடுதான். போகவேண்டிய இடமெல்லாம் போய் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பெரும் பணியையும் அம்மாவே செய்வாள். இலங்கை ஆமியைவிட இந்திய ஆமிக்காரன்ர காலத்தில்தான் நாங்கள் மிகக் கஸ்ரமான நெருக்கடிகளைச் சந்திச்சம். எங்களைவிட நெருக்கடிகளைச் சந்தித்து அவற்றையெல்லாம் சமாளிச்சு எங்களைக் காப்பாற்றின உன்னதமான பிறவி அம்மா. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுத்ததெண்டு சொல்லி அண்ணையை இந்தியாவில் பிடிச்சு அடைச்சபோது, அம்மா இஞ்ச பட்டபாடு சொல்லிலடங்காது. அண்ணையை விடுவிப்பதற்கு நடந்த ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் எல்லாத்திலேயும்

விசர்பிடிச்சமாதிரி பங்குபற்றித் திரிஞ்சா. சாப்பிட, குளிக்க, உடுப்புத் தோய்க்க நேரம் இல்லாமலத் திரிஞ்ச அந்த நாள் தொடங்கி அம்மாவுக்கு ஓய்வில்லை. இந்தியப்படை வந்தபின்னர் லெப்.கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா உட்பட பன்னிரெண்டு போராளிகளையும் கைது செய்து பலாலி முகாமில் அடச்சு வைச்சிருந்தபோது பலாலி முகாம் வீதியில நடந்த மறியல் போராட்டத்தில முன்னுக்கு நின்று கோசங்கள் எழுப்பினா.

எனக்கு நல்ல ஞாபகம், எங்கட இயக்கம் ஆரம்பித்த முதல் மேதின ஊர்வலம் உரும்பிராய் சிவகுமாரனின் சிலையடியில இருந்துதான் ஆரம்பிச்சது. அந்த ஊர்வலத்தில் ஊர்திகள் செய்து ஊர்வலம் சிறப்பாய் நடந்து முடிய முழுமையாய் செயற்பட்டாக்களில அம்மாவும் ஓராளாய் நிண்டா.

திலீபன் உண்ணாவிரதமிருந்து மாவீரனாகியதும் ஆளைச்சரியாய்ப் பாதிச்சுப்போட்டுது. திலீபனுக்கு சோறு பிரட்டி, கையில கவளமாக்கி கொடுத்து, சாமமெண்டும், மழையெண்டும், குளிரெண்டும் பாராமல் பாதுகாத்து வளர்த்த போராளி, உண்ணாமல், உறங்காமல், உடல்சோர்ந்து, விழிசெருகி, கருகிக்கிடந்த காட்சியைக் கண்டு அவவால் எப்படிப் பொறுக்கமுடியும். பன்னிரண்டு நாளும்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஆணிவேர்

மணலாறு விஜயன்

பக்கத்திலிருந்து அழுதா, திலீபனுயிர் பிரிந்தபின் நடந்த ஊர்வலங்களில் காளி மாதிரி நிண்ட காட்சியை மறக்கேலாது. இந்தியப் படையோடு சண்டை தொடங்கியபின், சொல்லமுடியாத நெருக்கடிகளை நாங்கள் சந்திச்சம். கோப்பாய், நீர்வேலிப்பகுதி எங்கட முக்கிய மறைவிடமாய் இருந்தது. அப்பவெல்லாம் அம்மா சாப்பாடு சமைச்சுத் தேடிவருவா. நாங்கள் போய்நிண்டு சாப்பிடும் அவ்வளவுக்கு நிலமையிருக்கவில்லை. அம்மா வீட்டுக்கு போய் வந்த அடுத்த நிமிசமே ஆமி சுத்திவளைச்சிடுவான். இரவில மரவள்ளித் தோட்டத்துக்க வைச்சே சோறு பிரட்டித் தந்து பசி தீர்த்த நாட்கள் பல.

உரும்பிராய் பூபதி கலையரங்கத்தில இந்தியன் ஆமிக் காம்ப் இருந்தது. உரும்பிராய் அடிக்கடி சுற்றி வளைக்கப்படும். அப்போதெல்லாம் அம்மா வீடுதான் கடும் சோதனைக்குள்ளாகும். அதற்குக் காரணமில்லாமலில்லை. சண்டை மோசமாக நடந்து கொண்டிருந்தபோதெல்லாம் காயப்பட்ட போராளிகளுக்கு அவசர சிகிச்சையளிக்கப்படுகின்ற இடம்கூட இந்த வீடுதான். பெண்போராளிகள் பலர் தங்கி மறைந்து வாழ்வதற்கான இடங்களையும், அதற்கான ஒழுங்குகளையும் அம்மாதான் செய்துகொடுப்பா. இராணுவ நடமாட்டங்கள் பற்றி அம்மாவின் கடைசி மகன் தகவலறிந்து வருவான். பள்ளிக்கூடம் போகும் சிறுவனாக இருந்ததால் சிப்பாய்கள் அவனைச் சந்தேகிப்பதில்லை. அவனும் சாதுரியமாகப் பேசித் தப்பித்துக்கொள்வான்.

வீடு அடிக்கடி சுற்றிவளைக்கப்பட்டதால் போராளிகளுக்குச் சமைத்துக் கொடுப்பது அம்மாவுக்குச் சிரமமாக இருந்தது. அதனால் தனியாக ஒருசிறிய கொட்டில் வீடு போட்டுக்கொண்டே நீர்வேலியிலுள்ள பாசறையொன்றுக்கு சாப்பாடு கொண்டு செல்வதற்காக பெரிய பானையொன்றில் தோசைக்கு மாப்போட்டிருந்தா. அன்று அம்மா வீடு சுற்றி வளைப்புக்குள்ளானது.

காந்தியண்ணன் அங்கு வந்ததாக யாரோ தகவல் கொடுத்திருக்க வேண்டும். வந்ததும் "காந்தி..... காந்தி இங்கே வந்தானா?" என ஒருவன் கேட்க மற்றவர்கள் வீட்டுக்குள் புகுந்து தேடினர். பெரிய பானை நிறைய தோசைக்கு மா போட்டிருப்பதைக் கண்டுவிட்டனர். "ஓய் இது என்ன? புலிக்கு சாப்பாடு சமைச்சுக் கொடுக்கிறதா?" எனக் கேட்டபோது அம்மா தர்ம சங்கட நிலைக்குள்ளானார். மாப்பானையை சப்பாத்துக் காலால் அடித்து உதைத்தனர். காட்டிக்கொடுக்கும் துரோகக் கும்பல்களும் கூடவே வந்திருந்ததால் அம்மா கைது செய்யப்பட்டா. பிள்ளையள் மூவரும் அழுதனர். பயனில்லை.

பன்னிரெண்டு நாட்களாய் அம்மா அடித்துத் துன்புறுத்தப்பட்டார். "பிள்ளையள் பசிக்குதெண்டு வந்தால் சமைச்சுக் குடுப்பன். அதைத் தடுக்க நீங்கள் யார்" என்று அம்மா துணிவாக வாதாடினாள். சித்திரவதைக்கு அஞ்சாது சித்திரவதையுடனே பேசியதால் சிப்பாய்களுக்கு எதுவும் செய்யமுடியவில்லை. இரண்டு வாரங்களின் பின் அம்மா விடுவிக்கப்பட்டாள். வந்த அன்றே நாம் அம்மாவைப் பார்க்கச் சென்றோம். பார்க்கச் சென்றோம் என்று சொல்வதைவிட சாப்பிடச் சென்றோம் என்றே சொல்லலாம்.

சித்திரவதையால் நொந்திருந்த அம்மாவுக்கு எங்கள் மீதிருந்த பற்றும் பாசமும் கொஞ்சங்கூடக் குறையவில்லை. நாங்கள் உடனே தன்னிடம் வந்ததே அம்மாவுக்கு பெரிய ஆறுதலாக இருந்தது. மாற்று இயக்கங்களைச் சேர்ந்த துரோகிகளின் பார்வை அம்மாமீது விழத் தொடங்கியது. அதற்கு ஒரு முக்கிய காரணமிருந்தது. எங்கட இயக்கம் மற்ற இயக்கங்களைத் தடைசெய்தபோது அந்த இயக்கத்தில் இருந்தவங்களெல்லாம் தங்கட ஆயுதங்களையெல்லாம் பார்சல் பார்சலாகக் கட்டி தமது உறவினர் வீடுகளில் மறைத்து வைத்துவிட்டு ஓடி ஒளித்தனர். அந்த நேரம் எங்கெங்க ஆயுதங்கள் இருக்கின்றதென்பதை மிக விரைவாக தனக்கென்றிருந்த நம்பிக்கையான உறவுகளூடாக தெரிந்து காந்தியண்ணனுக்குத் தெரியப்படுத்தினார். அவருடைய புத்திசாதுரிய நடவடிக்கையால் பெருமளவு ஆயுதங்களைக் கைப்பற்றமுடிந்தது. பலருடைய வீடுகளில் புகைக்கூட்டுக்குள்ளிருந்தெல்லாம் ஆயுதங்களைக் கைப்பற்றினோம். அந்தக்கோபம் அவர்களுக்கு ஆழமாக மனதிலிருந்தது இந்தியப் படைகளின் பக்கபலம் தமக்குக் கிடைத்ததும் அம்மாவைத்தீர்த்துக் கட்டிவிட வேண்டுமென்ற முடிவுக்குக் கூட வந்தனர்.

1988ம் ஆண்டு, ஆனி மாதம், மாலை ஏழு மணியிருக்கும். மழை மெதுவாகத் தூறிக் கொண்டிருந்தது. சாதாரண உடையில் வந்த மாற்று இயக்கத் துரோகிகள் கேற்றடியில் நின்று "சுபாஸ்... சுபாஸ்" எனக் கூப்பிட்டனர். இந்தியச் சிப்பாய்கள் சுற்றி வளைத்தாலும் அம்மாவின் கடைக்குட்டியான சுபாஸைத்தான் கூப்பிட்டு கதவில் தட்டுவார்கள். பலதடவைகள் அவனை விசாரணைக்காக கொண்டு சென்றிருக்கிறார்கள். அதனால் அவனுடைய பெயர் நல்ல பாடம். சிறுவனாக இருந்ததால் அவனுக்கு உயிராபத்து ஏதும் ஏற்படவில்லை.

குரல் சற்று வித்தியாசமாக இருந்ததால் கேற்றுக்கு வெளியே வராத அம்மா முற்றத்தில் நின்றுகொண்டே ஆரது...... எனக் கேட்டா.

கேற்றைத் துறந்து கொண்டு உள்ளே வந்த ஒருவன் "உங்கால ஒருக்கால் போகோணும், ரோட்டில ஆமி நிக்கிறானோ எண்டு பார்த்துச் சொல்லுங்கோ" எனக் கேட்டான். எங்கட போராளிகளுக்கு ரோட்டில ஆமி இல்லையெண்டால்தான், எங்களைப் போகவிடுவா. இதையும் துரோகிகள் அறிந்திருந்தார்கள். அதனால் எங்களைப் போல உடுப்புடன் வந்து கேட்டால் அம்மா ரோட்டுக்குப் போவா அ[illegible] தங்கட திட்டத்தை நிறைவேற்றுவதும் லேசாக இருக்குமெண்டு நினைச்சாங்கள். இரவு பகலாய் எங்களை பக்கத்தில் இருத்தி சோறு தந்த அம்மாவுக்கு எங்கட குரலையும் எங்கட செயற்பாடுகளையும் தெரியாமலா இருக்கும்?...

குரலிலிருந்தே வந்திருப்பதும், கேட்பதும் நாங்களில்லை என்பதை அம்மா உடனே புரிந்து கொண்டார். வாசலில் நின்ற மகளும் இதனை இனங்கண்டுவிட்டாள். உடனே "அம்மா கேற்றுக்கு வெளியில போகவேண்டாம். சாத்திப்போட்டு உள்ளே வாருங்கோ" என மகள் கூற அம்மாவும் வீட்டுக்குள் செல்வதற்காகத திரும்பினார். அடுத்தகணம் துரோகிகள் துப்பாக்கிக் குண்டுகள் அம்மாவைத் துளைத்தன. குருதி பெருக முற்றத்தில் வீழ்ந்தாள். அம்மா எங்களுக்காய் சமைத்த கரங்கள் முற்றத்து மண்ணை இறுக்கப் பிடித்தன. எங்களுக்காய் விழித்திருந்த விழிகள் மூடிக்கொண்டன. எங்களுக்காய் இயங்கிய உடல் இயக்கத்தை இழந்தது. எங்களுக்காய் ஓடிய குருதி மண்ணோடு கலந்தது. எங்களுக்காகவே வாழ்ந்த உயிர் எங்களைவிட்டுப் பிரிந்தது எனச் சொல்லிக்கொண்டிருந்த போராளி கண்களைத் துடைத்துக்கொண்டான்.

அம்மாவுக்கு மூண்டு பிள்ளையள்தான். மாஸ்ரர். ரெண்டுபேர் வீரச்சாவு. கடக்குட்டி மகன் இப்ப களத்தில நிக்கிறான். அவன்தான் எரிகாயங்களோட 'மெடிசினில' நிக்கிறானெண்டு சொன்னனான்.

எனக்குத் தெரிஞ்சது கொஞ்சம். அதைத்தான் உங்களுக்கு சொல்லியிருக்கிறன். அம்மாவின்ர பணி மிகப் பெரியது. எங்கட இயக்கம் பெருவிருட்சமாய் வளர ஆணி வேராய் நின்ற சனங்கள் பலர். அதில் அம்மாவும் மறக்கமுடியாதவர். விடுதலை கிடைக்கேக்க அம்மாவின்ர பெயரும் எழுதப்படோணும் எனக் கூறிய அந்தப்போராளியிடம் "உங்கட ஆசை எங்கட தலைவனின் காலத்திலேயே நிறைவேறும், கவலை வேண்டாம்" என நம்பிக்கையூட்டி விடைபெற்றேன்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# என் பள்ளிக்கூடம் பற்றிய சிறுகுறிப்பு

கருணை ரவி

சருகுகள் நிறைந்த
சவக்காலையாய் நீண்டு கிடக்கிறது
காலடிகள் வற்றிய என் பள்ளிக்கூடம்

சொற்கள் பெருகிச் சுவர்களில் தெறித்த
புன்னகைகள் எல்லாவற்றையும்
தொலைத்து விட்டு
பிய்ந்து தூங்குகிறது
வெம்மை தின்ற கூரை முகடுகள்

வெண்கட்டிகள் பற்றிய
கைகளின் வேர்களைக் காணாது
கறுப்புப் பலகைகள்
துக்கத்தில் தீய்கின்றன

சொற்களைக் கலைக்க
ஒலிக்கும் மணி இடுக்குகளில்
வலைகள் பின்னிப் பின்னி
முட்டைகள் பெருக்குகின்றன சிலந்திகள்

நிழல்கள் முறிந்த
மரங்களின் கிளைகளில்
குயில்களின் துயர்கள் நீள்கின்றன

என்கால்களை
பள்ளி முற்றங்களில் வரைய விடாது தடுக்கும்
விரல்கள் ஒவ்வொன்றையும்
என் விழிக்குழிக்குள் போட்டுக் கொண்டிருக்கிறேன்
தீயை மூட்டுவதற்காய்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## விழுதாகி வேருமாகி

வெளியீடு: 2ம் லெப் மாலதி படையணி
நூலாக்கம்: கப்டன் வானதி வெளியீட்டகம், தமிழீழம்

# காடுகளைக் கட்டுப்படுத்திய காளிகள்

விழுதாகி வேருமாகி என்ற இலட்சியம் நோக்கிய உங்கள் பயணத்தின் பதிவினைப்படித்தேன்.

எப்படி முடிந்தது? உங்களால் எப்படி முடிந்தது? என்றிருந்தது.

'பேயு'லாவும் நேரத்தில், நாய்களின் ஊளை ஒலியில் உலவித்திரிய உங்களால் எப்படி முடிந்தது?

காடுகளுக்குள் விலங்குகளின் அரவ ஒலியினைக் கேட்டுக்கொண்டு சிறிது கண்ணயர உங்களால் எப்படி முடிந்தது?

நடுச்சாமங்களில் வேவுக்கெனத் தனியே காடுகளில் திரிந்து வர உங்களால் எப்படி முடிந்தது?

மாரிகால மழைக்குள் உடல் விறைத்துப்போய், இரவுகளை அணைத்துக்கொள்ள உங்களால் எப்படி முடிந்தது?

எமது நடுச்சாமங்களெல்லாம் உங்களுக்கு எப்படி பட்டப்பகலாகியது?

காட்டைக்கட்டுப்பத்தினீர்கள், கடலுக்கு இயைபாயினீர்கள். இரண்டுமே வெற்றியின் வழிகளா?

நாம் அமைதியாய் உறங்கும் பொழுதுகளை நீங்கள் எப்படி இத்தனை பெறுமதியாக்கினீர்கள்?

பெண் என்றால் பேயும் இரங்கும் என்று சொல்வார்கள். நீங்கள் எப்படி பெரும் பேய்களையெல்லாம் பொடியாக்கினீர்கள்?




வெளித்தள்ளிப்போன உங்கள் தோழியின் மூளையை உள்ளே தள்ளி தையல்போட உங்களால் எப்படி முடிந்தது? மற்றவர்களின் உடலிலிருந்து சிந்திய இரத்தக்கறைகளை சலனமின்றி காவித்திரிய உங்களால் எப்படி முடிந்தது? உயிர்போன அடுத்தவளின் வித்துடலை எடுக்கப்போய் உங்கள் உயிரினை நீத்துக் கொள்ள எப்படி முடிந்தது? எல்லாமே புரியாத புதிராய் தெரிகிறது.

ஊர்களில், வேலிச்சண்டையில் மற்றவர்களுக்கு காயம் வந்தாலோ, சண்டை வந்தாலோ குய்யோ முறையோ என்று கூச்சலிடும் இனத்தவர்கள்தானே பெண்கள். சாவு என்றால் ஒப்பாரிக்கு கூடுபவர்களும், மார்படிச்சு குழறுபவர்களும் நாங்கள்தானே.

எங்களின் அவல ஓலத்தினைக்கேட்டுத்தானே ஆம்பிளையள் வெளியே நின்று கண்கலங்குவார்கள். ஆவேசம் கொள்ளுவார்கள். இதைத்தானே எல்லாமே சொல்லித்தந்தன. திரௌபதைகூட தலைமுடியைத்தானே அவிழ்த்து விட்டாள், ஆவேசத்துடன் சபதம் செய்து பாண்டவர்களை உலுப்பிவிட்டாள்.

ஆனால் நீங்கள் கொண்ட ஆவேசத்தில், சூலம் கொண்டெழுந்த மாரிகளாய் நீங்களே சங்காரம் செய்தீர்கள். 'அவலத்தை தந்தவர்களுக்கே அதனை திருப்பிக்கொடு' என்று ஆவேசத்துணிவில் சூளுரைத்தீர்கள். அந்தக்கணங்களில் உங்களைப் பார்த்திருக்க வேண்டும். உங்கள் கண்களில் அனல் கக்கியிருக்கும், உடல் கொதித்து நடுங்கியிருக்கும். நெஞ்சு படபடத்திருக்கும். கைகளும் கால்களும் பழிவாங்கத்துடித்திருக்கும்.

உங்களின் ஆவேசத்தில் எதிரியின் வியூகம் அனைத்தும் தவிடுபொடியானது. உங்களுக்குள் இருந்த இந்த அபாரசக்தி - தேசியத் தலைவர் அவர்களால் கண்டறிந்து, வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது.

இப்போது நீங்கள் எங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் உறைந்திருக்கும் எங்கள் சக்தியை எடுத்துக்காட்டியுள்ளீர்கள்.

போராட்ட வாழ்வில் எதிர்கொண்ட வாழ்வியற் பிரச்சினைகளை ஒரு துரும்பாகத் தட்டியுள்ளீர்கள். நாம் இவற்றுக்காக வாழ்வு முழுவதும் போராடுகிறோம். உங்கள் முன்னிலையில் எங்கள் இலக்குகள் எல்லாம் வெறும் துரும்பாயிற்று.

நீங்கள் பட்ட உடல் வலிகள், வதைகள், தியாகங்களில், சகிப்புகளில் இன்று நாட்டில் அமைதி நிலவுகிறது. தமிழர் என்று நாம் திரிகையில் ஒருவரும் எம்மைச் சீண்டுவதில்லை. எங்கள் இனத்தினைப் பிரதிபலிக்கும் அடையாளங்களுடன் நாம் விரும்பிய போது, விரும்பிய நேரத்தில் பல்லினத்தவரும் வாழும் சமூகத்திலும் நடமாடலாம். எமது இளைய ஆண்பிள்ளைகள் யாரையும் கண்டு கூனிக்குறுகாமல் நிமிர்ந்து நடக்கலாம். எமது பெண் பிள்ளைகள் சோதனையென்ற பெயரில் மானபங்கப்படாமல் நிம்மதியாய் வாழலாம். யாரும் பொது மேடைகளில் துணிந்து எழுந்து நின்று எமது பிரச்சினைகளைப் பேசலாம். எமது பேச்சையும் பலர் பொறுமையாகச் செவிசாய்க்கின்றனர்.

இவையெல்லாம் எமக்கு கிடைத்த வெகுமதிகள் அல்ல. நீங்கள் கொடுத்த உயிரினும் மேலான விலைகள். உங்கள் கண்களை எங்கள் முன்னிலையில் பறித்து எறிந்தீர்கள் -பார்த்திருந்தோம் நாம்.

உங்கள் கனவுகளை குழி தோண்டிப் புதைத்தீர்கள். உங்கள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உடல்களைச் சிதைத்துக்கொண்டீர்கள். உங்கள் கண்களை விற்றதனால் எமக்கு ஒரு சித்திரம் கிடைத்துள்ளது. அதனை நாம் இரசிக்கின்றோம். நேசிக்கின்றோம்.

ஏனெனில், எமது உலகம் வேறு வகைப்பட்டிருந்தது. ஆனால் எமது வேறு உலகத்தில் நேர்ந்த சில கொடுரங்களுக்காக நீங்கள் உங்களை தீயிட்டுக் கொளுத்தினீர்கள். அந்தத் தீயில் எல்லாம் கதிகலங்கிப்போனது. நீங்கள் இரத்தம் சிந்தி ஒவ்வொரு அடியாய் மீட்டெடுத்த தேசத்தில் இந்தச் சுதந்திர பூமியில், அந்த சுதந்திரக்காற்றினை சுவாசிக்க எங்கள் மனம் பூரிக்கிறது. மனம் நிறைகிறது. நீங்கள் வேண்டியதும் அதுவே.

நீங்கள், நிலைநாட்டிய பெரும் சாதனைகளை, எதிர்கொண்ட பெரும் துயரங்களை மிகவும் சாதாரணமாய் எழுதியுள்ளீர்கள். இவை வெறும் வரலாற்றுத் தகவல்களல்ல. பெரும் யுத்தத்தின் காப்பியங்கள். இதில் கூறியதை விட கூறாது விட்ட பல விடயங்கள் உங்களுக்குள் இருக்கும்.

அதனை கூறாது போனமைக்கு பல காரணங்கள் இருக்கலாம். உடனடிச் சாத்தியங்கள் இல்லாதிருக்கலாம்.

இந்த மண்ணுக்கு வித்தாகிப்போனவர்களிடம் நிறையக் கதைகள் இருந்திருக்கும். இருக்கும். விடுதலைப்போராட்ட வாழ்வினை வாழ்ந்து கொண்டிருக்கும் உங்களிடம் இருக்கும் போராட்ட சூழலில் வாழும் ஒவ்வொருவரிடமும் இருக்கும்.

எழுதப்படும் காலத்தின் வரலாறுகள் சிலவற்றை மட்டும் கூர்மைப்படுத்தும் ஏனையவை கிளைக்கதையாகவோ, அல்லது மறைந்தோ போய்விடும். ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பெண்புலிகளாகிய உங்களது வரலாறு மறைத்துவிடாதபடி, மறைந்து போகாதபடி பெரும் பிரசன்னமாய் எழுந்து நிற்கிறது-

-விழுதாகி வேருமாகி.

**நர்மதா** (கொழும்பு)

# விழுதாகி விருட்சமாகி விழுதாகி வேருமாகி

1991ல் ஆனையிறவுக் கூட்டுப் படைத் தளம் மீதான விடுதலைப் புலிகளின் ஆகாயக் கடல் வெளித் தாக்குதல் நடைபெற்ற பின்னர் அந்தத் தாக்குதலில் பங்கு பற்றிய போராளிகளை கலை, இலக்கியப் படைப்பாளிகள் சந்தித்தனர்.

கலை, பண்பாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த அந்தச் சந்திப்பு ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் என பல வாரங்கள் நீடித்தது.

போராளிகள் தங்கள் தங்கள் கள அனுபவங்களை, தங்கள் மன உணர்வுகளை, எழுச்சிகளை, தங்கள் எதிர்பார்ப்புகளையெல்லாம் அழகாகவும் ஆர்வமாகவும் எடுத்துரைத்திருந்தனர்.

அவர்களது அனுபவங்களை மாத்திரம் கேட்டால் போதாது என்பதற்காக அவர்கள் பாவித்த ஆயுதங்கள், வெடிபொருட்கள் எல்லாமே கலை, இலக்கியப் படைப்பாளிகளுக்குக் காட்டப்பட்டதோடு மட்டுமல்லாது பயிற்சிக் களமுனைக்கும் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு ஆயுதங்களின் சூட்டுப் பிரயோகமும் காட்டப்பட்டன.

இவை எல்லாம் ஏன் நடைபெற்றன என்பதை இங்கு விபரிக்கத் தேவையில்லை. போராட்டம் தொடர்பாகவும் போராளிகளின் மனவுணர்வுகள் தொடர்பாகவும் படைப்புக்கள் மக்கள் மயப்பட வேண்டும். அதனை இந்தக்கலை, இலக்கியப் படைப்பாளிகள் செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனே இது நடந்தது.

ஆனால், எதிர்பார்த்த அந்த இலக்குகளை குறித்த கலை இலக்கியப் படைப்பாளிகள் நிறைவு செய்யவில்லை. சில படைப்புக்களுக்கு அவை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# விழுதாகி வேருமாகி

உதவி செய்தன என்பதை அதில் பங்குகொண்ட படைப்பாளி என்ற முறையில் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இப்போது காலம்தான் எவ்வளவு தூரம் மாறிவிட்டது. போராட்டத்தில் முதன்மை வகிப்பதைப் போலவே படைப்புத் திறத்திலும் போராளிகள் முன்னிலைக்கு வந்துவிட்டார்கள்.

படைப்பு மாத்திரம் அல்ல சகல துறைகளும் அவர்கள் கரங்களில் நர்த்தனம் புரிகின்றன.

இது ஒரு நம்ப முடியாத விடயம்தான். என்றாலும் நடக்கிறது. அந்த நடப்பின் வெற்றிதான் இந்த 'விழுதாகி வேருமாகி' நூல்.

போராளிகளே தங்கள் செயற்பாடுகள் தொடர்பாகப் பாடத்தொடங்கி விட்டபடியால் முன்னணியில் வாயசைக்க பின்னணிக் குரலில் பாட வேண்டிய தேவை இல்லாமல் போய்விட்டது.

"எமது பெண் போராளிகளது அபாரமான போராற்றலையும் அவர்களது வீரத்தையும் எமது எதிரியே நன்கறிவான். அவன் அறிந்தவை உலகமும் எமது மக்களும் அறியும்படியான வரலாற்றுப் பதிவாக ஒரு நூல் எழுதப்பட வேண்டும். இதற்கு எமது போராட்டம் பற்றிய தெளிவான பார்வையும் போருக்குள் நின்ற வாழ்வனுபவமும் போர்க்கலை பற்றிய அறிவும் எமது போராளிகளது நுண்மையான மன உணர்வுகளை புரிந்து கொள்கின்ற தன்மையும் அவசியம். இல்லாது போனால் எமது போராட்டத்தின் வரலாற்றை அதன் ஆழத்திலும் அகலத்திலும் அதன் யதார்த்தக் கோலத்திலும் தரிசித்துக் கொள்வது கடினம். போர் பற்றிய அறிவு ஞானம் இல்லாத பழைமையில் புதைந்து போன வரலாற்றாசிரியர்களால் எமது பெண் போராளிகளது வரலாற்றைத் துல்லியமாக கிரகித்தறிவது சிரமம்"

எனத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் நூலின் வாழ்த்துரையில் கூறுவது வெறும் சொற்கள் மாத்திரம் அல்ல, உண்மையும், உழைப்பும் நம்பிக்கையும் சேர்த்துவெளிப்படுத்தப்பட்டவை.

விழுதாகி வேருமாகி என்ற நூல் தனிய போராளிகள் எழுதியதால் மட்டும் தனியிடம் பெறவில்லை.

"எமது பெண்கள் கட்டளை அதிகாரிகளாக சமர்க்களங்களை வழிநடத்திச் செல்பவர்களாகவும் முன்னணிப்போர் அரங்கில் கனரக ஆயுதங்களுடன் போரிடும் அனுபவமும் கடும் பயிற்சியும் பெற்றவர்களாக இருப்பதனையும் இதனை வாசிப்பவர்கள் உணர்ந்து கொள்ள முடியும்" என அரசியற்றுறைப் பொறுப்பாளர் அவர்கள் கூறியது போல மகளிர் படையணியின் இந்த நூல்.

"ஆனால் இது இரத்தத்துளிகளால் எழுதப்பட்ட உண்மை மனிதர்களின் கதை" என தளபதி கேணல் விதுஷா அவர்கள் சொல்வது பிரமிக்கத்தக்கது.

சமகால உலகில் பெண்கள் பல்வேறு தளங்களில் முதன்மை பெற்றுள்ளது ஒன்றும் புதுமையானதல்ல. ஆனால் இவ்வாறான முதன்மைப் பெண்கள் யாவரும் வளர்ச்சி பெற்ற மேற்கத்தைய நாடுகளிலேயே அதிகமாக உள்ளனர்.

ஆனால் பொருண்மிய ரீதியாக வளர்ச்சி பெறாத எங்கள் நாடுகள் போன்ற நாடுகளில் பெண்களின் நிலை என்ன?

சாதனை செய்யக் கூடிய ஆற்றல் இருந்தும் அதற்குரிய சூழல் இல்லாத நிலையில் உள்ளனர் எங்கள் பெண்கள்.

ஆனால் வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கே சவால் விடக்கூடிய ஒரு உயரிய ஆற்றலை எங்கள் மண்ணில் பெண்கள் செய்துள்ளனர், செய்து வருகின்றனர்.

அவர்கள் செய்துள்ள சாதனை ஒரேயடியாக எங்கள் பெண்கள் தொடர்பான பல பாரம்பரியக் கட்டுக்களை உடைத்துள்ளது.

'விழுதாகி வேருமாகி' என்ற நூலில் போராளிகள் போராட்ட வாழ்வை அற்புதமாக வெளிப்படுத்துகின்றனர்.

அவர்களின் வெற்றிகளை, பின்னடைவுகளை, கஷ்டங்களை அதனை எதிர்கொள்ளும் அவர்களின் மன உறுதியை, எல்லாவற்றிலும் மேலாக தாங்கள் வகித்துக்கொண்ட கொள்கைமீதான பற்றுறுதியை எல்லாம் வெளிப்படுத்துகின்றார்கள்.

அந்த வெளிப்படுத்துகை வீரமாக, கேமாக கூத்தும் கும்மாளமும் கொண்ட சந்தோஷங்களாக இயற்கையை ரசிப்பதாக, கஷ்டங்களை அனுசரிப்பதாக சமாளிப்பதாக நகருகின்றது.

"தாக்குதல் அணிகள் தமது நடை பவனியைத் தொடங்கின. தமக்குத்தேவைப்பட்ட அனைத்தையும் சுமந்தவாறு அணிகள் நகர்ந்தன. நீண்ட நடைபயணம். குளங்களைக் கண்டபோது குளிப்பதும் இரவில் இரண்டொருமணி நேரம் உறங்குவதுமாக நடை தொடர்ந்தது. போகும் வழியில் இருந்த மாமரங்கள் எல்லாம் பழங்களை நீட்டி இவர்களை விருந்தோம்பி வழிப்பயணத்துக்கென மேலதிகமாகவும் கொடுத்துவிட்டது ஒரு சுவையான அனுபவம்." என்று வரும் போது எவ்வளவு ஈர்ப்பாக உள்ளது.

"ஒவ்வொரு நாளும் இராணுவத்தின் அழைப்பின் பேரில் ஆட்கள் போனார்கள். பாக்கி இருந்தவர்கள் வேலை செய்தார்கள். வெயில் கொளுத்தும் பகலிலும் புழுக்கம் நிறைந்த வரண்ட இரவுகளிலும் அறுவடை வயலிலும் களத்திலும் சரக்கு வண்டிகளிலும் ஓயாமல் உறங்காமல் உழைத்தார்கள்: பாடுபட்டார்கள். ஆண்களின் எண்ணிக்கை வரவரக்குறைந்துகொண்டேபோன படியால் வேலை மேலும் மேலும் அதிகமாச் சுமந்துகொண்டு போயிற்று"

"தூரத்தில் சண்டை நடந்துகொண்டு இருந்தது. இரத்தம் பெருகிக்கொண்டு இருந்தது. ஆனால் நாங்களோ (பெண்கள்) உழைப்பு என்ற போரில் ஈடுபட்டிருந்தோம். நாள்தோறும் ஒருவர் பின் ஒருவராக ஆண்கள் போர் முனைக்குச் சென்றார்கள். நாங்களோ காலை முதல் மாலைவரை கூட்டுப் பண்ணையில் கழித்தோம்"

ரஷ்யப் புரட்சியோடு தொடர்புபட்ட 'அன்னை வயல்' நாவலில் மேற்படிப் பகுதிகள் வருகின்றன. ஆனால் எங்கள் மண்ணில் பெண்களின் நிலை என்ன? அவர்கள் என்ன செய்தார்கள் என்பது 'விழுதாகி வேருமாகி'யில் வெளிப்படுத்தப்படுகின்றது.

1990களின் நடுப்பகுதியில் தேசியத் தலைவர் அவர்களை கலை இலக்கியப் படைப்பாளிகள் சந்தித்தனர். அப்போது தலைவர் தான் வாசித்த கதையினைக் கூறினார்.

அதுவும் ரஷ்யப் புரட்சியோடு தொடர்புபட்டது. "ஆண்கள் எல்லோரும் யுத்தத்திற்குப் போக இராணுவத் தொழிற்சாலைகளில் பெண்களே வேலை செய்தார்கள். கடுமையான பஞ்சம் நிலவிய காலம். பெண்களுக்கு உருளைக்கிழங்கு கூழ்மட்டுமே. அதுவும் மிகச்சிறிய அளவில் வழங்கப்பட்டது. அதனையும் வெளியில் கொண்டுவர முடியாது. அப்படியான சூழ்நிலையில் ஒரு தாய் தன் பிள்ளையை நினைத்து ஒருவாய் கூழை விழுங்காமல் பிள்ளைக்காக வெளியே கொண்டு வருகிறாள்"

ஆனால் எங்கள் தலைவரால் வளர்த்தெடுக்கப்பட்ட எங்கள் பெண்கள் தனித்துவமானவர்கள்.

"இரு கால்கள் காயம் அடந்த நிலையிலும் எதிரியை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்த மேஜர் வதனி தொடர்ந்த எறிகணை வீச்சால் முகத்தில் காயப்பட்ட நிலையில் இரண்டு கண்களும் தெரியாத நிலையிலும் இராணுவத்தை நோக்கிச் சுட்டபடியே இருந்தார்.

இதுபோன்ற சாதனைகள் இந்த நூலில் உணர்வுபூர்வமாக



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



விபரிக்கப்பட்டுள்ளது. தங்களைப் பாராமல் எறிகணை வீசும்படி கோரிக்கை விடுத்த லெப் கேணல் செல்வியின் நெஞ்சுறுதியும் பிரமிக்க வைக்கிறது.

"கண்ணிகளை விதைப்பதற்காக கிடங்குகளைத் தோண்டித் தோண்டியே கொப்புளங்கள் உண்டாகிக் காய்ந்து போன கைகளில் மீண்டும் அலவாங்கைச் சுமந்தபடி களமெங்கும் நடமாடிய பெண்போராளி தொடர்பான விபரமோ"

"முன்னும் பின்னும் பக்கவாடுகளிலும் தேடுதல் அணி நகர தேர் போவதுபோல குடிநீர் எங்களின் இருப்பிடங்களுக்குப் போகும்.

குளிப்பதும் அப்படியே. அங்குலம் அங்குலமாக ஆராய்ந்தவாறே குளிக்கிற அணிகள் நகரும் போகும் பாதையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியவாறே போய் பாதிப்பேர் ஆற்றுக்கு அப்புறமும் இப்புறமும் காவலில் ஈடுபட மீதிப்பேர் குளிப்பார்கள்"

என்கிற குடிநீர் தொடர்பான கஷ்டமோ

"ஒரு ரவை வீணாக்குவதைக்கூட அனுமதிக்கமுடியாத காலம். மூன்று நேர உணவாகவும் கஞ்சியும், சோறும் கத்தரிக்காய் கறியும் நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த நாட்கள்"

"எமக்குத் தரப்படுகின்ற சொற்ப அளவான சீனி முடிந்த பின்னர் பாலைப்பழப்பாணி, வீரைப்பழபாணியுடன் சாயத்தண்ணீர் குடித்தோமேயன்றி அதற்குமேல் ஒன்றையும் நாம் எதிர்பார்க்கவில்லை"

என அவர்கள் கூறுவதே அவர்களை, அவர்களது செயற்பாட்டினை முன்னனிக்குக் கொண்டுவருகின்ற விடயங்கள் மாத்திரம் அல்ல அவர்கள் எத்தகைய நெருக்கடிக்குள் பணி புரிந்தார்கள். என்பதும் வெளிப்படுத்தப்படுகின்றது.

கஷ்டத்தை மாத்திரம் அவர்கள் வெளிப்படுத்தவில்லை. அவர்களது மகிழ்ச்சி பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது.

"கிளிநொச்சியில் நின்ற தர்ஷாவினதும் முல்லையினதும் கொம்பனிகளுக்கு அன்றைய காலை அரையிருளிலேயே ஆரம்பமாகிவிட்டது.

"மூன்று மணிக்கே எழும்பித் தலை முழுகியவர்களும் மேய்ப்பவர்கள் அற்று கிளிநொச்சியெங்கும் பரவலாக உலவும் மாடுகளின் பின்னும் முன்னும் முதல் நாளே ஓடித்திரிந்து பொறுக்கி வைத்திருந்த சாணத்தால் தரையை மெழுகியவர்களும் அதன்மேல் வெள்ளை மணலாலும் நாய்ஊண்ணிப் பூக்களாலும் கோலத்தை வரைபவர்களும் கழுவி வைத்த கற்களை எடுத்து அடுப்பாக அடுக்கியவர்களும்"

போர் விடயங்கள் தாக்குதல் நுட்பங்கள் மாத்திரம் இந்த நூலில் விபரிக்கப்படவில்லை. இந்த நூலை எழுதியவர்களின் எழுத்துத்திறமை, படைப்பாற்றல் கூட ஆங்காங்கே மின்னுகின்றன.

"கண்ணுக்கெட்டிய தொலைவுவரை விடத்தல் மரங்கள் தெரிந்தன. இப்போது மாசிமாதம். இலைகளோடு மரங்கள் நிற்பது பார்வைக்கு இதமாக இருந்தாலும். அடுத்த மாதம் கொளுத்தி எரித்து இலைகளை உதிர்த்து வறுத்துப் பொசுக்கப்போகும் வெயிலை நினைத்துப் பயப்படாமல் இருக்க முடியவில்லை"

"மரங்கள் நின்றனவேயன்றி நிழல் இல்லை. இருந்த சிறு இலைகளையும் கொட்டிவிட்டுத் தடிகளாக நின்ற மரங்களின் கீழ் வலைப்பின்னல் போன்று கோடுகளாக, சதுரங்களாக நிழல் விழும் அந்த நிழலும் சுடும்"

**இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்**

## நட்சத்திரங்களின் மழை

மழை துமித்துக் கொண்டிருந்தது
ஒரு சிறுவன்
வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்
மழைத் துமிகள்
அவன் மேலே விழுகின்றது

சூரியன் மறையத் தொடங்கினான்
சிறுவனைத் தவிர
எல்லோரும் அவரவர் வீடுகளில் இருந்தார்கள்
அவனோ ஒரு பொழுதும்
வானத்தைப் பார்த்திராதது போல
பார்த்துக்கொண்டிருந்தான்.

திடீரென்று
அவன் தலையில் ஏதோ விழுந்தது
அவன் வலியால் கத்தினான்
நட்சத்திரங்களின் மழை
அவன்மேல்
விழுந்துகொண்டிருந்ததனால்



## காற்று மழை சூரியன்

காற்று பலமாக வீசுகிறது
சிறிய இலை ஒன்று
மூடு பனி போன்ற
சாம்பல் வானத்தில் பறக்கிறது

காற்றுக்குப் பிறகு
மழை பெய்தது
பின்னர் மழையும் ஓய்ந்தது
சூரியன் தோன்றினான்.

காற்றையும்
மழையையும்
மறைய வைப்பதற்கு
சூரியன் பலமாகப் பிரகாசித்தான்
மழையும்
சூரியனும்
வானவில்லை வளைத்தன.

**மீரா பாலகணேசன்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பிரகாசமான எதிர்காலத்துக்காகத் தம்மைத் தயார்ப்படுத்த வேண்டிய

பாரதி











# பாலஸ்தீனப் பெண்கள்

ஒரு நாட்டில் இயல்புநிலை நிலவும் பட்சத்திலேயே அங்கு அமைதியும், சமாதானமும் நிலவும் என்பது கண்கூடு. முரண்பாடுகள் மத்தியில் ஆட்சிசெலுத்தப்படும் நாடுகளில் அபிவிருத்திக்கும், அமைதிக்கும் இடமில்லை என்றே கொள்ளலாம். ஏனெனில், தனிநபர் வருமானம், அவரவர் செலவுகளுக்கே போதுமானதாக இல்லாததுடன், நாடானது வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டு அங்கு அபிவிருத்தி என்ற சொல் வெற்றிடமாகவே இருக்கும் என்பது எமது அனுபவத்திற்குட்பட்ட உண்மை.

இந்த வகையிலே பாலஸ்தீன மக்களின் நிலையை சற்றுக் கூர்ந்து நோக்குவோமெனில், இஸ்ரேல் - பாலஸ்தீன முரண்பாடு தற்போது அங்கு சூடுபிடித்துள்ளது. 1948இல் இஸ்ரேல் என்ற நாடு உருவாக்கப்பட்டது முதல், இந்த முரண்பாடு இரு நாடுகளுக்குமிடையே தீர்க்கப்படமுடியாத ஒரு பிரச்சினையாக இருந்து வருகிறது. காலத்துக்குக்காலம் உருவாகும் சர்வாதிகாரிகள் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டும் வகையில் உலகின் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஏற்படும் பிரச்சினைகளில் தான்தோன்றித்தனமாக நுழைந்து அவற்றுள் தலையிட்டு தம்மைப் பிரபலப்படுத்தி வரலாற்றுப் புத்தகத்தில் தம்மை நிலைநிறுத்திக் கொண்டது மட்டுமே அவர்கள் செய்துள்ள உருப்படியான வேலையாகும். இவ்வாறு தோன்றும் 'வல்லவர்கள்' சுயநலப்போக்கிற் செயற்பட்டு பாலஸ்தீனம் போன்ற நாடுகளின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்து வந்துள்ளனர். தடையாக இருந்து வருகின்றனர்.

பாலஸ்தீனம் என்பது ஒரு முஸ்லீம் நாடாகும். இந்நாட்டில் வாழும் பெண்களின் உரிமைகள் தொடர்பாக நாம் ஆராய்ந்து பார்ப்போமாகில், மிகவும் பிற்போக்குத்தனமான, மூடப்பழக்க வழக்கங்களுக்குள் தம்மை உட்படுத்திக்கொண்டு வாழும் இந்த முஸ்லீம் பெண்களின் நிலை மிகவும் பரிதாபகரமானதாகும். நவீன தொழிநுட்ப வளர்ச்சியின் காரணமாக உச்சநிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் இன்றைய



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



உலகத்தில், இப்பெண்களின் நிலை மிகவும் வேதனைக்குட்பட்ட ஒரு விடயமாகவே பார்க்கப்படுகிறது. பர்தா உடை அணிதல் தொடக்கம் அவர்களின் நாளாந்த நடைமுறைகள் மிகவும் மாறுபட்டதாகவே அமைந்துள்ளது.

பாடசாலைக் கல்வியைக்கூட உரிய முறையில் நிறைவு செய்யமுடியாமல், சமூகத்தின் மூடப்பழக்கவழக்கங்களுக்குத் தம்மை உட்படுத்தி வாழும் இந்த மக்கள் விரும்பியோ விரும்பாமலோ இவற்றைப் பின்பற்றவேண்டிய கட்டாயம் ஒன்று உள்ளது. இவற்றை எல்லாம் மீறி உயர்கல்வி படிக்க ஆர்வங்கொள்ளும் பாலஸ்தீன முஸ்லீம் பெண்கள் சமூகத்தின் பழிச்சொல்லுக்கு ஆளாகி சில துயரமான முடிவுகளை எடுக்கவேண்டிய, எடுக்கின்ற துர்ப்பாக்கிய சூழ்நிலையும் இங்கு காணப்படுகின்றது.

பாலஸ்தீன சமூகத்தில் பிழைசெய்யும் பெண்ணொருவர் தண்டிக்கப்படும் விதம் வித்தியாசமானது, கொடூரமானது. தெருவின் நடுவில் பலரின் முன்னிலையில் நிறுத்தி கல்லால் எறிந்து கொலைசெய்தல் அல்லது துன்புறுத்தல் மற்றும் அந்தப் பெண்ணின் முடியைக் கத்தரித்தல் போன்ற சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாகுவதைப் பல ஊடகங்களின் வாயிலாக அறியக்கூடியதாக உள்ளது. எத்தனையோ பாலஸ்தீன முஸ்லீம் பெண்கள் தாம்படும் துன்பங்களை, சுதந்திரமற்ற தமது வாழ்க்கையை எண்ணி விரக்தியுடன் தம் மனக்குமுறல்களை கவிதைகள் வாயிலாக எடுத்துச் சொல்லியுள்ளார்கள்.

பாலஸ்தீனத்தில் நிரந்தரமாக வாழும் இந்தப் பெண்களின் கதி இவ்வாறிருக்க, மறுபுறத்தில் நாடிழந்து தம் வீடிழந்து 'லெபனான்' போன்ற அயல் முஸ்லீம் நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் பாலஸ்தீனப் பெண்களின் நிலை மிகவும் மோசமானதாகும். இவர்களுக்கான பிரஜாவுரிமைகள் மறுக்கப்படுகின்றன. ஆனால் இவர்களையொத்த பாலஸ்தீன ஆண்களுக்கான பிரஜாவுரிமைகள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு சலுகைகள் அளிக்கப்படுகின்றன. பிரஜாவுரிமைகளை இழந்த இந்தப் பெண்கள் சமூகத்தில் ஓரங்கட்டப்படுகின்றனர். ஒரே சூழலில் வாழும் இருபாலாருக்குமிடையில் காட்டப்படும் வேறுபாட்டுக்கு இந்தப் பிரஜாவுரிமையை விட நல்லதொரு உதாரணம் வேறிருக்க முடியாது.

கல்வி கற்க முடியாத, கல்வியறிவற்ற பாலஸ்தீன முஸ்லீம் பெண்கள் நாட்டின் அபிருத்தி மற்றும் பொருளாதார, சமூக கட்டமைப்புக்களில் எடுக்கப்படும் தீர்மானங்களில் பங்குபற்ற முடியாதவர்களாக உள்ளனர். இதனால் இந்தப் பெண்களின் தீர்மானம் எடுக்கும் ஆற்றல், தன்னம்பிக்கை, நிர்வகிக்கும் திறன் போன்ற சமூகத்தின் வளர்ச்சிக்குத் தேவையான அரிய பல ஆற்றல்கள் மழுங்கடிக்கப்படுகின்றன. இதனால் இது ஒட்டுமொத்த நாட்டின் அபிவிருத்தியையே கேள்விக்குள்ளாக்கி வளர்முக நாடுகளின் சுயநலப் போக்குக்கு வித்திடுவதாக அமைகின்றது.

1998 நவம்பரில் வரையப்பட்ட 'சுதந்திர பாலஸ்தீனத்தை உருவாக்கல்' என்ற உடன்பாடானது மாகாண மட்டங்களில் ஆண்- பெண் ஆகிய இருபாலாருக்கும் இடையே சமநிலையைத் தோற்றுவிக்கும் வகையில் வரையப்பட்டபோதிலும் அடிப்படைச் சட்டமான 'சரியாச்சட்டம்' இந்த மக்களின் வளர்ச்சிக்குக் குறுக்காக உள்ளது. இந்தச் சட்டமானது சமயம், அரசியல், சாதி, இனம் போன்றவற்றில் இரு பாலாருக்குமிடையே பாரபட்சத்தை ஊட்டுகின்றது.

இப்பாலஸ்தீனப் பெண்கள் 15 வயதிலேயே திருமணம், செய்யவேண்டும். இந்த நடைமுறை வெஸ்ற்பாங்கிலேயே (Westbank) அதிகமுள்ளது. காசா (Gaza) நகரில் பெண் பருவமெய்தியவுடன் பெற்றோர்கள் மணமுடித்து வைத்துவிடுவார்கள். தற்போது 25 வீதமான திருமணங்கள் பெண்களின் 16 வயதில் அல்லது அதற்குக் கீழான வயதிலேயே இடம்பெற்றுவிடும். 'ஒரு பாலஸ்தீன ஆண் பல பெண்களைத் திருமணம் செய்யலாம். ஆனால் ஒரு பெண் ஒரு ஆணைத்தான் திருமணம் செய்ய முடியும்' என்ற சட்டமும் உள்ளது. அண்மைக் காலங்களில் காசா போன்ற இடங்களில் இவ்வகையான திருமணத்தை தடைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டு பாராளுமன்றிலும் விவாதத்துக்கு எடுக்கப்பட்டுள்ளது.

பாலஸ்தீனப் பெண்ணொருவர் தனது கணவனை விவாகரத்துக் கோருமிடத்து அவளுக்கான நிதிசார் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அதாவது அவளது உழைப்பில் பிள்ளைகள் தங்கியிருக்கும் சூழலில் விவாகரத்துப் பெறப்பட்ட கணவனிடமிருந்து எந்தவொரு பண ஆதரவையும் அவள் எதிர்பார்க்க முடியாது எனச் சட்டம் சொல்கிறது. இதன் காரணமாக இந்தப் பெண்ணினதும், பிள்ளைகளினதும் பாதுகாப்பும், இயல்பு வாழ்க்கையும் கேள்விக்குரியதாக மாறி விடுகின்றது. இது போன்ற காரணங்களுக்காக கணவனால் துன்புறுத்தப்படும் பெண் விவாகரத்துக் கோராமல் தொடர்ச்சியாகத் துன்பத்தை அனுபவித்து அவனுடன் வாழ வேண்டியுள்ளது.

கூலித்தொழிலாளிகளாக வேலை புரியும் பாலஸ்தீனப் பெண்கள் பிரசவ காலங்களில் பெரிதும் கஸ்ரப்படுகின்றார்கள். பிரசவ காலங்களில் பெண்களுக்குக் கட்டாய விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்று சர்வதேசச்சட்டம் கூறுகின்ற போதிலும் இவ்வாறான காலகட்டங்களிலும்கூட பாலஸ்தீனப் பெண்ணின் உரிமை மறுக்கப்படுகின்றது. இதற்கு சரியாச்சட்டமே வழிகோலுகின்றது. இருபாலாரும் ஒரே வேலையைச் செய்யும் சந்தர்ப்பத்தில் ஆணை விடப் பெண்ணுக்கு வழங்கும் நாட்கூலி மிகவும் குறைவானதாகும்.

இவ்வாறான துன்பங்களில் பாலஸ்தீனப் பெண்கள் வாழும் போதிலும் அண்மைய ஆய்வுகளின் வாயிலாக இவர்கள் தமது நிலையை மாற்றி சமூகத்தில் முன்னேற பல இன்னல்களின் மத்தியில் பல்கலைக்கழகங்களில் படித்து பட்டம் பெற்று உயர் பதவிகளில் அமர்ந்து நாட்டைக் கட்டியெழுப்பும் வகையில் உருவாகி வருகிறார்கள். தற்போது பாலஸ்தீனப் பல்கலைக்கழகங்களில் படிக்கும் மாணவர்களில் 42 வீதமானவர்கள் பெண்களாவர்.

இவ்வாறு வளரும் பெண்கள் சகல எதிர்ப்புக்களையும், தாண்டி தீர்மானம் எடுத்தல், நிர்வகித்தல், விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்ற சமூக முன்னேற்றங்களில் பங்குபற்றி தம் நாட்டையும் வளப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை தற்போது துளிர்விட ஆரம்பித்துள்ளது. இந்தத் துளிர் துளிர்த்து கிளைபரப்பி விருட்சமாகும் காலத்தில் தற்போது வாலாட்டும் 'வல்லவர்களின்' பொய்முகம் கிழித்தெறியப்பட்டு பாலஸ்தீனத்தில் மட்டுமல்ல இது போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் அமைதியும், சுபீட்சமும் நிலவும் என்பது திண்ணம். துளிர்விட ஆரம்பித்துள்ள இந்தப் பயிருக்கு நீர்பாய்ச்சி, உரிய பசளையிட்டு பராமரிக்கவேண்டிய பெரிய பொறுப்பு பாலஸ்தீனத்தில் வாழும் புத்திஜீவிகளுக்கு மட்டுமல்ல உலகில் வாழும் அனைத்து புத்திஜீவிகளுக்குமானது.



www.tamileelamarchive.com

# அணையாத தீபம்



## கப்டன் இன்பா

# பேறு

கப்டன் இன்பா பத்தாவது வயதில் புலமைப் பரிசில் வென்றவள் கா.பொ.த சாதாரண தரத்தில் 5டி,3சி பெற்று கா.பொ.த உயர்தரத்தில் கணிதப்பிரிவில் காலடி வைத்தவள்.

காத்திரமாய் கல்வியால் காலூன்ற காலங்கள், கணங்கள் அனுமதிக்கவில்லை.

தேச இருப்பு கேள்விக்குறியானபோது அவள் கற்கை நெறியும் கேள்விக்குறியானது. தேச இருப்பு கல்வியுயர்வு தேர்ந்து கொள்ளவேண்டிய காலத்தின் தேவை, கண்முன்னே விரிந்தபோது கப்டன் இன்பா கணக்குப்போட்டாள்.

பெற்றவள் ஆசிரியர். மகளின் கணக்கை சரிபார்த்துக்கொண்டார். மகள் கச்சிதமாய்த்தான் கணக்குப்போட்டிருந்தாள்.

கழிக்க வேண்டியவற்றை கழித்து, கூட்டவேண்டியவற்றைக் கூட்டி, பெருக்க வேண்டியவற்றைப் பெருக்கி, பிரிக்கவேண்டியவற்றைப் பிரித்து நிற்கும் செம்மைக் கணக்கு.

கருவறைக்குள்தான் கருக்கலைப்பென்றால் அமைதி காப்பதாய் உத்தரவாதம் கொடுத்தவர்களும் அவலங்கள் கொடுத்தபோது கொதித்துப்போனவள் மகள் மட்டுமல்ல, அவள் ஆசிரியத்தாயும் கூடவே,

அந்த வீரத்தாய், ஆணித்தரமாய் அமைதியாய்ச் சொன்னாள் "அன்று! உன்னைப் படித்து உன்ர காலில் நிற்கக் கூடிய நிலை வந்ததும் போ என்று சொன்னது போல இன்று சொல்லமாட்டன்"

மகளின் தீர்மானத்தினை தீர்க்கதரிசனமாய்ப் புரிந்துகொண்டு திடமாய் உரைத்த தாயின் அனுசரணை அவளுக்கு ஆனைப்பலம் கொடுத்தது.

பயிற்சி அவளுக்கு முரளிப்பழம் என்று சொல்லி விடுவதற்கு இல்லைத்தான். ஆனாலும் குற்றம் குறை காணமுடியாத கனகச்சித வேலைத்திறன்! பல்துறை ஆற்றல்களுமாய் அவளை 'ஓல் றவுண்டர்' (All rounder) என அழைக்க வைத்தது.

அலுவலக நிர்வாகம் விசாரணை விசாலிப்பு, ஆசிரியர் குழுச்செயற்பாடு போரியல் நுணுக்கக் கற்றல்கள் (அதிகாரிகள் பயிற்சி) பெரும் பணிமனை நிர்வாகம், வேண்டி நின்ற களவாழ்வு, ஆரம்பமும் முடிவுமாய் சூரியக்கதிர் -01 ம் ஓயாத அலை-01 மாய் 'ஓல் றவுண்டர்' வலம் வந்து ஓயாத அலை -01லேயே விழுதெறிந்து விதையாளான்.

'ஓல் றவுண்டர்' தோழிகளுக்கு வாசிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்திய விதமே தனி.

வாசிப்பில் வசியமான அவள். சுவாரசியமான விடயங்களில் ஒரு சில பகுதிகளைத் தொட்டு யாவரினதும் கவனத்தை ஈர்த்துக்கொண்டதும் இடையில் நிறுத்திக்கொண்டுவிடுவாள். முழு விபரம் அறிந்து முடிச்சு அவிழ்க்க முடிவுதேடும் ஆவலில் வாசிப்புப் பழக்கத்திற்கு காலப்போக்கில் அவளைப்போல வசியமானவர்கள் அவள் தோழியராய் இன்றும் இருக்கிறார்கள் இலட்சியப் பயணத்தில் பயணித்தபடி.

வாசிப்பின் பேறாய் தேடல் விரிந்து வளம்பெற்ற அவள் தோழிகள் 'அவள்' தங்களுக்குப் 'பேறு' என்கிறார்கள்.

அவளை ஈந்த வீரத்தாய் வீரமகளைப் பெற்ற தானே 'பேறுபெற்றவள்' என்பாளோ என்னவோ!

ஆனால், அவள்! பேறு பெற்றவளே! தாயக விடிவிற்காய் தாயாலேயே அனுப்பி வைக்கப்பட்டவள் அல்லவோ அவள்.






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அகநிலா

# வலிமை



## கப்டன் தமிழ்ப்பிரியா

கப்டன் தமிழ்ப்பிரியா,

சூரியகதிர் -01 நடவடிக்கை, 'சண்டைக்கள சங்கார வாழ்க்கைக்கு அன்று அவள் புதியவள். ஆனாலும் அவள் புலமை வாய்ந்தவளாய் தன்னை வெளிப்படுத்தினாள். தற்துணிவு, தன்னம்பிக்கை, சிகரமாய் இவை இணைந்த மனவலிமை இந்நாளில் அவள் பல களங்களையும் வெற்றிகொள்ள அன்று அடித்தளமிட்ட களமிது.

அன்று அவளுக்கு ஏற்படுத்தப்பட்ட விழுப்புண்ணுக்கு அன்றுடனேயே அவள் சண்டைக்கள வாழ்வு முடிந்து போயிருக்க வேண்டும். அவள் தானாகவே ஒதுங்கிக்கொண்டிருக்க வேண்டும்.

இருகால்களுமே அகற்றப்படல் வேண்டும் என்பதாய் மருத்துவக் கணிப்பு அவளிடம் அனுமதிக்காய் காத்திருப்பு.

'என்ன வேதனையானாலும் தாங்கிக்கொள்ளுவன், காலைக்கழற்றவிடன். நான் சண்டைக்குப் போகவேணும்'

மருத்துவ உலகம்

புரிந்துகொண்டிருக்கவேணும். அவள் 'மனவலிமை' அவளைக் குணமாக்கும் என்று. எதிர்பார்ப்புப் பொய்த்துவிடவில்லை. தத்தி தத்தி நடைபயின்றாள். கால ஓட்டத்தில் கலந்துகொண்டாள்.



பூட்டிய களவாழ்வுக் கதவுகளை உடைத்துக்கொண்டு தடம்பதித்தாள்.

தடுத்தவர்கள் அவள் ஆரோக்கியம் கண்டு அடங்கிப்போயினர்.

"என்னால முடியும், எங்களில யார்தான் காயப்படேல்ல... எல்லாரும்தான் காயப்பட்டிருக்கினம்"

"பலம்தான் உலக ஒழுங்கை தீர்மானிக்கின்றது" என்ற தலைவர் அவர்களது சிந்தனைத் துளிகள் அவளைத் துளைத்திருக்க வேண்டும்.

பயிற்சி, தந்திரம், துணிவு, வெற்றிக்கு முதற்படி என்று தலைவர் சொல்லுறவர். தந்திரம், துணிவு அது என்னட்ட இருக்கு"

"வெற்றிக்கு முதற்படி பயிற்சி என்றால் அது எனக்கு வேணும். நாங்கள் வெற்றி பெறுவோம்.

நான் முன்மாதிரியாய்ச் செயற்படவேணும்".

விந்தியபடியே முனைப்பாய் பயிற்சி செய்தாள்.

மணலாறு, நெடுங்கேணி, குறிசுட்டான், பண்டாரிக்குளம், குளவிசுட்டான்குளம் என்று அவள் பாதங்கள் விந்தியபடியே பதிந்தன.

மூன்று மோட்டார்களுக்குப் பொறுப்பானவளாய் இருந்து மீண்டும் விழுப்புண் தாங்கித் தேறி புதூர், விஞ்ஞானகுளம் என்று வந்த பவனியில் மாங்குளப் பகுதிக்கான பயணிப்பில் அணியின் தலைவியானாள்.

தடங்கல்களைத் தடையாய்க் கருதாது தகர்த்தெறிந்து தடைதாண்டிய தலைவியை, தலைவியாக்கிய அம்மண்ணே தனதாக்கியும் கொண்டது.

16.08.1998 அவள் வரலாற்றில் பதிவாகிக்கொண்டாள்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

# கெட்ட போரிடும் உலகத்தை வேருடன் அழிப்போம்




தமிழர் பண்பாட்டில் திருமணம் மிக இன்றியமையாத ஒரு சடங்காகக் கருதப்படுகின்றது. ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து ஒரு குடும்ப வாழ்வை நடத்துவதற்கு சமூகம் கொடுக்கின்ற ஒப்புதலே திருமணம் எனலாம். தமிழர் வாழ்வியல் நடைமுறைகளில் திருமண முறைகள் காலத்திற்குக் காலம் புதிய சடங்குகளை இணைத்துக்கொண்டதை இலக்கியச் சான்றுகளால் அறிய முடிகின்றது. அவ்வாறு இணைத்துக்கொண்ட சடங்குகள் தவிர வேறு சில நடைமுறைகளும் பேணப்பட்டுள்ளன. ஆணும், பெண்ணும் இணைவதற்கு வயது, தோற்றம், குணநலம், முதிர்ச்சிநிலை என்பன அடிப்படையாக அமைய வேண்டும். ஆனால் நம் தமிழர் இவ்வடிப்படை பொருத்த நிலை மட்டுமன்றி சோதிடம், சீதனம் என்ற இரு அம்சங்களையும் முக்கியமாகக் கருதுகின்றனர். குறிப்பாக 19ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் மேலைத்தேய பண்பாடு தமிழர் பண்பாட்டுடன் வந்து கலந்தபோது திருமண முறைகளில் சீதனம் சிறப்பிடம் பெற்றது.

ஆங்கில மொழிக் கல்வியும் உத்தியோக வாய்ப்பும் தமிழர் திருமண முறைகளில் முரண்பாட்டைத் தோற்றுவித்தன. ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒருவகையான ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தின. தொழில் நிலையில் நில வேளாண்மை, கடல் வேளாண்மை, விலங்கு வேளாண்மை எனத் தாம் வாழும் நிலத்தியல்போடு ஒன்றியிருந்த தமிழர் வாழ்வியல் மாற்றமடைந்தது. ஆணும் பெண்ணும் இணைந்து செய்த தொழில் முயற்சிகள் கைவிடப்பட்டன. ஆண் ஆங்கிலக் கல்வியைப் பெற்று அரச பணிகளிலே ஈடுபட்டான். மரபான தமிழர் ஆடையையும் கைவிட்டு மேலைத்தேச ஆடையை அணியத் தலைப்பட்டான். தன்னை அதிகாரியாக வீட்டிலும் பாவனை செய்ய முற்பட்டான். பெண்ணோ புதிய மொழிக் கல்வியை அறியாத அரச பணிகளிலே இணைய முடியாதவளாக வீட்டிலே முடங்கி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஆணுக்கு ஏவல் செய்யும் முழுநேர அடிமையாகினாள்.

இத்தகைய நிலை சீதனம் என்னும் நடைமுறையை விரிவுபடுத்த வாய்ப்பளித்தது. சீதனம் என்னும் சொல்லின் பொருளையே திரிபுபடுத்தியது. சீதனம் என்றசொல் அழகிய செல்வம் எனப் பொருள்தரும். சீ-என்பது இலக்குமி, தனம் - என்பது செல்வம் என்றும் பொருள் கொள்வர். எது எப்படியிருப்பினும் சீதனம் என்பது திருமணத்தின்போது பெண்ணின் பெற்றோர் ஆணுக்குக் கொடுக்கும் செல்வம் என்பதே பெருவழக்காக உள்ளது. ஆண் தன்னுடைய ஆங்கிலக் கல்வியாலும் அரசபணியினாலும் மிகுந்த செல்வாக்குடையவனாக சமூகமதிப்பைப் பெற்றபோது பெண் கிணற்றுத் தவளையாக வீட்டிலே இருந்தாள். எனவே திருமணத்தில் இருவரிடையேயும் சமநிலை பேணுவதற்கு பெண் சீதனம் கொடுக்க வேண்டும் என்ற நடைமுறை தோன்றியது. திருமணப்பதிவும் சீதன உறுதிப்பதிவும் தமிழர் திருமண நடைமுறைகளிலே புதிதாக இயைந்தன.

திருமணத்தின்போது பெண்ணிற்குச் சீதனம் வழங்குவது அவளுக்குச் சொத்துரிமையும் பொருளாதார பலத்தையும் தரும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. ஆனால் 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே பெண்ணுக்கும் ஆங்கிலக்கல்விபெறும் வாய்ப்பு ஏற்பட்டபோது அவளும் அரசபணியில் இணைந்தாள். எனினும் அவளே சீதனம் கொடுக்க வேண்டும் என்ற நடைமுறையில் மாற்றமேற்படவில்லை. உலகத்துள் வாழும் தமிழர்களுக்கெல்லாம் முன்னோடிகளாக யாழ்ப்பாணத்துத் தமிழர் இன்று செயற்பட்டு வருகின்றனர். சீதன விடயத்தில் அதன் உண்மை நிலையைப் பலர் பலவாறு எடுத்து விளக்கிய போதும் யாழ்ப்பாணத்துத் தமிழ்ச்சமூகம் செவிசாய்ப்பதாக இல்லை. சீதனம் என்பது யாழ்ப்பாண மக்களின் பாரம்பரிய சொத்துடைமைச் சட்டமாகிய தேசவழமைச் சட்டத்தில் இந்தச் சீதனமுறைமை ஒரு சமூக ஒழுங்குமுறையாக இருப்பதும் இக்கருத்தை, அணிசெய்கின்றது. தாய்வழிச் சொத்து, தந்தைவழிச்சொத்து என்ற சொத்துப் பாகுபாடுகளுக்கு அப்பால் சீதனம் தனித்தியங்குகிறது.

சீதனம் கொடுக்கும் பழக்கம் வழக்கமாகி மரபாகியபோது அதனால் பெண்ணின் பெற்றோர்கள் பல துன்பங்களை எதிர்கொள்ள நேரிட்டது. சீதனம் பெண்ணின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் சக்தியாக உள்ளது. பெண்ணுக்குரிய சொத்தாக பொருள் கணிக்கப்படுகிறது. அவள் கல்வியும் தொழில் தகைமைகளும் சமூகத்தால் திருமணத்தின்போது ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஆணும் பெண்ணும் கல்வியிலும் தொழில் தகைமையிலும் ஒத்திருந்தாலும் இருவரும் திருமணம் செய்வதானால் பெண் ஆணுக்குச் சீதனம் கொடுக்க வேண்டும். இதனை எமது யாழ்ப்பாணச் சமூகம் அங்கீகரித்துள்ளது. சீதனம் இல்லாவிட்டால் கணவன் இல்லாதபோது பெண் அவலப்படவேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் சீதனம் கொடுக்க முடியாமல் பல பெண்கள் திருமணம் செய்யாமல் வாழ்வதை எவரும் எண்ணிப் பார்ப்பதில்லை.

'சீதனக் கொடுமை' என்ற வன்முறை பல பெண்களைக் கோரமாகத் தாக்கியுள்ளது. இக்கொடுமையை நீக்க சர்வதேச மகளிர் மாநாட்டில் சீதனக் கொடுமை ஒளிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனினும் அது ஒழியவில்லை. மாறாக வெட்ட வெட்டத் தழைக்கும் மரம் போல் வளர்ந்து வருகின்றது. எனவே இக் கொடுமையை அகற்ற என்ன வழி? சான்றோரும் கல்விமான்களும் இக்கொடுமையை ஒழிக்க இதுவரையில் வழிசெய்யவில்லை. இனிமேலும் அது அவர்களால் முடியுமா என்பது ஐயமே. சீதனக் கொடுமை ஒழிய வேண்டும் என்று கவிதைபாடும் சான்றோரும் தமது மகன்மாருக்குச் சீதனம் வழங்கியே மணம் முடித்து வைக்கின்றனர். நிறுவனமயமான கல்விமான்களும் இவ்வழியே செல்கின்றனர். உரையும், கட்டுரையும் சீதனத்தை ஒழிக்கும் எனப் பலர் எழுதுகின்றனர். ஊருடன் ஒத்து வாழவேண்டும் என்று பலர் சீதன நடைமுறையைப் பேணுகின்றனர். சீதனம் சமூகமதிப்பைப் பெறப் பயன்படுத்தும் ஒரு கொலைவாளாக நிற்கிறது. பெண்ணினுடைய ஆற்றலையும் சிறப்பையும் வனப்பையும் அழிக்க அது பயன்படுத்தப்படுகின்றது. எனவே இனிமேலும் பொறுப்பது தகாது.

பாரதி கனவு கண்ட புதுமைப்பெண்களை விட மேன்மைக் குணங்களோடு விடுதலையைப் பெற்றுத்தரவல்ல போராற்றல்களோடு புதிய பெண்கள் எம்மண்ணிலே பிறந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஆற்றலும் திறமையும் இந்த அமைதிநிலவும் வேளையில் எமது சமூகத்திலே பேயாட்டம் ஆடும் சீதனநடைமுறையை அகற்றப்பயன்படவேண்டும். இதற்கென ஒரு செயல்திட்டம் தேவை. யாழ்ப்பாணத்துச் சமூகத்தை அதன் புரையோடிப் போன சீதனமரபை வெட்டி எறிந்து வேரோடு சாய்க்க ஒரு புதிய படையணி தேவை. நிறுவன நிலையிலே செயற்படப் பல பணியாளர் தேவை. இளம் பெண்களிடையே ஒரு எழுச்சியை ஏற்படுத்தவல்ல கலைத்திறன் வல்லோரை ஒன்றுசேர்க்க வேண்டும். சீதனப் பேயின் பிடியிலே சிக்கியுள்ள தமிழ்மக்களைப் பக்குவமாக விடுவிக்க வேண்டும். பெண்மக்களைப் பெற்றோரை அணுகி சீதனம் கொடுக்க வேண்டுமே என்ற நினைப்பை மாற்ற ஆவன செய்யவேண்டும். சீதனம் வாங்கவிரும்பும் ஆண்மக்களின் பெற்றோரை உசாவி அவர்களது உள்ளத்தைத் தெளிவிக்கவும் வேண்டும். இதற்கெனச் சில செயல் முறைப்பட்டறைகள் ஒழுங்கு செய்வது சாலச் சிறந்தது. சீதன வன்முறையை முற்றாகக் களையவேண்டுமானால் ஒரு புதிய பண்பாட்டுச் சீரமைப்புக்களம் உருவாக வேண்டும். சீதனம் கொடுத்தே தமக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும். பெண்களே எதிர்பார்க்கும் நிலையும் தற்காலத்தில் உண்டு. அத்தகைய பெண்கள் அறியாமையின் வயப்பட்டவர்கள். 19ஆம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெண்களைப்போல ஆண்களை ஆளப்பிறந்தவர் என ஏற்றுக்கொள்ளாமல் பொருளாதார பலத்தோடு சென்று ஆணை அடிபணியச் செய்யவேண்டும் என்ற முனைப்புடையவர்கள். தமது கல்வித்தகைமையையும் கவசமாகக் கொண்டு வாழ்வதற்குத் தயங்குபவர்கள். இத்தகைய பெண்களின் பெற்றோர்தான் அவலப்படுகின்றனர். தமது பெண்ணின் கல்விக்காக பணத்தைச் செலவளித்து மீண்டும் அவளுடைய சீதனத்திற்கும் பொருள்தேட வேண்டியவர்களாக இருக்கின்றனர். அதனால் தம்முடைய ஆண் மக்களுக்குச் சீதனம் நிறைய வாங்க விரும்புகின்றனர். இந்நிலையால் வயது கடந்த நிலையில் பல பெண்கள் திருமணம் செய்யமுடியாமல் காத்திருக்க நேரிடுகின்றது.

ஆண்களின் பக்கமும் சீதனம் வாங்குவது ஒரு சமூகமதிப்பாகிவிட்டது. பொருளாதாரப் பலம் குறைந்த ஆண்கள் தமது சமூக மதிப்பை உயர்த்திக்கொள்ள சீதனத்தையே நம்பியிருக்கும் நிலையும் உருவாகியுள்ளது. உயர் கல்விக்கான செலவீனத்தைச் சீதனம் கொண்டு சமாளிக்கும் வகையில் திருமணப்பதிவு நடைபெறுகின்றது. ஒப்பந்த நிலையில் சீதனம் ஆணின் உயர் கல்வி. உடன் பிறப்புக்களின் திருமணம், வாகனம், வீடு என்பவற்றுக்கான முதலீடு வழங்கும் வங்கி போலக் கருதப்படுகின்றது. எனவே இந்த தனியார் வங்கியின் செயற்பாட்டிற்குச் சில தரகர்களும் துணையாகத் தொழிற்பட திருமணம் வணிக ஒப்பந்தமாக மாறி நிற்கின்றது. சீதனம் ஒன்றையே இலக்காகக் கொண்டு திருமணம் நடத்தி வைக்கும் தரகர்களிடையே உள்ள போட்டியும் சீதனத்தை உயர்த்திச் செல்லப் பல பெண்களின் திருமணம் பேச்சுக்கால் நிலையிலேயே தடைப்பட்டு விடுகிறது. ஆண்களின் பொருளாசையும் முயற்சியின்மையும் தரகர்களுக்கு வாய்ப்பாக உள்ளது. அவர்கள் தமது பங்குப் பணத்திலேயே குறியாக இருக்கின்றனர். இரு குடும்பங்களினதும் பலவீனங்களை அறிந்து அவர்கள் செயற்படுவர். சீதனம் சில வேளை தரகர்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**தமிழ் மக்களின் இயல்பான வாழ்வியலை மீண்டும் பெற்றுத்தரவல்ல, பெற்றுத்தர வேண்டுமென்ற முனைப்புடன் செயல் திட்டங்களை வகுத்து வழிப்படுத்தும் ஒரு சிறந்த தலைமைத்துவம் எமக்கு உண்டு. தமிழ் மொழியையும் பண்பாட்டையும் நிலைபெறுத்த ஒரு நிலப்பரப்பை வரையறை செய்து அதனை மீட்டுத்தரும் பாரிய செயற்றிட்டத்தில் சீதன வன்முறை எனப் புரையோடிப் போன போலியான பண்பாட்டு நடைமுறையை வேரோடு களைந்து வெற்றி கொள்ள உலகத்தமிழ்ப் பெண்கள் எண்ணத்திலே இப்புதிய போராட்டத்தின் விதையை விதைக்க வேண்டும்**

உதவியுடன் இரகசியமாகவே வாங்கப்படுகிறது. எழுத்து ஆவணங்கள் எதுவுமின்றி முழுத்தொகையும் செலுத்தப்படும்போது பல சிக்கல்கள் ஏற்படுவதுண்டு. திருமணமான பின்பு சீதனம் தரவில்லை என்ற குற்றச்சாட்டைப் பெண்மீது சுமத்துவதற்கு இது வழிவகுப்பதாக அமைந்துள்ளது. அது பெண்ணின் மணவாழ்க்கையைச் சிதைத்தது.

சீதனத்திற்கான பரப்புரையும் திருமண விளம்பரத்திற்கூடாகச் செய்தித்தாள்களிலே நடக்கிறது. மணமகன் தேவை, மணமகள் தேவை என மகுடம் இட்டுவரும் விளம்பரங்கள் பெண்ணை விற்பனைப்பொருளாகவே அறிமுகம் செய்கின்றன. புலம்பெயர் நாடுகளில் இருந்து வெளிவரும் தமிழ்ச் செய்தித்தாள்களும் இவ்விளம்பர மரபைப் பேணுவது குறிப்பிடத்தக்கது. இந்நிலை திருமணம், குடும்ப உறவுகளுக்கு அப்பால் சீதன வளத்தைத் தேடிச் செல்வதை துல்லியமாகக் காட்டுகிறது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் இணையமும் இன்று இதில் இணைந்துள்ளது. சீதனம் என்னும் வன்முறைப் பண்பாட்டை வேகமாக வளர்க்கவும், பரப்பவும், மரபென நிலைநாட்டவும் ஊடகங்கள் முன்னிற்பது இதனால் நன்கு உணரப்படுகிறது.

20 ஆம் நூற்றாண்டில் சீதனம் பற்றிய தெளிவையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்த ஆக்க இலக்கியகாரர் சில முயற்சிகளை மேற்கொண்டதை இன்று அவர்களுடைய படைப்புகளால் உணர முடிகிறது. சிறுகதை, நாவல், நாடகம், கவிதை என்னும் இலக்கிய வடிவங்களில் சீதனக் கொடுமை எடுத்துக் காட்டப்பட்டது. மக்கள் வழக்கு மொழியிலே சீதனம் பற்றிய தெளிவூட்டும் முயற்சியாக அது இருந்தபோது சீதனத்தை ஒழிக்க முடியவில்லை. எனவே அந்த முயற்சியின் மூலம் சீதனத்தை ஒழிப்பதற்கில்லை. புதியதொரு வடிவத்தில் சீதனம் என்னும் வன்முறைக்கெதிராக களம் அமைத்துப் போராட வேண்டியுள்ளது. இப்போராட்டத்தினை யார் முன்னின்று நடத்துவது என்ற கேள்வி எழுந்துள்ளது.

தமிழ் மொழியையும், பண்பாட்டையும் நிலை பெறச் செய்ய தமிழர் வாழ்விடங்களைப் பேணிக் காக்கும் பாரிய பொறுப்பை இன்று ஏற்றுள்ளவர்களே இதனைச் செய்யக்கூடிய வல்லமை பெற்றவர்கள் என்பதில் ஐயமில்லை. குறிப்பாக பெண்போராளிகள் யாழ்ப்பாணத்துச் சமூகத்தின் பொருளற்ற தளைகளையும், விலங்குகளையும் நீக்கிக்கொண்டு சென்ற வீராங்கனைகள். இவர்களே முன்னின்று குடும்பம் என்ற அமைப்பை உருவாக்கும் பண்பானவர்களை இணைத்து இப்புதிய களப்போரைத் தொடங்கவேண்டும். யாழ்ப்பாணச் சமூகத்தின் பண்பாட்டு நிலையில் சீர்குலைவை ஏற்படுத்தவெனப் பல ஊடுருவல்கள் நடக்கின்றன. வணிகம் என்ற போர்வையிலும், அழகு என்ற கவர்ச்சியிலும் மக்களை வழிநடத்திச் செல்லும் பணியைப் பல கல்வியாளர்களே முன்னின்று ஆற்றுகின்றனர். அவர்களே சமூக அங்கீகாரத்தைச் செயல் வடிவமைத்துக் கொடுப்பவர்கள். உண்மை நிலையை நன்கு உணர்ந்திருந்தபோதும் தனிப்பட்ட ஊன்றிய நலன்களுக்காக இளம் தலைமுறையைப் பிழையாக வழிநடத்துபவர்களாகவுளர். இப்பணியில் கல்வியறிவு பெற்ற பெண்களும் இணைந்திருப்பதுதான் துன்பமான செய்தி. எனவே எதிரிகளை இனம் கண்டுகொண்ட பின்னர் காலத்தைக் கடத்துவது தகாது. போராட்டத்திற்கான முன்முயற்சிகளைச் செய்த ஒரு செயல்த்திறன் வாய்ந்த மனவுரம் கொண்ட சீதன வன்முறையை அழிக்கவேண்டும் என்ற இலக்குடைய பெண்கள் அணிதிரளவேண்டும். இந்த அணியில் நால்வகையான போர்ப்படைபோல ஒரு அமைப்பு உருவாக்க வேண்டும். காலாள், குதிரை, யானை, தேர் என்பது போல நான்கு சிறுநெறிகள் திட்டமிடப்படவேண்டும். வேகநிலையான செயற்பாட்டு நிலைக்கு இச்செல்நெறி துணைசெய்யும். நடந்து செல்வோர், குழுநிலையில் செல்வோர், ஊடகங்களோடு தொடர்பு கொண்டு செல்வோர், நேரடியாக முன்னின்று செயற்படுவோர் என நால்வகையான அமைப்புக்களை உருவாக்கி அவர்களை ஒன்றுகூட்டி களப்போரைத் திட்டமிடவேண்டும்.

இந்தப் போருக்கான களம் ஊர்ப்புறமாக அமைவதே நல்லது. நகர்ப்புறத்திலே வாழ்வோர் சீதன வன்முறைக்கு அணையாக இருப்பவர். தமது சொந்த ஊரைவிட்டு சீதனம் கொடுக்கவென நகர்ப்புறத்திலே வீடுகளைக் கட்டி வாழ்பவர் சீதனத்திற்கென வணிக நிலையங்களைப் பெருக்கி நெருக்கமாக வாழ்பவர்கள். அவர்களை உடனடியாக மாற்றிவிட முடியாது. கல்விச் செல்வம் இன்றி பொருட் செல்வத்தால் மட்டுமே சமூக மதிப்பைப் பெற்று வாழும் அவர்களைத் திசை திருப்ப ஊர்ப்புறமக்களை முன்னேற்றுவதே நன்று. பொருட்செல்வமின்றிக் கல்விச் செல்வத்தை மட்டும் தேடிய, தேடும் மனப்பாங்கு கொண்டவர்களை ஒருங்கிணைத்துச் செயற்படுவதே சிறந்தது. பாடசாலைகளில் பயிலும் இளந் தலைமுறையினரை இச்சீதன வன்முறைக்குத் துணை செய்ய முளையிலே பயிற்சி கொடுக்கப்படுவதை நீண்ட காலமாக நாம் உணரத் தவறிவிட்டோம். மருத்துவர், பொறியியலாளர் என்ற தொழில் நிலைக்கான கல்விப் பயிற்சியிலே ஆசை காட்டிப் பல இளைஞர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். பல்கலைக் கழக கல்வியே வேண்டும் என்ற நிலைக்கு அவர்களை ஆளாக்கி காலத்தை விரையமாக்கி தொழில் நுட்பக்கல்வியிலே புலனைப் போக்காவண்ணம் பல பெற்றோர் செயற்படுகின்றனர். பெற்றோரின் அடிமனதிலே உள்ள சீதன வன்முறையை உணர்ந்து கொள்ளாத மாணவர் பல்கலைக் கழகம் புகுந்தவுடன் அதனை உணர்ந்து கொள்கின்றனர். பெற்றோரின் செயற்பாட்டிற்குத் துணையாக அவர்களும் தொழிற்படுகின்றனர். இத்தகைய களத்தை வென்றெடுத்தாக வேண்டும். அதற்காக ஊர்ப்புறத்தே களவீரர்களை ஒருங்கிணைக்கவேண்டியுள்ளது.

சீதனம் பெண்களின் பிரச்சினை என்பதே பெருவழக்கு. ஆனால் சீதனத்துக்காய் தன்னுடைய முழுமுயற்சியையும் விரயம் செய்வோரும் உளர். எல்லோருக்கும் உரிய பிரச்சினையாக இன்று சீதனம் இருப்பதை இப்புதிய போராட்டத்தை நடத்துவோர் உணர்த்த வேண்டும். தமிழர் சமூகத்தைச் சீர் செய்ய இக்களப்போரை நாம் செய்யவேண்டும். தமிழ் மக்களின் இயல்பான வாழ்வியலை மீண்டும் பெற்றுத்தரவல்ல, பெற்றுத்தர வேண்டுமென்ற முனைப்புடன் செயல் திட்டங்களை வகுத்து வழிப்படுத்தும் ஒரு சிறந்த தலைமைத்துவம் எமக்கு உண்டு. தமிழ் மொழியையும் பண்பாட்டையும் நிலைபெறுத்த ஒரு நிலப்பரப்பை வரையறை செய்து அதனை மீட்டுத்தரும் பாரிய செயற்றிட்டத்தில் சீதன வன்முறை எனப் புரையோடிப் போன போலியான பண்பாட்டு நடைமுறையை வேரோடு களைந்து வெற்றி கொள்ள உலகத்தமிழ்ப் பெண்கள் எண்ணத்திலே இப்புதிய போராட்டத்தின் விதையை விதைக்க வேண்டும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சமாதானம்

மாதானத்தின் மீதான காதல்
நேசிப்பு ஆகர்சிப்பு
மற்றெல்லோரையும் விட
எனக்கதிகமுண்டு
காவலரண்களற்ற வீதியும்
கட்டுக்களற்ற வாழ்வுமே
சமாதானத்தின் இனிய
சங்கீதமென்பதறிவேன் – அதனை
மீட்டுவதற்காகவே – ஒரு
துப்பாக்கியின் குழலை
வரலாற்றின் கரங்கள்
எனக்குப் பரிசளித்துள்ளது.

தீப்பொறி

மீண்டும் உயிர்த்த நகரத்தின்
வீதிகள் அழகுற வீடுகள் அழகுற
விளம்பரப் பலகைகள் அழகுற
மனிதர்களும் புத்தழகு பொழிய
புன்னகை முகம் மலர்த்துகிறார்கள்.
சன்னங்கள் தாக்கிய நகரின்
கன்னங்களையெல்லாம்
சாந்துபூசி
வெள்ளையடித்தாயிற்று
புதுத்தளுக்கோடு நெளிந்து
நீளும் கறுத்த வீதியின்
அருகிலே அந்தக் காயம்பட்ட
மொட்டை மரத்தின் வேரில்
காவலிருந்தவன் கிறுக்கிய கவிதையும்
கிழிந்துபோன சப்பாத்தின் துண்டும்
காய்ந்துபோன
இரத்தப் பொருக்குகளும்
மீதமிருந்தன இன்றும்....

# மீளுயிர்ப்பு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தமிழர் விடுதலை வரலாற்றில் ஏப்ரல்

**பண்டா செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது:**

சிறீலங்காவின் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர். டி. பண்டாரநாயக்காவிற்கும் தமிழரசுக்கட்சித் தலைவர் தந்தை செல்வாவிற்கும் இடையில் மேற் கொள்ளப்பட்ட பண்டா- செல்வா ஒப்பந்தம் 18.04.1958 அன்று பண்டார நாயக்காவினால் கிழித்தெறியப்பட்டது.



**தந்தை செல்வா நினைவுநாள்:**

தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர், தமிழினத்தின் உரிமைகளை அகிம்சை வழிமுறை மூலம் பெற்றுவிடத் துடித்த தலைவர், கட்சிக்காகவும் இனத்திற்காகவும் அளப்பரிய தியாகங்களைச் செய்தவர் தந்தை செல்வா. அவர்களின் நினைவு நாள் 26.04.1977 அன்று ஆகும்.

**பஸ்தியாம்பிள்ளையும் அவரது அணியினரும் அழிப்பு:**

தமிழ் இளைஞர் பலரை சித்திரவதை செய்வதில் முன்னிலையில் நின்ற வரும். விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதில் தீவிர மாகச் செயற்பட்டவருமான சிறீலங்கா காவல்துறை ஆய்வாளர் பஸ்தி யாம்பிள்ளை தலைமையிலான பொலிஸ் அணியினர் முருங்கன் பகு திக்கு அருகே மடுறோட் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலி களின் முகாமொன்றை 07.04.1978 அன்று சுற்றி வளைத்தனர். மாவீரர் லெப். செல்லக்கிளி தலைமையிலான விடுதலைப் புலிகள் அணி சம யோசிதமாக பஸ்தியாம்பிள்ளை குழுவினரை மடக்கி அவர்களைத் தாக்கியழித்து அவர்களிடமிருந்து ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

**யாழ் காவல் நிலையம் தகர்ப்பு:**

நன்கு பலப்படுத்தப்பட்டிருந்த யாழ் காவல் நிலையம் கேணல் கிட்டண் ணாவின் வழிநடத்தலில் 10.04.1985 அன்று தகர்க்கப்பட்டதோடு சிங்கள இராணுவ நகர்வுகளும் தடுக்கப்பட்டு முகாம்களுக்குள் இராணுவம் முடக்கப்பட்டது.

**திம்புப் பேச்சுவார்த்தை :**

சிறீலங்கா அரசாங்கத்திற்கும் தமிழர் தரப்பிற்கும் இடையே பூட்டானின் தலைநகர் திம்புவில் இந்திய அரசின் அனுசரணையுடன் 10.04.1985 அன்று பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது, சிறீலங்காவின் நயவஞ்சகத் தால் இப்பேச்சுவார்த்தை முயற்சி குழம்பியது.

**மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பம்:**


சமாதான முயற்சிகள் எப்பயனுமற்று தொடர்ந்த வேளை சந்திரிகா அர சுடன் செய்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக தேசியத் தலைவர் அவர்கள் அறிவித்த 19.04.1995 அன்று விடுதலைப் புலிகளின் கடற் கரும்புலிகளால் முதலாவது தாக்குதல் திருமலைத் துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது சிறீலங்காக் கடற்படையின் சங்காய் வகையைச் சேர்ந்த இரு பீரங்கிக் கப்பல்கள் அழிக்கப்பட்டன, இதன் பின் மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானது.

**'சூரியக்கதிர்—02' இராணுவ நடவடிக்கை:**

தமிழ் மக்களைக் கொன்றொழித்து, சொத்துக்களை நாசமாக்கி, இலட் சக்கணக்கான தமிழ் மக்களை அகதிகளாக்கிய 'சூரியக்கதிர்-02' எனும் குறியீட்டுப்பெயர் கொண்ட இராணுவ நடவடிக்கையை 19.04.1996 அன்று சிறீலங்கா அரசபடைகள் ஆரம்பித்தன.

**அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன:**

தமிழீழ விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு அணியினரால் 28.04.1995 அன்று அவ்ரோ விமானம் பலாலித் தளத்தினுள் சுட்டு வீழ்த் தப்பட்டது. வான்படையின் உயர் அதிகாரிகள் உட்பட 40 படையினர் கொல்லப்பட்டனர். 29.04.1995 அன்று இன்னொரு அவ்ரோ விமானம் நவக்கிரியில் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதில் பயணம் செய்த 50 வரையான படையினர் கொல்லப்பட்டனர்.



**அன்னை பூபதி நினைவு நாள்:**

ஒரு இனத்தின் அரசியல் சுபீட்சத்திற்காக, ஆக்கிர மிப்பு நாட்டிற் கெதிராக உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தி உயிர்நீத்த உலகின் முதற் பெண்மணி அன்னை பூபதி, 19.03.1988 முதல் 19.04.1988 வரையி லான ஒருமாத உண்ணாவிரதப் போராட்டத்தின்பின் தமிழர் விடிவிற்காக தன்னை அர்ப்பணித்தார். அவரின் நினைவுநாள் 19.04.1988 அன்று ஆகும்.



**வரலாற்றுப் புகழ்மிக்க ஆனையிறவுப் பெருந்தள அழிப்பு:**

தமிழீழ தேசத்தில் 240 வருட காலமாக அடிமைச் சின்னமாக விளங்கிய ஆனையிறவுப் பெருந்தளம் தமிழீழத் தேசியத் தலைவரின் வழிநடத் தலில் ஓயாத அலைகள் -3 படையணிகளால் 22.04.2000 அன்று அழிக் கப்பட்டது. 240சதுரக் கிலோ மீற்றரில் பரந்திருந்ததும், 15000 இராணு வத்தினரைக் கொண்டிருந்ததும், யாழ் -குடாநாட்டின் வாசலில் பெரும் தடைக்கல்லாக இருந்ததுமான இப்படைத்தளம் மீட்கப்பட்டதானது தமிழர்களின் விடுதலை வரலாற்றில் வெற்றியின் ஒரு மைல்கல்லாகும் 1000த்திற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்ட இப் பெருந்தளத் தாக்குதலில் வெற்றிக்கு வித்தாக 35 போராளிகள் வீரச்சாவடைந்து வீர காவியம் படைத்தனர்.

**பிரதான யாழ் கண்டி வீதி (ஏ 9) திறப்பு உணர்வுபூர்வமான நிகழ்வு**

ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக மக்கள் பயணம் செய்ய முடியாதபடி சிங்களப்படையினரால் மூடப்பட்டுக் கிடந்த ஏ 9 எனப்படும் பிரதான யாழ் - கண்டி வீதி அதிகாரபூர்வமாக 08.04.2002 அன்று திறந்து வைக்கப்பட்டது. இப்பாதை திறந்து வைக்கப்பட்ட அதேவேளை யாழ் குடாநாட்டில். அரசியல் பணிகளை மேற்கொள்வதற்கெனச் சென்ற 15 விடுதலைப் புலிகளை பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு மகிழ்ச்சி ஆரவாரங்களுடன் தூக்கி அழைத்துச் சென்றனர்.



**கிளிநொச்சியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாளர் மாநாடு:**

சுமார் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப்பின் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வே.பிரபாகரன் அவர்கள் நடத்திய செய்தியாளர் மாநாட்டிற்கு உலகத்தின் பல பகுதிகளின் பிரபல செய்தி ஊடகங்களின் செய்தி யாளர்கள் மிகுந்த ஆவலுடன் வன்னி சென்று கலந்து கொண்டனர். எழுநூறிற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கலந்துகொண்ட இம் மாநாடு மிகச்சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டு நேர்த்தியான முறையில் வெற்றிகரமாக நடைபெற்றது. 10.04.2002 அன்று இம் மாநாடு நடை பெற்றது.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



### 04.02.2004



சிறீலங்காவின் 56வது சுதந்திரநாள் 04.02.2004 அன்றாகும், தமிழர் தாயகப்
பகுதிகளில் முழுமையாக துக்கநாள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பா
ணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை
என, அனைத்து மாவட்டங்களிலும், அன்று பொதுமக்களால் துக்கநாள்
கடைப்பிடிக்கப்பட்டது. எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்ட
துடன், சிங்களப்படையினரின் பாதுகாப்புடன் ஏற்றப்பட்ட சிறீலங்காவின்
தேசியக் கொடிகள், பொதுமக்களால், அகற்றி எரிக்கப்பட்டு, கிழிக்கப்
பட்டன.

### 04.02.2004



வலிகாமம் வடக்கு மற்றும் தென்மராட்சி தெற்கு பிரதேச செயலகங்களின்
முன்னால், தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்க
வேண்டும் என வலியுறுத்தி, பொதுமக்கள் சாகும் வரையிலான உண்
ணாவிரதப் போராட்டத்தை 04.02.2004 அன்று ஆரம்பித்திருந்தனர். இவர்
களிற்கு ஆதரவாக, ஆயிரக்கணக்கான மக்கள் மறியல் போராட்டத்திலும்
ஈடுபட்டனர்.

### 07.02.2004

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வைகோ
அவர்கள், 07.02.2004 அன்று, பிணையில் விடுதலையாகியுள்ளார். விடு
தலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார் என்ற குற்றச்சாட்டின் பேரில்,
பொடாச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, கடந்த 18 மாதகாலமாக
சிறைவைக்கப்பட்டிருந்த வைகோ அவர்கள், வேலூர் சிறையில் இருந்து
பிணையில் விடுதலையாகியுள்ளார்.

### 07.02.2004



சிறீலங்காவின் நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட
டது. சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா வர்த்தமானி
அறிவித்தல் மூலம், 07.02.2004 அன்றிரவு, பாராளு
மன்றக் கலைப்பை அறிவித்தார். புதிய நாடாளு
மன்றத்திற்கான தேர்தல் ஏப்பிரல் மாதம் 2ம் நாள்
நடைபெறவுள்ளது. இத்தேர்தல் மூலம் தெரிவாகும்
நாடாளுமன்றம் ஏப்பிரல் 22ம் நாள் கூடும்.

### 11.02.2004

11.02.2004 அன்று வடமராட்சிப் பகுதியில், சிங்களப் பொலிஸார் சுட்டதில்
பொதுமகன் ஒருவர் பலியாகியுள்ளார்.

### 17.02.2004

17.02.2004 அன்று வாசிங்டனில் கூடிய கொடையாளி நாடுகள், சிறீலங்கா
சனாதிபதியும், பிரதமரும் இணைந்து செயற்படாமல் விட்டமை குறித்து
தமது கடுமையான அதிருப்தியை வெளியிட்டுள்ளன. அத்துடன், விடு
தலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்
படவேண்டும் எனவும் அவை வலியுறுத்தியுள்ளன.
விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை சிறீலங்கா
அரசு விரைவில் ஆரம்பிக்கவேண்டும் என, அமெரிக்கா, யப்பான், ஐரோப்
பிய ஒன்றியம், நோர்வே ஆகிய நாடுகள், கூட்டாக வெளியிட்ட கூட்டறிக்கை
ஒன்றின் மூலம் கடுமையாக வலியுறுத்தியுள்ளன.

### 20.02.2004



தமிழீழ விடுதலைப் புலிகளின், மற்றுமொரு படைப்பிரிவாக, மோட்டார்
சைக்கிள் படையணி உருவாக்கப்பட்டுள்ளது. இப்படையணி, தனது
விசேட பயிற்சியை முடித்துக்கொண்ட நிறைவுநாள் நிகழ்வு 20.02.2004
அன்று வன்னியில் இடம்பெற்றது. தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள்
இந்நிகழ்வில் கலந்து கொண்டு, இப்படையணியின் அணிவகுப்பு மரி
யாதையை ஏற்றுக்கொண்டார். இந்நிகழ்வில், மோட்டார் சைக்கிள் படை
யணியின் சாகச விளையாட்டுக்களும் இடம்பெற்றன.

### 22.02.2004

விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையே கைச்சாத்தி
டப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் 22.02.2004 அன்றுடன், இரண்டாவது
ஆண்டைப் பூர்த்திசெய்துள்ளது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்
மக்களிற்கான இயல்பு வாழ்க்கையை இன்னமும் தோற்றுவிக்கத் தவறி
யுள்ளது என தமிழர் தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அதேவேளை, இப்
புரிந்துணர்வு ஒப்பந்தத்தால், சிங்கள மக்களுக்கு ஏற்பட்டுள்ள நன்
மைகள் குறித்து, சிங்களமக்களுக்கு விளக்கமளித்து, பாராளுமன்றத்
தேர்தலுக்கான பிரச்சாரத்தில், ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான
ஐக்கிய தேசியக் கட்சி இறங்கியுள்ளது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



### தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு:

தமிழ் தேசியக் கூட்டமைப்பு, 01.03.2004 அன்று, தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது. தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றை வலியுறுத்தியும், அதன் அடிப்படையில், தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் சிறீலங்கா அரசு பேச்சுவார்த்தையை மேற்கொள்ளவேண்டும் எனவும் வலியுறுத்தும் தேர்தல் விஞ்ஞாபனம், இடைக்கால தன்னாட்சி அதிகார சபை, உடன் வழங்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்துகின்றது.

### ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் சுட்டுக்கொல்லப்பட்டார்:

மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை, 01.03.2004 அன்று காலை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். ஏற்கனவே ஆரையம்பதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து அவர் தாக்கப்பட்டிருந்தார். காயமடைந்த இவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். 01.03.2004 அன்று காலை, பார்வையாளர்கள் போல் வைத்தியசாலைக்குச் சென்ற இருவர், அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

### மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிப்பு:

யாழ் குடாநாட்டில், அரியாலை, நாயன்மார்கட்டு வீதிக்கு அருகாமையில், செம்மணிக்கு அருகாமையில், இரண்டு மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்ற நிறுவனம் ஒன்றின் ஊழியர்களே இவ் எலும்புக்கூட்டு எச்சங்களை கண்டனர்.



### தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து, மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத் தளபதியாக இருந்த கருணா, நீக்கப்பட்டார்:

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து, மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத் தளபதியாக இருந்த கருணா, நீக்கப்பட்டுள்ளார் என, விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் 06.03.2004 அன்று அறிவித்தது. இது குறித்து, அன்று கிளிநொச்சியில் செய்தியாளர் மாநாட்டில் அறிவிக்கப்பட்டதுடன், இது தொடர்பான செய்தி அறிக்கை ஒன்றையும் தலைமைப்பீடம் வெளியிட்டுள்ளது.

அன்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில், தமிழீழ அரசி துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மட்டக்களப்பு அம்பா மாவட்ட விசேட தளபதி ரமேஸ், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தள ராம், மட்டு அம்பாறை மாவட்ட துணைத் தளபதி பிரபா, மட்டு-அம்பா மாவட்ட புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் ரமணன், மட்டக்கள அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் அ யோர் கலந்துகொண்டனர்.

'தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு விரோதமான சில தீயச களின் தூண்டுதலின்பேரில், மட்டு-அம்பாறைத் தளபதியாக இரு கருணா அவர்கள், தனியாகப் பிரிந்துசெல்ல முற்பட்டுள்ளார். இ அப்பட்டமான துரோகத்தனத்தை ஏற்றுக்கொள்ளாது, அவரின் கீழிரு தளபதிகளும், பொறுப்பாளர்களும், போராளிகளும் அவரது கட்டளைச் கீழ்ப்படிய மறுத்ததோடு, தமிழீழ தேசியத் தலைமையைச் சந்தித் அங்குள்ள உண்மை நிலையைத் தெளிவுபடுத்தியுள்ளார்கள். இ கமைய, கருணா அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பி இருந்தும், அவரது பொறுப்பில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

மட்டு அம்பாறை மாவட்ட விசேட தளபதியாக ரமேஸ் அவர்களு தளபதியாக ராம் அவர்களும், துணைத்தளபதியாக பிரபா அவர்களு அரசியல்துறைப் பொறுப்பாளராக கௌசல்யன் அவர்களும் தமிழீழ தே யத் தலைமையால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.' இவ்வாறு தலைமை பீடத்தின் முடிவை அறிவித்த சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள், இவர்க தமது பொறுப்புக்களை ஏற்று எமது அமைப்பின் அதிகாரபூர்வ பிரதிநி களாகச் செயற்படுவார்கள் என்பதை அறியத்தருகின்றேன் எனவும் அ வித்தார்.



### கருணாவின் துரோகத்தனத்துக்கு கண்டனம்:

கருணாவின் துரோகத்தனத்தால் மட்டு-அம்பாறைக்கு ஏற்பட்ட களங்கத் தைத் துடைத்து தமிழ்த் தேசிய விசுவாசத்தை அம்மக்கள் நிருபிப்பர் என விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்திய மூத்த உறுப்பினரும், மட டக்களப்பு அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாள ருமான கரிகாலன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இருந்து, வன்னிசென்று, அங்குள்ள நிலைமைகள் குறித் தும், போராளிகள் மக்களின் எண்ணங்கள் குறித்தும் தேசியத் தலைவ ருக்குத் தெரியப்படுத்திய கரிகாலன் அவர்கள், 07.03.2004 அன்று செய்தி யாளர்களிடம் விரிவாகப் பேசினார்.

தளபதிகளினதோ, போராளிகளினதோ ஆலோசனைகளையோ கருத்துச் களையோ கேட்காமல், கருணா என்ற தனிமனிதன் தனித்து எடுத்த முடிவ எனத் தெரிவித்த கரிகாலன் அவர்கள், எங்களுடைய ஆலோசனைகளை கேட்காது புறக்கணித்து, தலைவரது கட்டளைகளை நிறைவேற்ற விரும் பாது தானே ஒரு குழப்பமான முடிவை எடுப்பதற்கு பின்னணியில் நின்ற ஏதோ ஒரு சக்தி செயற்படுவதாக அனுமானிக்கின்றோம் எனவும் தெரி வித்துள்ளார்.

### சர்வதேச மகளிர்நாள்:

சர்வதேச மகளிர்நாள் நிகழ்வுகள், 08.03.2004 அன்று, தாயகம் தழுவிய ரீதியில், மிகவும் பேரெழுச்சியுடன் நடைபெற்றுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவினரும், அரசசார்பற்ற நிறுவனங்களும், மகளிர் அமைப்புக்களும் இணைந்து இந்நிகழ்வுகளை ஒழுங்குசெய்து நடத்தியுள்ளன. யாழ்ப்பாணத்தில், நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு, உரையாற்றிய தமிழீழ மகளிர் அரசியல்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



துறைப் பொறுப்பாளர் தமிழினி, தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் ஆற்றுப்படுத்தலினால் தமிழீழப் பெண்கள் உலகமே வியந்துநோக்கும் வல்லமையைப் பெற்றிருக்கின்றார்கள் எனத் தெரிவித்தார்.

தமிழீழப் பெண்களின் போரியல், அரசியல், சமூகவியல் ரீதியான விழிப்பு ணர்வையும், ஆற்றலையும் சர்வதேசமே வியந்து நோக்குகின்றது எனத் தெரிவித்த தமிழினி, இதற்குக் காரணம் பெண்ணினம் விடுதலை பெற வேண்டும் என்பதற்காக தேசியத்தலைவர் அவர்கள் சகல துறைகளிலும் பெண்களை வளர்த்தெடுத்ததே எனத் தெரிவித்தார்.



**'வடக்கு கிழக்கு எனப் பிரிக்க நினைப்பதை ஏற்கமுடியாது' திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு:**

நோர்வேயின் சமாதானத்துக்கான சிறப்புத் தூதுவர் எரிக் சுல்கைம் அவர்கள், 12.03.2004 அன்று திருகோணமலை சென்று, விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இச்சந்திப்பு, திருகோணமலை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பணி மனையில் இடம்பெற்றது. தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் தலைமையின் கீழ் தாமும் மக்களும் உறுதியுடன் இருப்ப தாகவும், தமிழீழ தாயகத்தை, வடக்கு கிழக்கு எனப் பிரிக்க நினைப்பதை ஏற்கமுடியாது எனவும் எரிக்சுல்கைமிடம் திலக் எடுத்துரைத்துள்ளார்.

**சிறீலங்காப் படையினர் தமக்குள் சுடுபட்டுக்கொண்டதில், ஒரு இராணுவச் சிப்பாய் பலி:**

13.03.2004 அன்று இரவு, யாழ்ப்பாணத்தில், சிறீலங்காப் படையினர் தமக் குள் சுடுபட்டுக்கொண்டதில், ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட் டுள்ளார். சுட்டுக்கொன்ற சிப்பாய், ஆயுதத்துடன் தலைமறைவாகியுள் ளார். யாழ்ப்பாணத்தில், கோவில் வீதி மற்றும் வைத்தியசாலை வீதி ஆகியன சந்திக்கும் சந்தியில் அமைந்திருந்த காவலரணிலேயே இச்சம் பவம் இடம்பெற்றுள்ளது.

**நாட்டுப்பற்றாளர்கள் இருவர் சாவடைந்துள்ளனர்:**

13.03.2004 அன்று, கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில், நாட்டுப்பற்றாளர்கள் இருவர் சாவடைந்துள்ளனர். யாழ் அரசடிவீதியைச் சேர்ந்தவரும், கரடிப்போக்கில் தற்காலிகமாக வசித்து வந்தவருமான கந்தசாமி ஸ்வரச்சந்திரன், யாழ். நாவற்குழியை சொந்த இடமாகவும் புதுக்குடியிருப்பில் தற்காலிகமாக வசித்துவந்தவருமான பொன்னையா சிறீதரன் ஆகிய இரு நாட்டுப்பற்றாளர்களே சாவடைந் துள்ளனர்.

**ஐ. நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 60வது கூட்டத்தொடருக்கு, தமிழர் மனித உரிமைகள் மையம், சிறீலங்காவின் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக, ஆவணம் ஒன்றைக் கையளித்தது:**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 60வது கூட்டத் தொடருக்கு, தமிழர் மனித உரிமைகள் மையம், சிறீலங்காவின் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக, ஆவணம் ஒன்றைக் கையளித்துள்ளது. சிறீலங்காவில் மனித உரிமை நிலையில், முன்னேற்றம் எதுவும் ஏற்பட வில்லை எனக்குற்றஞ்சாட்டும், தமிழர் மனித உரிமை மையம், புரிந்து ணர்வு ஒப்பந்த விதிகளை மீறி, படையினர் பொதுமக்களின் மீள்குடி யேற்றங்களைத் தடுக்கின்றனர் எனவும், மதவழிபாட்டுத் தலங்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருவதனையும் சுட்டிக்காட்டியுள்ளது.



**"கருணாவினால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சினை, புலிகள் அமைப்பைப் பொறுத்த வரை பெரும் அரசியல் இராணுவ நெருக்கடியல்ல" அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு:**

கருணாவினால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சினை, விடுதலைப் புலிகள் அமைப்பைப் பொறுத்தவரை பெரும் அரசியல் இராணுவ நெருக்கடியல்ல என, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ் கார்டியன் பத்திரிகைக்கு, கருணா விவகாரம் குறித்து வழங்கிய நீண்ட செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எமது அமைப்பைப் பொறுத்தவரை, இப்படியான துரோகங்கள், காட்டிக்கொடுப்புக்கள், நம்பிக்கைத் துரோகங்கள் என்பனவற்றை, கடந்த காலங்களில் சந்தித்திருக்கின்றது எனத் தெரிவித்த அவர், கருணாவின் பிரச்சினை ஒரு புதிய காட்சியல்ல எனத் தெரிவித்தார். இப்பிரச்சினை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தேசியத் தலைவர் அவர்கள், இது விடயத்தில் நிதானமாகச் செயற் படுகின்றார். மோதல்களை உண்டுபண்ணக்கூடிய சூழ்நிலைகளைத் தவிர்க்கும் முகமாகத் தலைவர் அவர்கள் செயற்பட்டுவருகின்றார். மோதல்கள், இரத்தக்களரி இன்றி இதனை முடிவுக்குக் கொண்டுவர விடுதலைப் புலிகள் வியூகம் அமைத்திருப்பதாகக் குறிப்பிட்ட திரு. பால சிங்கம் அவர்கள், கருணாவின் கிளர்ச்சி, தற்காலிகமானது எனவும், விரை வில் முடிவுக்குக் கொண்டுவரப்படும் எனவும் உறுதிபடத் தெரிவித் துள்ளார்.

தேசியத் தலைவர் அவர்கள், சாதி, இன, மத, வகுப்புவாத, பிரதேச வாத பிரிவுகள் எதனையும் உள்வாங்கிக்கொள்ளாதவர் எனவும், தமிழ்ச் சமூகப் பிரிவினை உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட ஒருவரே தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் எனவும் தெரிவித்த திரு. பாலசிங்கம் அவர் கள், இதனைத் தமிழ் மக்கள் அனைவரும் நன்கு அறிவர் எனவும் தெரிவித்தார்.


www.tamileelamarchive.com





தமிழீழ ஆவணக் காப்பகம்

**அன்னை பூபதியின் 16ம் ஆண்டு நினைவெழுச்சியின், ஆரம்பநாள் நிகழ்வுகள்:**

அன்னை பூபதியின் 16ம் ஆண்டு நினைவெழுச்சியின், ஆரம்பநாள் நிகழ்வுகள், 19.03.2004 அன்று தாயகம் தழுவிய ரீதியில், உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகின. தமிழீழத் தாயகமெங்கும் அன்னையின் நினைவுநாளை முன்னிட்டு, நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு, அன்னையின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

உடையார்கட்டில் அமைந்துள்ள, மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மாவீரர்களுக்கான மூங்கிலாறு மாவீரர் துயிலும் இல்லத்தில், அன்று சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தொடர்பகப் பொறுப்பாளர் ஐங்கரன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஜெயந்தன் படையணியின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் சிவகுமார் ஈகைச் சுடரினை ஏற்றிவைத்தார். ஜெயந்தன் படையணியின் நிர்வாகப் பொறுப்பாளர் எழுநிலவன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

மாவீரரின் தாயார், சரஸ்வதி அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்தார்.

போராளிகள் பொதுமக்கள் எனப் பெருமளவிலானோர் கலந்துகொண்ட இந்நிகழ்வில், ஜெயந்தன் படையணிப் போராளிகளும் கலந்துகொண்டனர்.

**சுகயீனம் காரணமாக போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்:**

18.03.2004 அன்று, சுகயீனம் காரணமாக போராளி ஒருவர் சாவடைந்துள்ளார். மேஜர் மோகன் என்று அழைக்கப்படும், காந்திவீதி கொக்குவில் மேற்கு யாழ்ப்பாணத்தை, சொந்த முகவரியாகவும், யூனியன்குளம் சந்தி அக்கராயன் கிளிநொச்சியை தற்போதைய முகவரியாகவும் கொண்டிருந்த அருள்ராசா ஜெசிக்குமார் என்ற போராளியே சாவடைந்தவராவார்.



**உலக வங்கியின் பிரதிநிதி, நோர்வேத் தூதுவர், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சந்திப்பு:**

இலங்கைக்கான உலக வங்கியின் பிரதிநிதி பீற்றர் கெரால்ட் அவர்களும், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் கான்ஸ் பிராஸ்கர் அவர்களும் 23.03.2004 அன்று கிளிநொச்சி சென்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.


கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவகப் பணியகத்தில், இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. அன்றைய சந்திப்புக் குறித்து நோர்வேத் தூதுவர் கான்ஸ் பிராஸ்கார் கருத்துத் தெரிவிக்கையில், இன்று பல விடயங்கள் ஆராயப்பட்டதாகவும், இது குறித்து, தாம் கொழும்பு சென்று ஆராய்ந்தபின் மீண்டும் வன்னி வந்து மீண்டும் பேச்சுக்கள் நடத்தப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

**மட்டக்களப்பு அம்பாறையின் தற்போதைய நெருக்கடி தொடர்பாக, அங்குள்ள போராளிகளுக்கும், பொறுப்பாளர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் முக்கிய வேண்டுகோள்:**

மட்டக்களப்பு அம்பாறையின் தற்போதைய நெருக்கடி தொடர்பாக, அங்குள்ள போராளிகளுக்கும், பொறுப்பாளர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது. நமது மண்ணின் பெருமைக்கும் மாவீரர்களுக்கும் களங்கத்தை ஏற்படுத்தியிருக்கும் கருணாவின் நடவடிக்கைகள் தொடர்பாக, நீங்கள் உண்மைகளைப் புரிந்துகொண்டு, சரியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது என, மட்டு -அம்பாறை மாவட்ட போராளிகள் பொறுப்பாளர்களை இவ்வறிவித்தல் வாயிலாக தலைமைப்பீடம் கேட்டுக்கொண்டுள்ளது.

மட்டக்களப்பு அம்பாறை மண்ணின் வீரவரலாறு, கருணாவால் கறைபடிந்து நிற்கலாகாது. எமது மண்ணின் மாவீரமும் அர்ப்பணிப்பும் உழைப்பும் தலைநிமிர்ந்து நிற்கும் வகையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம். எனவும் அவ்வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






**பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல்:**

25.03.2004 அன்று, யாழ்ப்பாணத்தில், யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மீது, ஈ.பி.டி.பி. கூலிக்குழுவினர் தாக்குதல் நடத்தினர். இதன்போது, பல்கலைக்கழக மாணவர் அமைப்புத் தலைவர் பகீரதன், மற்றும் புவிராஜ் என்ற மாணவர் ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இச்சம்பவத்தைக் கண்டித்து, யாழ்ப் பல்கலைக்கழக மாணவர்கள், வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். இதனையடுத்து, பொலிசாருக்கும், மாணவர்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது. பொலிசார் கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசி, தாக்கினர்; பதிலுக்கு மாணவர்களும் பொலிஸார் மீது கற்கள் கொண்டு தாக்கினார்கள். இதன்போது பொலிஸ் வாகனம் ஒன்று சேதமடைந்தது. சில மாணவர்களை, சிங்களப் பொலிஸார் கைதுசெய்து தடுத்துவைத்துள்ளனர்.



www.tamileelamarchive.com


தமிழீழ ஆவணக் காப்பகம்



இராவணன் வெட்டு - திருகோணமலை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




www.tamileelamarchive.com